www.padippakam.com

மக்களும் இடங்களும்
பெர்லின் : ஒரு
காலத்துத் தீவு

கோளம் :
பாரம்பரிய உலகை
உலுக்கும் கக்காடு
விவகாரம்

தொடர்புகள் :
கடைசிக் கட்டத்தில்
ஒளிப்பட இதழியல்?

நேர்முகம் :
மானுவல் காஸ்
டெல்ஸ் :குடிகளுடன்
போட்டியிடும் எந்திரம்

# யுனெஸ்கோ கூரியர்



டிசம்பர், 1999 ரூ.7/=

# இளைஞரைப் பலிகொள்ளும் ஏமக்குறை நோய்



படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்

**DECEMBER - டிசம்பர் - 1999**

## மக்களும் இடங்களும்

5 பெர்லின்: ஒருகாலத்துத் தீவு — ஒளிப்படங்கள் : உட்டே மாஹ்லர்; விளக்கவுரை : தியரி புரூஹல்

## தலையங்கம்

11 புதிய உலகின் நான்கு அறைகூவல்கள் — ஃபெடரிக்கோ மயூர்

## கோளம்

12 பாரம்பரிய உலகை உலுக்கும் கக்காடு விவகாரம் — சோஃபி புக்காரி

## கல்வி உலகம்

16 மகளிர் எழுத்தறிவு: அரிச்சுவடியைத் திருத்துதல் — அன்னா ராபின்சன் - பான்ட்

19 கவனம்



### இளைஞரைப் பலிகொள்ளும் ஏமக்குறை நோய்

எச்ஐவி/ஏமக்குறை (எய்ட்ஸ்) நோய் தெற்கு நாடுகளில்- முக்கியமாக, சகாராவையொட்டிய ஆஃப்ரிக்காவில்- கொள்ளை நோயாகப் பரவி வருகிறது. இந்நோய் புதிதாகப் பீடிக்கப்படுபவர்களில் பாதிப்பேர் 15-24 வயதுப் பிரிவைச் சேர்ந்தவர்கள். பல புதிய அணுகுமுறைகள் பயனளித்து வருகின்றன. இவற்றைப் பயன்படுத்துவதற்கு எல்லா நிலைகளிலும் அதிகாரிகளின் ஆதரவு தேவைப்படுகிறது.

விரிவான பொருளடக்கம்: பக்.17

## அறிவியல்

39 மரணதண்டனையை ஒழிக்க ஆதரவு பெருகுகிறது — மார்ட்டின் ஜேக்காட்
41 அமெரிக்காவின் விதிவிலக்கு — விக்கி எலியட்

## காலத்தின் சின்னங்கள்

42 நவீன நடனத்தின் உருக்குக் குகை — ஜீன் - மார்க் அடோல்ப் மற்றும் மார்ட்டின் ஜேக்கட்

## தொடர்புகள்

45 கடைசிக் கட்டத்தில் ஒளிப்பட இதழியல்? — எட்கார் ரோஸ்கிஸ்

## உரையாடல்

48 மானுவல் காஸ்டெல்ஸ்: குடிகளுடன் போரிடும் எந்திரம்

அட்டை; ©யுனெஸ்கோ/டெல்லம்

தமிழ்ப்பதிப்பு ஆசிரியர்: **மணவை முஸ்தபா**

யுனெஸ்கோ கூரியர்

ஆசிரியத் தலைமையகம் :
1, ரூய் பிரான்காய்ஸ் பொன்வின்
5015, பாரிஸ், பிரான்ஸ்.

**இயக்குநர் :** ரேனே லேஃபோர்ட்

**தலைமை இதழாசிரியர் :** ஜான் கோஹுல்

**ஆசிரியர் குழு (பாரிஸ்)**
ஆங்கிலம் : ரோய் மால்கின்
ஸ்பானிஸ் : ஆர்செலி ஓர்டிஸ் தெ அர்பினா
ஃபிரெஞ்சு : மார்ட்டினே ஜாகோத்

எத்திராஜன் அன்பரசன்
சோஃபி புகாரி
லூசியா இக்னேசியஸ் குன்ட்ஸ்
ஜென லெசியர்
அமி ஆட்செட்
ஜஸ்மினா சோப்போவா

**தலைமையகத்திற்கு அப்பாலுள்ள பதிப்புகள் :**
ரஷ்யன் : இரினா உத்கினா (மாஸ்கோ)
ஜெர்மன் : உர்ஸ் அரேகர் (பெர்ன்)
அராபிக் : ஃபவ்சி அப்துல் ஜாஹர் (கெய்ரோ)
இத்தாலியன் : ஜியானுல்கா ஃபார்மிச்சி சியரா மியோசி (ஃப்ளாரன்ஸ்)
ஹிந்தி : சிறீ சமாய் சிங் (டெல்லி)
தமிழ் : மணவை முஸ்தபா (சென்னை)
பெர்சியன் : ஜலீல் ஜாகி (டெஹ்ரான்)
போர்த்துக்கீஸ் : அல்ஜிரா ஆல்வெஸ் அப்ரே (ரியோ டி ஜெனீரோ)
உருது : மிர்ஸா முஹம்மத் முஷீர் (இஸ்லாமாபாத்)
காட்டலான் : ஜோர்டிஃபோல்க் (பார்சிலோனா)
மலாய் : சிதின் அஹமத் இஸாக் (கோலாலம்பூர்
சுவாஹிலி : லியோனார்டு ஜே. சுமா (தார்-எஸ் ஸலாம்)
ஸ்லோவன் : அலெக்சாண்ட்ரா கோம்ஹாசர் (ஜுபிஜானா)
சீனம் : ஃபெங் மிங்க்ஷியா (பெய்ஜிங்)
பல்கேரியன் : லுபா ரஞ்சேவா (சோஃபியா)
கிரீக் : சோஃபி கோஸ்டோபோலோஸ் (ஏதென்ஸ்)
சிங்களம் : நெவேலி பயாடிக்மா (கொழும்பு
ஃபின்னிஷ் : ரீட்டா சாரினென் (ஹெல்சிங்கி)
பாஸ்க் : ஜுக்ஸ்டோ எகனா (டொனாஸ்டியா)
தாய் : சுசித்ரா சித்ரனுக்கோ (பாங்காக்)
வியத்னாமீஸ் : ஹோ தியன் நிகி (ஹனாய்)
வங்க மொழி : காஃபில் உத்தீன் அஹ்மத் (டாக்கா
உக்ரேனியன் : வோளாடிமீர் வாசிலுக் (கீவ்)
காலிசியன் : சபீர் செனின் ஃபெர்னாண்டஸ் (சாண்டியாகோ டி கம்போஸ்டெலா)
செர்பியன் : போரிஸ் இலியங்கோ (பெல்கிரேட்

**எல்லாக் கடிதங்களும் தலைமை ஆசிரியர்க்கே எழுதப்படவேண்டும்.**

யுனெஸ்கோ கூரியர் - மாதந்தோறும் வெவ யிடப்படுகிறது. பதிப்புரிமை அல்லாத தனிட பட்ட படங்களையும் கட்டுரைகளையுப் 'யுனெஸ்கோ கூரிய'ரிலிருந்து எடுத்துப் பிரசுரிக கப்பட்டது என்ற அறிவிப்புடன் இதழ் தேதி யைக் குறிப்பிட்டு வெளியிடலாம். அவ்வாற வெளியிட்ட இதழின் மூன்று பிரதிகள் ஆசிரியருக்கு அனுப்ப வேண்டும். ஆசிரிய பெயருடன் கூடிய கட்டுரைகளைத் திரும்பட் பிரசுரிக்கும்போது அதில் ஆசிரியர் பெய இடம்பெறவேண்டும். பதிப்புரிமை அல்லாத புகைப்படங்கள் வேண்டுவோர் தலைமை யாசிரியருக்கு எழுதிப் பெறலாம். கேட்டுட் பெறாத கட்டுரைகளைப் போதிய தபால்தலை இல்லாமல் திருப்பியனுப்ப இயலாது. ஆசிரி யர் பெயருடன் கூடிய கட்டுரை அவரது கருத்தை வெளியிடுவதாகும். யுனெஸ்கோ கூரியர் ஆசிரியர்களின் கருத்தைப் பிரதிபலிக்க வேண்டிய அவசியம் இல்லை

www.padippakam.com


# யுனெஸ்கோ கூரியர்

★ தமிழ் உட்பட 30 உலக மொழிகளில் வெளிவந்து அரிய புரட்சி செய்து வரும், ஒரே சர்வதேச மாத இதழாக திங்கள்தோறும் மலர்கிறது.

★ சர்வதேசக் கண்ணோட்டத்துடன் அறிவியல், பொருளாதாரம், கல்வி, கலை, பண்பாடு, தொழில்நுட்பம் போன்ற பல்வேறு துறைகளைப் பற்றி உலக அறிஞர்கள் எழுதும் கருத்துக் களஞ்சியமான ஆய்வுக் கட்டுரைகள்.

★ எல்லா வயதினருக்கும் ஏற்ற, ஆவலைத் தூண்டும் அரிய செய்திகள், படங்கள், விளக்கங்கள், வண்ணப் படைப்புகள் இதழ்தோறும்.

★ தமிழின் தனிப்பெரும் ஆற்றலைத் தரணிக்குணர்த்தி, 'தமிழ் ஓர் அறிவியல் மொழி' என்பதை செயல்பூர்வமாக நிலைநாட்டி, அதன் வளர்ச்சிக்கு வழிகாட்டும் காலக்கண்ணாடி.

★ சர்வதேசக் கண்ணோட்டத்தில் உலகைக் காட்டும் பலகணியாக தமிழில் வெளிவந்து கொண்டிருக்கும் இவ்விதழ் இல்லந்தோறும் இடம்பெற வேண்டிய சிந்தனைக் கருவூலம் ஆகும்.

★ புதிய வடிவமைப்பில் உலகப் பேரறிஞர்கள் ; கல்வியாளர்கள் ; எழுத்தாளர்கள் ; பண்பாட்டு வல்லுநர்கள் ; அறிவியலறிஞர்கள் ஆகியோரின் நேர்காணல் (பேட்டி) கட்டுரைகளோடு 56 பக்கங்களில் மாதந்தோறும் மலர்கிறது.

இதழின் விலை ரூ. - 7/-

தனிப்பட்டவர்களுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 74/-

கல்வி நிலையங்களுக்கும் நூலகங்களுக்கும் சலுகைக் கட்டணம் ரூ. 67/-

தமிழகமெங்கும் முகவர் (ஏஜெண்டு)கள் தேவை.

**விவரங்களுக்கு எழுதுக :**

**யுனெஸ்கோ கூரியர்**
**தென் மொழிகள் புத்தக நிறுவனம்**
**18, மேயர் இராமநாதன் சாலை,**
**சேத்துப்பட்டு, சென்னை - 600 031.**


படிப்பகம்

www.padippakam.com

## உங்கள் உறவினர்களையும் அன்பு நண்பர்களையும் மகிழ்ச்சியிலாழ்த்த - ஓர் வழி

*அன்புள்ள கட்டணதாரர்களே!*

சர்வதேசக் கண்ணோட்டத்துடன் அறிவியல், பொருளாதாரம், கல்வி, கலை, பண்பாடு, தொழில்நுட்பத் துறைகளைப்பற்றி உலக அறிஞர்கள் எழுதும் கருத்துக் களஞ்சியமான கட்டுரைகளையும், கண்கவர் படங்களையும் விளக்கங்களையும் கொண்ட யுனெஸ்கோ கூரியர் இதழ்களை மாதந்தோறும் படித்து மகிழ்ந்து பயனடைந்து வருகிறீர்களல்லவா?

இம்மகிழ்ச்சியையும் பயனையும் உங்கள் உறவினர்களும், நண்பர்களும் பெற வேண்டாமா? இதோ அதற்கு மிக எளிதான ஒரு வழி.

உங்கள் நெருங்கிய உறவினர்களின் - நண்பர்களின் முகவரியோடு ஒவ்வொரு வருக்கும் ஆண்டுக் கட்டணம் ரூ. 74/- அனுப்பினால் போதும். உங்கள் அன்புப் பரிசாக ஓராண்டுக்கு யுனெஸ்கோ கூரியர் இதழ்கள் அவர்கள் முகவரிக்குப் போய்ச் சேரும்.

இதற்கு நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் கீழேயுள்ள பகுதியை நிறைவு செய்து கட்டணத்துடன் 'யுனெஸ்கோ கூரியர்', தென்மொழிகள் புத்தக நிறுவனம், 18, மேயர் இராமநாதன் சாலை, சேத்துப்பட்டு, சென்னை - 600 031 என்ற முகவரிக்கு M.O. அல்லது D.D. மூலம் அனுப்பினால் போதும், மற்றவைகளை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்.

### அன்பளிப்புக் கட்டணப் படிவம்

அன்பளிப்புக் கட்டணம்
அனுப்புகிறவர் முகவரி ..............................................

..............................................

..............................................

..............................................

அன்பளிப்புக் கட்டணத்துக்கு
உரியவர் முகவரி

1. ..............................................

..............................................

..............................................

..............................................

2. ..............................................

..............................................

..............................................

..............................................

3. ..............................................

..............................................

..............................................

..............................................

படிப்பகம்

www.padippakam.com

[redacted]



# பெர்லின் : ஒருகாலத்துத் தீவு

ஒளிப்படங்கள் : உட்டே மாஹ்லர்; விளக்கவுரை : தியரி புரூஹல்

மற்குப் பெர்லினின் இரும்புத்திரை அமைதியும் கிழக்குப் பெர்லின் அரசு பல்லந்த அமைதியும் காலாவதியாகி விட்டன. இன்று, பெர்லின் பெருஞ்சுவரின் இடிபாடுகளின் மேல் ஒரு தலைநகரம் உருவாகி வருகிறது.

மாஹ்லர், பெர்லினிலுள்ள ஆஸ்க்ரூஸ் முகமையில் ணியாற்றும் ஜெர்மன் ஒளிப்பட வல்லுநர். 31 யதான புரூஹல் ஜெர்மன் நாடக இயக்குநர்.

பெர்லின் முன்பு ஒரு தீவு போலத் தனிப்பட்டிருந்தது. 1988ஆம் ஆண்டு நான் கொலோனிலிருந்து மேற்கு பெர்லின் சென்றேன். அப்போது பிரிவினைச் சுவர் இருந்தது. அப்போதிருந்த ஜெர்மன் மக்களாட்சிக் குடியரசு நாட்டைக் கடக்க வேண்டியிருந்தது. உலகப் போருக்குப்பின் பிறந்தவர்களுக்கு ஃபிரான்ஸ், ஸ்பெயின் அல்லது பெல்ஜியத்தைப் பற்றித் தெரிந்த அளவு அந்த நாட்டைப் பற்றித் தெரியாது.

மேற்குப் பெர்லின் போவது மலையைக் குடைந்த குகைப் பாதையில் செல்வது போன்றிருந்தது. கூட்டாட்சிக் குடியரசில் மேற்குப் பெர்லின் பெரிய ஊர். 1968ஆம் ஆண்டுப் புரட்சிகளில் கலந்து கொண்ட ▶



© உட்டே மாஹ்லர் / ஆஸ்க்ரூஸ் / ஏஃப்.போ. பாரிஸ்

ர்லின் ஆஸ்க்ரூஸ் மாவட்டத்தில் தோட்ட நகரப் பகுதியில் ஒரு குடும்பத்தினர் தங்கள் வீட்டின் கூரை மீது உல்லாசமாகப் பொழுது போக்குகிறார்கள்.

[redacted]

www.padippakam.com





முன்னாள் கிழக்குப் பெர்லினிலுள்ள பிராட்டர் கண்காட்சித் திடலில் தேனீர் நடனம்.

மாபெரும் காலை விருந்து. ஒவ்வொரு ஆண்டும், ஒரு தொலைக்காட்சி நிலையம், ஒலிம்பிக் விளையாட்டரங்கில் ஒரு மாபெரும் காலை விருந்தினை நடத்துகிறது. இது காலை 10 மணி முதல் மறுநாள் காலை 2 மணிவரை நீடிக்கிறது. இந்த விருந்துக்குக் கட்டணம் 10 ஜெர்மன் மார்க் (5 டாலர்)



## பெர்லின் : பிறப்பு - இறப்பு

ஐரோப்பியத் தரஅளவுகளின்படி, பெர்லின் ஓர் இளம் நகரம். அது 1234 முதல் இருந்துவருவதாக ஆவணங்கள் கூறுகின்றன. மத்திய காலத்து வாணிகமார்க்கத்தின் சந்திப்பில் அமைந்துள்ள இந்நகரம் விரைவில் வளர்ச்சியடைந்து, 500 ஆண்டுகள் ஜெர்மனியை ஆண்ட வல்லமை வாய்ந்த ஹோகன்சோலம் அரச மரபினரின் குடியிருப்பிடமாக அமைந்தது. விரிந்து பரந்த இந்தத் தலைநகரை பெர்லின் குடியரசு என்று ஆகஸ்ட் 23 அன்று ஜெர்மன் அதிபராகப் பதவியேற்ற ஜெர்கார்ட் ஹிரோடர் வருணித்தார். இது 800 ச.கி.மீ. பரப்புடையது. போலந்து எல்லையிலிருந்து 80 கி.மீ. தொலைவிலுள்ளது. இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் இது நாட்டின் கோடைகாலத் தலைநகராகியது. அப்போது, நாடாளுமன்றமும், அமைச்சரகங்களும், 12,000 ஊழியர்களும் பான் நகரிலிருந்து பெர்லினுக்கு மாறவேண்டும். ஏறத்தாழ 1,20,000 தளவாடங்களும், 38,000 மீட்டர் கோப்புகளும் இரயில்களிலும், சாலைகள் வழியாகவும் அங்கு கொண்டு செல்லப்படும். கடந்த காலத்தின் ஆற்றல்மிக்க சின்னங்கள் இன்றும் உள்ளன. விமானப்படைத் தளபதி ஹெர்மன்கோயரிங் விமானப்படைப் போரை நடத்திய கட்டிடத்தில் நிதியமைச்சகம் இயங்கும்; முன்னாள் நாசி பிரச்சாரத்தலைவர் ஜோசஃப் கோயபல்சின் தலைமைச் செயலகமாக இருந்த கட்டிடத்தில் தொழிலாளர்நலத்துறை இயங்கும்.

18ஆம் நூற்றாண்டில் ஜெர்மன் மறுமலர்ச்சியின் இதயப்பகுதியாக இருந்தவந்த இந்நகரம், பிரஷிய முடியாட்சியின் தலைநகராக விளங்கியது. 1871இல் இது ஜெர்மன் பேரரசின்







படிப்பகம்

www.padippakam.com



தலைநகராக அறிவிக்கப்பட்டது. 1920களில் ஐரோப்பாவின் முன்னணிப் பண்பாட்டு அறிவியல் மையங்களில் ஒன்றாகப் பெர்லின் திகழ்ந்தது. பெர்ட்டோல்ட் பிரக்ட், வால்ட்டர் குரோப்பியஸ், ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் ஆகியோருடன் இது தொடர்புடையது. எனினும், 1920களில் பெரிலினில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகியது; பணவீக்கம் அபரிமிதமாக உயர்ந்தது. இது, இட்லர் அதிகாரத்தைப் பிடிக்க உதவியது. 1945இல் பேரழிவுக்குள்ளான இந்நகரம், நான்கு ஆக்கிரமிப்பு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. பின்னர், 1949இல் கிழக்குப் பெர்லின் மேற்குப் பெர்லின் என்று பிரிவினை செய்யப்பட்டது. பெர்லின் பெருஞ்சுவர் 1961இல் எழுப்பப்பட்டது. இந்நகரம், 1987இல் தனது 750ஆவது ஆண்டு விழாவை பெருஞ்சுவரின் இருபுறங்களிலும் கொண்டாடியது. இதற்கு ஈராண்டுகளுக்குப் பிறகு, இந்த நாடும், பெர்லின் நகரமும் மீண்டும் ஒருங்கிணையும் என்று யாரும் ஊகிக்கவில்லை. 1991இல் ஜெர்மன் நாடாளுமன்றம், 18 வாக்குப் பெரும்பான்மையில் பெர்லின் நகரைத் தலைநகராகத் தேர்ந்தெடுத்தது. இன்று இது தலைசிறந்த நகர்களில் ஒன்றாகத் திகழ்கிறது. இங்கு, 3 நாட்டிய நாடக அரங்குகளும், 160 அருங்காட்சியகங்களும், நவீனத் திரையரங்கு வளாகங்களும் உள்ளன. அடுத்த பெர்லின் திரைப்பட விழா 2000ஆவது ஆண்டு பிப்ரவரியில் நடைபெறவிருக்கிறது. இங்கு ஐரோப்பாவின் மிகப்பெரிய இரயில் நிலையம் கட்டப்பட்டு வருகிறது. இந்நகரின் புதிய தகுநிலை இதன் பொருளாதாரத்தைப் பெருக்கி, மாபெரும் போக்குவரத்து மையமாக உருவாக்கும் என நம்பப்படுகிறது. ■



ஜெர்மனி கூட்டாட்சிக் குடியரசின் குடியரசுத் தலைவரின் அதிகாரபூர்வ இல்லமாக 1994 முதல் இருந்துவரும் ஸ்லோஸ் பெலிவூ அரண்மனையின் பூங்காவில் ஒரு துருக்கியக் குடும்பம் உல்லாசப் பயணத்தைக் கழிக்கிறது.







* புதுப்பிக்கப்பட்ட ஜெர்மன் நாடாளுமன்றம்

முன்னாள் பெர்லின் பெருஞ்சுவரின் அலங்கரிக்கப்பட்ட பலவண்ணப் பகுதியில் ஊஞ்சலாடும் இசைக்கலைஞர்.



ஒளிப்படம் © உட்டே மாஹ்லர் / ஆஸ்க்ரூஸ் / ரா:போ: பாரிஸ்

படிப்பகம்

www.padippakam.com






ஒளிப்படம் © உட்டே மாஜ்வர் / ஆஸைகஸ் / ரா.ஃபோ பாரிஸ்

ஒலிம்பிக் விளையாட்டரங்கில் ஆண்டுதோறும் நடைபெறும் மாபெரும் காலை விருந்தின்போது ஒரு பார்வையாளர் உயரே பறக்கிறார்.

▶ வயதாகிப்போன பனிப் போர்க்கால வீரர்கள், அரசியலில் சுறுசுறுப்பாயிருந்த மாணவர்கள், மருட்சி தெளிந்த கலைஞர்கள் முதலியவர்களைப் பார்த்தபோது வழக்கொழிந்த காலத்துக் காட்சிகளைப் பார்ப்பது போன்றிருந்தது. மேற்கத்திய உலகின் உதவியில் வாழ்ந்திருந்த மேற்கு பெர்லின் சுறுசுறுப்பில்லாமல் காணப்பட்டது. மாலை 6 மணிவரை காலை உணவு பரிமாறிக் கொண்டிருந்தன சில உணவு விடுதிகள். லண்டன் அல்லது பாரிஸ் நகரத்தோடு ஒப்பிடும் போது பெர்லின் ஒரு தூங்குமூஞ்சிக் கிராமமாகத் தோன்றியது.

## முளைவிடும் நகரத்தின்மீது ஒரு பருந்துப் பார்வை

நகரத்தின் கிழக்காகப் போகும்போது சிரமமாக இருந்தது. எல்லையில் ஆளைச் சரிபார்த்து உரிய பணம் வாங்கிக் கொண்டு இரும்புத் திரையைத் தாண்டிப் போக அனுமதித்தார்கள். வெளிவந்து கால் வைத்ததும் அதே ஊரில்தான். இருபுறத்து மக்கள் ஒன்றுபோல்தான் இருந்தார்கள். மதுபானக் கடைகள் காலியாக இருந்தன.

இதெல்லாம் பழைய நிலை. பிரிவினைச் சுவரை இடித்து இப்போது 10 ஆண்டுகள் சென்று விட்டன. ஜெர்மனி மீண்டும் ஒன்றாகியது. பெர்லின் நகரமும் ஒன்றாகியது. பெர்லின்தான் தலைநகர் பான் நகரிலிருந்த அரசு பெர்லின் வந்துவிட்டது. கிழக்கு பெர்லினிலிருந்த மிட்டே மாவட்டம் போய் ஏழு ஆண்டுகள் ஆகிவிட்டது. பழைய நகரத்தைப் பார்க்கும் ஆவலில் சென்றேன். முன்பு காலியாயிருந்த கூடங்கள், தொழிற்சாலைகள் போன்றவற்றை கலைச் சங்கங்களாகவும், நாடகப் பயிலரங்காகவும், மதுபானக் கடையாகவும் இளைஞர்கள் மாற்றிவிட்டார்கள். பழைய கட்டடங்களும் இடங்களும் முற்றிலும் மாறிப்போயிருந்தன. மத்தியில் கைப்பந்து விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டி



படிப்பகம்

www.padippakam.com





போட்ஸ்டாமர் பிளாட்சிலுள்ள சோனி நிறுவனத்தை வலுவான தொப்பியணிந்த சுற்றுலாப் பயணிகள் வழிகாட்டிகளுடன் சுற்றிப் பார்க்கிறார்கள். இந்நிறுவனத்தின் பாரந்தூக்கிகளும் கட்டுமானப் பணிகளும் புதிய பெர்லினின் அடையாளச் சின்னங்கள்.

பெர்லினின் மிக நீளமான பாலம் ஸ்பிரீ ஆற்றில் சுற்றலாப் பயணிகளை ஏற்றிச் செல்லும் படகுகள். இணைப்புக்கு முன்பு சாலைப் போக்குவரத்து முனையமாகவும், தரையடி இரயில் பாதையாகவும் விளங்கிய இது 1994இல் மீண்டும் திறக்கப்பட்டது.



ருந்தது. அடுத்து முன்பிருந்த அலுவலகக் கட்டடங்கள் கடைகள் எல்லாம் போய் கோல்ப் விளையாட்டுப் பயிற்சியிடம் காணப்பட்டது. இப்படி மாற்றம் விளையும் என்று யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது.

போஸ்டேமர் பிளாட்ச் என்னுமிடம் முற்றிலும் மாறிப் போயிருந்தது. ஜெர்மனி இணைந்தபின் டெய்ம்லர் பென்ஸ் மற்றும் சோனி நிறுவனங்களுக்கு அந்த இடம் விற்கப்பட்டிருந்தது. கட்டடங்கள் கட்டுவதற்கான பெரிய மனையில் வியாபாரம் நடக்குமிடம் வந்துவிட்டது. குடியிருப்புத் தெருக்களும் காணப்பட்டன. அரசின் அச்சுறுத்தலில் உண்டான அமைதி கிழக்கு பெர்லினில் முன்பு காணப்படும். மேற்கு பெர்லினில் தனித்துப் போனதால் உண்டான சாந்தம் காணப்படும். இப்போது இரண்டும் போய் வணிக வளாகங்களும், கைப்பந்து விளையாட்டு மைதானங்களும் வந்து விட்டன.

**நகர மையத்தின் மிகப்பெரிய பூங்காவான டியர்கார்ட்டன் குறுக்கே மேற்கே நோக்கிப் பார்த்தால், மாற்றம் எதுவும் தெரியாது... இப்போது கிழக்கு நோக்கிப் பாருங்கள். பாரந்தூக்கிகளின் காடு அங்கே ஆதிக்கம் செலுத்துவதைக் காணலாம். கிழக்கு ஜெர்மனிக் காலத்துப் பழைய கட்டிடங்கள் வரலாற்றுச் சின்னங்களாகப் பாதுகாக்கப்படாமல், இடிக்கப்பட்டு, அங்கே புதிய கட்டிடங்கள் எழுப்பப்படுகின்றன.**

கிழக்கு பெர்லின் மேற்கு பெர்லின் இரண்டு பகுதிகளுக்கும் இடையில் உள்ள ரெய்ச்டாக் கட்டடத்தின் மேலே ஏறிப் பார்த்தால் முழுவதும் மாறிப்போன கிழக்கு பெர்லினைப் பார்க்கலாம். மேற்கே பார்த்தால் அவ்வளவு மாற்றம் தெரியாது. இறைச்சிக்காக விலங்குகள் வாட்டப்படுமிடங்களிலிருந்து புகை வருவது தெரியும். சற்று தள்ளிப் போனால் நகரின் மத்தியில் நிர்வாணமாக வெயில் குளியலில் ஈடுபட்டிருப்போரைக் காணலாம். இது பெர்லினின் தனிச் சிறப்பு.

கிழக்காகப் பார்த்தால் ஏராளமாக நாரைகள் தெரியும். மக்களாட்சிக் குடியரசுக் காலக் கட்டடங்களை வரலாற்றுச் சின்னங்களாகப் பாதுகாக்காமல் அவை இடிக்கப்பட்டுவிட்டன. புதிய கட்டடங்கள் எழும்பிக் கொண்டிருந்தன. தனிப்பட்டவர்களுக்கு அரசுக் கட்டடங்கள் விற்கப்பட்டுவிட்டதால் புதுப்பிக்கும் வேலைகள் ▶

படிப்பகம்

www.padippakam.com





மைய மாவட்டத்திலுள்ள ஒரு மாற்றுப் பண்பாட்டு மையமான அக்குட் கட்டிடத்தின் ஒரு முற்றத்தில் திறந்தவெளி நாடகக் காட்சி. பெருஞ்சுவர் வீழ்ச்சிக்கு முன்பு, இம்மாவட்டத்தின் பெரும்பகுதி கிழக்கு ஜெர்மனியில் இருந்தது.

▶ மும்முரமாக நடந்து கொண்டிருந்தன.

மாலையில் பொழுதுபோக்கச் சரியான இடம் 'அக்குட்'. அது ஒரு தனி உலகம். பல கலை நிகழ்ச்சிகள் அங்கு நடைபெறுவதைப் பல மாடிகளிலிருந்து தொங்கிய துணிகளில் எழுதப்பட்ட விவரங்கள் தெரிவித்தன. மேல்மாடத்துச் சிற்றறையில் பழைய கார் இருக்கைகள் திரைப்படக் கூடங்களில் கழித்துவிடப்பட்ட இருக்கைகள் போடப்பட்டுள்ளன. அவற்றில் அமர்ந்து வேறெங்கும் சாதாரணமாகப் பார்க்க முடியாத திரைப்படங்களைப் பார்க்கலாம். அடுத்துக் கீழ் மாடியில் காட்சிகள் பார்ப்பதற்கான படிக்கட்டு மேடை இருக்கிறது. அதற்கும் கீழ் மாடியில் நடனக் கூடம் உள்ளது. அங்கேயே ஆஃப்ரிக்க உணவுக் கூடமும் இருக்கிறது. முற்றத்தில் எளிய நாடக மேடை அமைக்கப்பட்டிருந்தது. பழைய குளோப் நாடகக் கூடம் நினைவுக்கு வரும்.

அக்குட் போன்ற இடத்தில் காணப்படு[ம்] தினசரி வாழ்க்கை பழைய நிகழ்ச்சிகளை நினைவுக்குக் கொண்டு வருகிறது. புதி[ய] நகரமாக மாறிப் போனதும் தென்படுகிறது. தத்துப்பித்து என்று நடைபோடு[ம்] நகரத்தில் உள்ள தீவுகள் போல அமை[ந்து] உள்ளன. பத்தாண்டுகளுக்கு முன் நகரமே ஒரு தனித்தீவாக அல்லவா இருந்தது! ■

- தமிழில்: கு. ராஜாரா[ம்]



படிப்பகம்

www.padippakam.com



# புதிய உலகின் நான்கு அறைகூவல்கள்



°ஃபெடரிக்கோ மயூர்

இந்தத் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ள சிக்கல்களும், திட்டங்களும், °ஃபெடரிக்கோ மயூர் அண்மையில் வெளியிட்டுள்ள புதியதோர் உலகம் என்ற நூலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

°ஃபெடரிக்கோ மயூர், யுனெஸ்கோவின் தலைமை இயக்குநராகக் கடந்த 12 ஆண்டு காலமாகப் பணியாற்றி வந்துள்ளார். அவரது இரண்டாவது பதவிக் காலம் யுனெஸ்கோ பேரவைக் கூட்டத்தில் (அக்டோபர் 26 - நவம்பர் 17) அவருக்குப்பின் அப்பதவிக்கு நியமிக்கப்படுபவர் குறித்த விவாதம் நிகழ்ச்சிநிரலில் முக்கிய இடம்பெறும். தன்னாட்சி நிறுவனமாகிய யுனெஸ்கோவிற்குள் ஒவ்வொரு உறுப்பு நாட்டுக்கும் வாக்களிக்க உரிமையுண்டு.

"வருங்காலத்தை நாம் ஊகிக்க முடியாது; ஆனால், அதை ஆயத்தப்படுத்த முடியும்" என்று நோபல் பரிசு பெற்ற வேதியியலறிஞர் இலியா பிரிகோகின் ஒருமுறை கூறினார். பொருள் வரையறையினாலும், சூழ்நிலைகளினாலும் எதிர்காலம் நிச்சயமற்றதன்மையும், மாறுதலும், ஊகிக்க முடியாத படைப்பாக்கமும் உடையதாக இருப்பினும், பெரும்பாலும் உருவாக்கும் வகையிலேயே எதிர்காலம் அமையும்.

இரு முக்கியக் கொந்தளிப்புகளினால் உலகம் பற்றிய நமது கண்ணோட்டத்தை வெகுவாக மாற்றியிருக்கின்றன. முதலாவதாக, அறிவியல் புரட்சியானது, நிச்சயமின்மையும், பிடிவாதக் கோட்பாடும் நிறைந்த ஒரு ஊழயிலிருந்து, நிச்சயமின்மையும் ஐயப்பாடும் நிறைந்த ஒரு கடலில் நம்மைத் தள்ளியுள்ளது. அறிவியலின் கம்பீரமான உறுதிப்பாடுகளின் ஆதிக்கத்திற்குட்பட்ட ஊகித்தறியும் நிகழ்வுகளில் நம்பிக்கை கொண்டிருந்தோம். இன்று உறுதிப்பாட்டுத் தன்மையின் வாய்பாடுகள், உறுதியின்மையையே தனது முத்திரையாகக் கொண்டுள்ள இயற்கை மற்றும் வரலாறு பற்றிய கோட்பாட்டுக்கு இடங்கொடுத்து வருகின்றன. இரண்டாவதாக, தகவல் ஊழியின் அடிப்படையிலான தொழில் புரட்சியும், மனித வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் புதிய தொழில் நுட்பத்தை அதிவேகமாகப் புகுத்துவதும், உலகை ஒரு கோளமளாவியதாக மாற்றிவருகிறது.

இந்தக் கோளமயமாக்குதல், ஒரே சீரான உலகளாவிய சமுதாயத்தை உருவாக்குவதற்குப் பதிலாக, விரும்பியோ விரும்பாமலோ, சமுதாயங்களை ஒரு தருக்க முறை உருச் சிதைவுக்கு உள்ளாக்கி வருகிறது. தேர்ந்தெடுத்த இணைகள், தனிப்பட்ட குழுமங்கள், பிரிவினை, பிளவுகள், மனக்கசப்புகள் ஆகியவற்றைக் கொண்டதுதான் இந்த தருக்க முறை. சுதந்திரக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட சமத்துவத்தையும், ஒருமைப்பாட்டையும் மறந்துவிட்ட ஓர் அமைப்பு முறையின் மிகவும் சீரற்ற பொருளாதார வெற்றி, நடைமுறையில் ஓர் அரசியல் தோல்வியாகும். அத்துடன் அறிவியல் வெற்றிடமும், முழுமையான குறிக்கோளின்மையும் சேர்ந்து கொண்டிருக்கின்றன. எனவே, உலகமயமாக்கல் என்பதே பொருளற்றதாகி விட்டது.

இந்த விரிசல்களுக்கும், வெற்றிடத்திற்குமிடையில், நான்கு அறைகூவல்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. முதலாவது அமைதி பற்றியது. மற்றவற்றை வெற்றிகரமாகச் சமாளிப்பதற்கு முதற் தேவையாக இருப்பது அமைதிதான். மிரட்டல் போர் முடிவடைந்தது முதல், பன்னாட்டு அரங்கில் நாடுகள், வளர்முக நாடுகள், இடைமாறுதற்கால நாடுகள் ஆகிய மூன்றுடன் சேர்த்து ஒரு நான்காவது வகை நாடுகள் தோன்றியுள்ளன. இதில், போரில் ஈடுபட்டுள்ள அல்லது போரிலிருந்து விடுபட்டு வரும் நாடுகள் அடங்கும். இவற்றில், பெரும்பாலும் அரசுகள் இனப்படுகொலையிலும், சமுதாயங்களிடையிலான படுகொலைகளிலும் சிக்கித்தவிக்கின்றன.

இரண்டாவது அறைகூவல்: வருகிற நூற்றாண்டு, அளவற்ற செல்வத்தைக் கையருகே வைத்துக்கொண்டு வறுமையில்வாழும் புதுவகையான வறுமையைக் காணுமா? ஐ.நா.மேம்பாட்டுத் திட்டத்தின் புள்ளிவிவரப்படி, 1960 இல் உலகமக்களில் 20% பேர் மிகவும் பணக்கார நாடுகளில் இருந்தார்கள். இவர்கள், மிக ஏழையான 20% மக்களைவிட 30 மடங்கு அதிக வருமானம் உடையவர்களாக இருந்தார்கள்; 1985 இல் இவர்கள் வருமான 82 மடங்காக உயர்ந்தது.

நிலைபெற்ற மேம்பாடும், உலகளாவிய சுற்றுச் சூழல் மேலாண்மை மூன்றாவது பெரிய அறைகூவலாகும். எங்கெணும் மனிதகுலம் நாளையத் தலைமுறையினருக்கு உணவளிக்கக்கூடிய வளஆதாரங்களை வீணடித்து வருகிறது. அதிகச் சிக்கனமானதாகவும், அறிவார்ந்ததாகவும், கவனமுடையதாகவும் உள்ள மற்றொரு வகை மேம்பாட்டிற்கு நாம் வழிகாண வேண்டும். கூட்டுத் தற்கொலை புரிந்துகொள்வதற்கான தொழில்நுட்பத் திறம்பாட்டினை மனிதகுலம் பெற்றிருப்பதால், °ஃபிரெஞ்சுத் தத்துவ அறிஞர் மைக்கேல் செரஸ் கூறியதுபோல், "வல்லமை மீது வல்லமை கொள்ள" மனிதகுலம் கற்றுக்கொள்ள வேண்டும்.

நான்காவது அறைகூவல், "சீரற்றபடகு" நோய் என்பதாகும். உலகமயமாக்குதல் காரணமாக, பல நாடுகள், தங்கள் நிலப்படங்களையும், திசைகாட்டிகளையும், திசைகாணும் கருவிகளையும், ஏன் ஒருவழிவகுப்பதற்கான மன உறுதியைக் கூடத் தொலைத்து விட்டனபோல் தோன்றுகிறது. கட்டுப்படுத்த முடியாத "கண்காணா எசமானர்கள்" கைகளில் வரலாறு சிக்குண்டு விட்டதுபோல், அவை அலைகளினால் அலைக்கழிக்கப்படுகின்றன. அலைகளினால் அலைக்கழிக்கப்படுகின்றன. நிதி அங்காடிகள், புதிய மூலப்பொருள் அங்காடிகள், எல்லாவகைப் புள்ளிவிவரங்கள்.

ஆனால், இந்தச் சிக்கல்கள் நன்கு புரிந்துகொள்ளப்பட்டிருக்கின்றன; தீர்வுகளும் உள்ளன. நம்பிக்கை பிறந்துள்ளது. கோடிக்கணக்கான மௌன மக்களுக்கு அவர்களின் சிந்தனைச் சுதந்திரத்தையும் பேச்சுச் சுதந்திரத்தையும் பயன்படுத்துவதற்கு உண்மையான வாய்ப்பளிக்கப்படுமானால், வல்லான் வகுத்த முடிவுகள், உண்மையிலேயே வல்லவர்களாகிய மக்களின் முன்பு அடிபணிந்து நிற்கும்.

உலகமயமாக்குதல், இணையங்கள், தொலைத்தொடர்புகள், கணிப்பொறிகள், செய்தித் தொடர்பு உலகம், அங்காடிகள் ஆகியவற்றுடன் ஒருபோதும் நின்றுவிடலாகாது. உலகெங்குமுள்ள பொது மக்களாட்சிப் பரப்பின் ஒருங்கிணைப்பின் அடித்தளத்தில் அது அமைக்கப்படவேண்டும். இந்த ஒரே நிபந்தனையின் பேரில்தான் உலகமயமாக்குதலை மனிதநேயமுடையதாக்குவதிலும், அதனை உண்மையான உலகளாவிய வாக்குறுதியுடன் கூடிய ஒரு திட்டமாக உருவாக்குவதிலும், அதற்கு ஒரு பொருள் கற்பிப்பதிலும் நாம் வெற்றிகாண முடியும்.

***21ஆம் நூற்றாண்டுக்கு நாம் வகுத்துக் கொள்ளவேண்டிய வழிமுறை இதுதான்.*** ■

1. "புதியதோர் உலகம்" *(Un Monde Nouveau)* °ஃபெடரிக்கோ மயூர், யுனெஸ்கோவின் பகுப்பாய்வு மற்றும் முன்னறிவிப்பு அலுவலகத்தைச் சேர்ந்த ஜெரோம் பிண்டேயின் ஒத்துழைப்புடன் எழுதியுள்ளார். "எதிர்கால உலகம் : உருவாகும் நம் எதிர்காலம்" என்ற தலைப்பில் இதன் ஆங்கிலப் பதிப்பு விரைவில் தெளிவாகவிருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com

கோளம்

# பாரம்பரிய உலகை உலுக்கும் கக்காடு விவகாரம்

சோஃபி புக்காரி

**ஆஸ்திரேலியாவின் கக்காடு பூங்காவில், ஒரு சுரங்கம் திறக்கப்பட்டுள்ளது. இது, உலகப் பாரம்பரியப் பாதுகாப்பு குறித்த பன்னாட்டு விவாதத்திற்குப் புத்துயிரூட்டியுள்ளது.**

உலகப் பாரம்பரியச் சொத்துகளை எந்த அளவுக்குப் பாதுகாக்க வேண்டும்? அதைத் தீர்மானிப்பது யார்? 1981இல் உலகப் பாரம்பரியச் சொத்துப் பட்டியலில் சேர்க்கப்பட்ட ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த காக்காடு பொறுத்து உணர்ச்சிக் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. அகில உலக மதிப்புடைய சிறந்த இயற்கைத் தலங்களும் பண்பாட்டுப் பாரம்பரியத் தலங்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என 1972ஆம் ஆண்டுக் கூட்டத்தில் யுனெஸ்கோ தீர் மானித்து கிட்டத்தட்ட 30 ஆண்டுகள் ஆன பின்னும் விவகாரம் எழுந்திருக்கிறது.

ஆஸ்திரேலியாவின் வடபகுதியிலுள்ள காக்காடு பரப்பு காடுகளும், அபூர்வ உயிரினங்களும், பழைய பாறை ஓவியங் களும் கொண்டது. 50,000 ஆண்டுகள் பண்பாட்டுப் பாரம்பரியம் கொண்ட பகுதி. மிகப் பழைய மனிதக் குடியிருப்புப் பகுதி அக்கண்டத்தில் அதுதான். இந்த நீண்ட வரலாறு காக்காட்டை பண்பாட்டுத் தலமாக ஆக்கியுள்ளது. மனிதருக்கும் சூழலுக்கும் உள்ள உறவு அங்கு ஒரு தனிவகையில் அமைந்துள்ளது.

காக்காடு பூங்காப் பகுதியில் அதிகார பூர்வமாகச் சேர்ந்தது என்று சொல்ல முடியாத ஜபிலுகா திட்டில் யுரேனியப் படிவு உள்ளதென்று சுரங்கம் தோண்டும் முயற்சி தொடங்கும்போதே எதிர்ப்பு எழுந்தது. ஆதரவாளர்களும் உண்டு. வல்லுநர்களுக்கிடையே கருத்து வேற்றுமைகள் எழுந்தன. சொற்போர்கள் நிகழ்ந்தன. இதழ்களில் காரசார விவாதம் நடைபெற்றது. யுனெஸ்கோ சிறப்புக் கூட்டங் கள் ஏற்பாடு செய்தது. நாட்டுத் தூதர்களை வளைத்துப் போடும் முயற்சிகளும் நடந்தன.

காக்காடுப் பகுதியில் பழங்குடியினர் 550 வகையினர் வாழ்கிறார்கள். அவர்களுடைய மதத்தில் அங்குள்ள மரம், செடிகள், விலங்குகள், இயற்கைத் தலங்கள் எல்லாம் வலுவான இடம் பெற்றுள்ளன. அப்பழங்குடியினர்தாம் காக்காடுப் பகுதியின் சொந்தக்காரர்கள். ஆஸ்திரேலிய சட்டமும் அவர்கள் உரிமையாளர்கள் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளது. காக்காடு நிலப் பகுதியோடு அம்மக்கள் நெருங்கிய ஆன்மிக உறவு கொண்டவர்களாக இருக்கிறார்கள். பல தெய்வங்கள் தங்களை அங்கு கொண்டு சேர்த்ததாக சொல்கிறார்கள். வானவில் அரவம் ஒன்று தங்களை அங்கே குடியேற்றியதில் பங்கு வகித்ததாக அவர்கள் நம்புகிறார்கள். அந்த அரவம் உலகம் படைக்கப்பட்டபோது தோன்றியதாக அவர்கள் . கூறுகிறார்கள். குடியேற்றம் முடிந்தபின் அந்தப் பல தெய்வங்கள் அங்கங்கே அமர்ந்து அருளாட்சி செய்வதாக நம்புகிறார்கள். அநேக புனித இடங்கள் அமைந்துள்ளன என்கிறார்கள். ‘கனவுக் காலத்தின்’ தடங்கள் என்று குறிப்பிடுகிறார்கள்.

அதெல்லாம் ஒருபுறமிருக்க, இப்போது காக்கரடு மிகுந்த யுரேனியப் படிவு உள்ள இடமாக விளங்குகிறது. காக்காடு பூங்கா பெல்ஜியம் நாட்டின் அளவு பரப்புடைய பெரிய பிரதேசம். இன்று பொருளாதார முன்னேற்றத்துக்கும் சூழல் பாதுகாப்புக்கும் இடையே மோதல். யுரேனியம் எடுக்கப் பட்டால் கதிரியக்கக் கழிவு பெருங் கொடுமை விளைவிக்கும் என்ற வாதம் சொல்லப்படுகிறது. பூர்விகக் குடிகள் தங்கள் உரிமைகளை நிலைநாட்டப் பாடுபடுகிறார்கள்.

> **“உண்மையைச் சொல்கிறோம். ஆதிகுடிகளல்லாத மக்கள் எங்கள் பண்பாடுகளின் நேர்மை மீது அடிக்கடி ஐயப்பாடு கொள்கிறார்கள். ஆனால், இந்தப் புனிதத் தலம், மிரார்களுக்குச் சொந்தமானது.”**

1970ஆம் ஆண்டை அடுத்து ரேஞ்சர், ஜபிலுகா, கூங்கரா ஆகிய மூன்று திட்டுகளில் யுரேனியப் படிவு இருப்பது கண்டறியப்பட்டது என்றும் 1979இல் தான் காக்காடு பூங்கா என்று ஒன்று உருவாகியது என்றும் ஆஸ்திரேலிய அதிகாரிகள் கூறுகிறார்கள். ரேஞ்சர் சுரங்கத்தில் 1981 முதல் யுரேனியம் எடுக்கப்பட்டு வருகிறது. 16 வகை·பழங்குடியினரின் அமைப்பான வடபுலமன்றம் 1982இல் ஜபிலுகா சுரங்கப் பணி மேற்கொள்ளலாம் என்று ஒப்புக் கொண்டது. அம்மன்றம் காக்காடு பூங்கா நிர்வாகத்தில் பங்கு வகிக்கிறது.

ஓராண்டுக்குப்பின், நிலைமை மாறியது. புதிய அரசு அமைந்து அது யுரேனிய உற்பத்தியைத் தடைசெய்து ஜபிலுகா திட்டத்தை நிறுத்தி வைத்தது. வடபுல மன்றத்தின் ஒப்புதலோடும், உரிமையாளர்களான பூர்விகக் குடியினரின் சம்மதத்தோடும் ஜபிலுகா திட்டுக்கான குத்தகையை 1991ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய எரிசக்தி வள ஆதாரம் (இரா) என்னும் நிறுமத்துக்கு மாற்றிக் கொடுத்ததாக 1999 ஏப்ரல் மாதத்திய ஆஸ்திரேலிய அரசின் அறிக்கை குறிப்பிடுகிறது. அதுவரை யுரேனியச் சுரங்கத்தில் யுரேனியம் தோண்டி எடுக்கப் படவில்லை.

1996 மார்ச் மாதத்தில் ஒரு பெரிய திருப்பம் ஏற்பட்டது. அப்போது லிபரல் கட்சி தேர்தலில் வெற்றி பெற்றது. புதிய் யுரேனியச் சுரங்கங்கள் தோண்டுவதை அது ஆதரித்தது. ஜபிலுகாவிலும் தோண்டலாம் என்று கூறியது. சுற்றுப்புறச் சூழல் பாதிப்புகள் பற்றி ஆராய்ந்தபின், இரா நிறுமத்திற்கு பச்சைக் கொடி காட்டவே, அந்த நிறுமம் 1998இல் சுரங்கம் தோண்டத் தொடங்கியது. 250 கோடி டாலர் ஏற்றுமதி மூலம் சம்பாதிக்கலாம். பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். பழங்குடியினருக்கு 14 கோடி டாலர் பங்குத் தொகையாக அளிக்க முடியும். இப்படியிருந்தும் மிர்ரார் என்னும் பழங்குடியைச் சேர்ந்த 27 பேர் எதிர்ப்புத் தெரிவித்தார்கள்.

### ‘ஆபத்தான’ தலம்

மிர்ரார் இனத்தவர்தாம் ஜபிலுகா திட்டுக்குப் பரம்பரைச் சொந்தக்காரர்கள். சுரங்கம் தோண்டுவது தங்களுக்கு ஆபத்து உண்டாக்கும் என்று மறுப்புத் தெரிவித்தார்கள். 1982இல் வடபுல மன்றம் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டது தங்களைக் கட்டுப்படுத்தாது என்று சொன்னார்கள். அவர்களுடைய புதிய தலைவர் யுவான் மர்கருலா மிக வலுவாக எதிர்த்தார். யுவான் மர்கருலாவின் தந்தை உட்பட பழங்குடித் தலைவர்கள் சிலர் சுரங்க நிறுவனங்களின் வற்புறுத்தலுக்காக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்கள் என்றும் அப்போது பழங்குடியினர் தங்கள் உரிமைகளை அமல்படுத்த முயலவில்லை என்றும், நவீனகால ஒப்பந்தங்கள் பற்றிப் பழங்குடித் தலைவருக்கு ஒன்றும் தெரியாது என்றும் மிர்ரார் மக்கள் கூறினார்கள்.


யுனெஸ்கோ கூரியர் இதழாளர்



படிப்பகம்

www.padippakam.com





''ஆஸ்திரேலியா எரியாற்றல் ஆதாரங்கள்'' என்ற நிறுவனம், அமைத்துவரும் ஜபிலுக்கா சுரங்கத்தின் முன்னேறிய நிலையை இந்த வான்வெளிப்படம் காட்டுகிறது. ''மிரார்'' என்ற ஆதிகுடிக் குழுமம், இந்தச் சுரங்கம் தங்களின் புனிதமிக்க தலங்களை வெகுவாகச் சீரழித்துவிடும் என்று கருதுகிறார்கள்.

ரேஞ்சர் சுரங்கம் பற்றிய பட்டறிவு போதாது என்று மிர்ரார் மக்கள் கூறினார்கள். அச்சுரங்கத்தின் மூலம் பங்குப் பணம் பெற்ற போதிலும் 1980-லிருந்து எந்த முன்னேற்றமும் மக்கள் வாழ்க்கையில் ஏற்படவில்லை என்றார்கள். இரா உள்பட எல்லா நிறுமங்களும் சேர்ந்து 1997இல் ஓர் ஆராய்ச்சிக்கு ஏற்பாடு செய்தன. அந்த ஆய்வில் சமூக முன்னேற்றம் எதுவுமில்லை என்று முடிவு கூறப்பட்டது. மற்ற பழங்குடியினர் சுரங்கம் தோண்டுவதை ஆதரித்த போதிலும், மிர்ரார் இனத்தவர் மட்டும் மக்களின் வாழ்க்கை தலைகீழாக மாறும் என்றும், வேட்டையாடுதல், உணவுப் பொருள் சேகரித்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை முறை பாழாகுமென்றும் எதிர்க்கிறார்கள். சுரங்கத் தலம் 'கனவுக் கடவுள்' வதியும் இடமென்றும், சுரங்கம் தோண்டிக் கலைத்தால் பயங்கர விளைவு ஏற்படு மென்றும் புனிதத் தலம் பாதிக்கப்படக் கூடாது என்றும் காரணம் கூறுகிறார்கள். "நாங்கள் உண்மையைத் தான் சொல்கிறோம். பழங்குடி அல்லாதவர்கள் எங்கள் பண்பாடு பற்றிய உண்மைகளை நம்பவில்லை. இந்தப் புனிதத்தலம் மிர்ரார் மக்களுக்குச் சொந்தம்" என்று தலைவர் யுவான் மார்கருலா கூறுகிறார்.

மிர்ரார் மக்கள் சுற்றுப்புறச் சூழலியலாரோடு 1996இல் சேர்ந்து கொண்டு ஜபிலுகா சுரங்கம் தோண்டுவதைத் தடை செய்தார்கள். தீவிரவாதிகள் காவலர்களோடு பலமுறை மோத நேரிட்டது. ஆஸ்திரேலியர்களில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கினர் சுரங்கம் தோண்டுவதற்கு எதிராக இருக்கிறார்கள். அனைத்துலக அளவில் போராட்டம் வலுத்து உலக அளவில் பிரபலமாகிவிட்டது.

**"மெக்காவையும், ஜெரூசலத்தையும் நாங்கள் வெகுவாக மதிக்கிறோம். எனவே, இந்தப் புனிதத் தலங்களையும் நாம் மதிக்க வேண்டும். ஆனால், இந்தத் தலங்களின் பரப்பளவை எவரும் எப்போதும் துல்லியமாக வரையறுக்கவில்லை. அது, சில முனிவர்களுக்கு மட்டுமே தெரியும். அவர்கள் இதை இரகசியமாக வைத்திருக்க வேண்டும். ஆனால், இப்போது . இதைப் பாதுகாப்பதற்காக இந்த இரகசியத்தை வெளியிட அவர்கள் தயாராக இருக்கிறார்கள்".**

இந்த விவகாரம் யுனெஸ்கோவின் உலகப் பரம்பரைச் சொத்துக் குழுவின் முன் வந்தது. சுரங்கத்தினால் சூழல் பாதிக்கப்படும் என்றும், மிர்ரார் இனத்த வரின் பண்பாட்டு உரிமைகளும், பாதிப்புறும் என்றும் நூற்றுக்கணக்கான கடிதங்கள் யுனெஸ்கோ குழுவுக்கு வந்தன. உலக நிலைகாப்பு ஒன்றியம் என்னும் அமைப்பு அக்குழுவின் ஆலோசகர்களில் ஒன்று. அந்த அமைப்பு விசாரித்து ஆபத்து என்று சொல்வது உண்மைதான் என்று கூறியது.

யுனெஸ்கோ குழு 1998 ஜூன் மாதத்தில் வல்லுநர்களை காக்காடு அனுப்பி வைக்க முடிவு செய்தது. வல்லுநர் குழு, "பண்பாட்டு அம்சங்களுக்கும் இயற்கைச் சூழல் அம்சங்களுக்கும் மோசமான ஆபத்து விளையும்" என்று கூறியது. கதிரியக்கக் கழிவுகள் நீர் வழங்குமிடங்களையும், நீர் வாழ் உயிரினங்களையும் எவ்வாறு பாதிக்கும் என்பது பற்றி அறிவியல் பூர்வமாகத் தெளிவு பெற வேண்டும் என்று குழு மேலும் குறிப்பிட்டது. சுரங்கம் தோண்டினால் அந்த இடமே கண்ணறாவியாகக் காட்சியளிக்கும் எனவும், மிர்ரார் இனத்தவரின் பண்பாட்டுக்கும் மதத்துக்கும் ஊறு உண்டாக்கும் எனவும் குழு அறிக்கை கொடுத்தது.

யுனெஸ்கோ உலக பரம்பரைச் சொத்துக் குழுவின் மற்ற இரண்டு ஆலோசகர்களான பன்னாட்டு பழஞ் சின்னங்கள் தலங்களுக்கான மன்றம் மற்றும் பண்பாட்டுச் சொத்துகளின் பாதுகாப்பு மீட்டாக்கம் பற்றி ஆய்வு செய்யும் அனைத்துலக மையம் ஆகியவை ஆராய்ந்தபின் பழங்குடியினரின் பரம்பரை உரிமை மென்மையானது, மெக்காவையும் ஜெரூசலத்தையும் நாம் மதிப்பது போன்று பழங்குடியினரின் புனித இடங்களையும் மதிக்க வேண்டும் என்று குறிப்பிட்டது. இதுதான் "புனித இடம்" ▶

படிப்பகம்

www.padippakam.com



என்று யாரும் அறுதியிட்டுக் கூறவில்லை. ஒருசில ஞானிகளுக்கு மட்டுமே அது தெரியும். அவர்கள் இரகசியமாக வைத்திருக்கக் கடமைப்பட்டவர்கள். இப்போது புனித இடம் பாதுகாப்புக் கருதி வெளியில் சொல்லத் தயாராயிருக்கிறார்கள்" என்று குறிப்பிட்டார். பழஞ்சின்னம் தலங்களுக்கான மன்றத்தைச் சேர்ந்த ஹென்றி கிளீரே என்பவர். ஜபிலுகாவை மற்ற புனித இடங்களிலிருந்து பிரிக்க முடியாது எனவும், அது சட்டப்படி பரம்பரைச் சொத்து என்று அறிவிக்கப்பட்டதன் ஒரு பாகமாக இல்லாத போதிலும், அங்கு செய்யப்படும் எதுவும் மொத்தப் புனித இடத்தையும் பாதிக்கும் எனவும் ஹென்றி கிளீரே மிர்ரார் மக்கள் மற்றும் வல்லுநர்களின் கருத்தை அடியொட்டிக் கூறுகிறார்.

### பண்பாட்டு உரிமைகள்

1972ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி சுரங்க வேலை தொடங்கப்படுமுன் உலகப் பரம்பரைச் சொத்துக் குழுவிற்குத் தெரிவித்திருக்க வேண்டும், எல்லாம் முடிந்து போன சமாசாரம் என்ற வாதத்தை ஆலோசகர்கள் குழு ஏற்றுக் கொள்ளவில்லை. 1982 மற்றும் 1991 ஒப்பந்தங்களை ஆஸ்திரேலிய அரசு மிர்ரார் இனத்தவரின் பண்பாட்டு உரிமைகளைக் காப்பதற்காக மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று ஆலோசகர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.


1998 டிசம்பரில் யுனெஸ்கோ குழு ஜப்பானிலுள்ள கியோட்டாவில் கூடி ஆஸ்திரேலிய அரசாங்கம் சுரங்கம் அமைப்பதை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தியது. காக்காடு தலத்தை ஆபத்துக்குள்ளாகியிருக்கும் பரம்பரைச் சொத்து என அறிவிக்கலாமா என்பது பற்றி ஆராய 1999 ஜூலையில் மீண்டும் கூட வேண்டுமென்று முடிவு செய்தது. அரசு சாரா அமைவனங்கள் யுனெஸ்கோ குழுவின் முடிவைக் கேட்டு மகிழ்ந்தன. ஆனால் ஆஸ்திரேலிய அரசு எதிர்வாதம் தொடங்கியது.

எதிர்க்கட்சியான லேபர் கட்சி, அரசின் சுற்றுப்புறச் சூழல் கொள்கைகளைக் குறை கூறியது. பழங்குடியினரோடு நல்லிணக்கம் ஏற்படுவதை அரசு கெடுக்கிறது என்று குற்றம் சாட்டியது

சூழல் அமைச்சர் ராபர்ட் ஹில் ஒரு பிரதிநிதிக் குழுவுடன் பாரிஸ் சென்று, ஆஸ்திரேலியா யாரிடமும் பாடம் கற்க வேண்டிய நிலையில் இல்லை என்றும், 1974ஆம் ஆண்டு பரம்பரைச் சொத்துப் பாதுகாப்பு பற்றிய ஒப்பந்தத்தில் முதலில் கையெழுத்திட்ட நாடு ஆஸ்திரேலியா என்றும், ஒப்பந்தத்தின்படி தன் நாட்டுச் சட்டங்களை மாற்றியமைத்தது என்றும், எல்லா ஒப்பந்த நாடுகளைவிட பாரம்பரியத் தலம் கொண்டது ஆஸ்திரேலியா என்றும், பாரம்பரியத் தலப் பாதுகாப்புக்கு அரசு ஆண்டுக்கு 3 கோடி டாலர் செலவிடுகிறது என்றும் யுனெஸ்கோவிடம் எடுத்துக் கூறினார்.

### மதுவும் மேற்கத்திய உணவும்

ராபர்ட் ஹில் மேலும் பேசுகையில், உலகப் பரம்பரைச் சொத்துப் பட்டியலில் சேர்க்கும் போதே சுரங்கத் திட்டுகள் ஏற்கனவே இருந்தன எனவும், அப்போதே





ஜீபிலிக்கா, ரேஞ்சர், கூங்காரா ஆகிய திட்டுகள், கக்காடு பூங்காவினுள் (20,000 கி.மீ) இருந்தபோதிலும், இவை "உலகப் பாரம்பரியம்" என்று வகைப்படுத்தப்படவில்லை.

ஜபிலுகாவில் சுரங்கம் தோண்டும் உரிமை இருக்கிறது என்று அரசு சொல்லியது எனவும், ரேஞ்சர் சுரங்கத்தால் எவ்வித சூழல் கேடும் விளையவில்லை எனவும், ஆஸ்திரேலியாவுக்கு சுரங்கம் பொறுத்து நீண்டகால அனுபவம் உண்டெனவும், சுரங்கத்தினால் உடல் நலத்துக்கும் சூழலுக்கும் தீங்கு ஏற்படாதிருக்க ஒழுங்குமுறை விதிகள் உண்டாக்கியிருக்கிறது எனவும் விரிவாகக் குறிப்பிட்டார். சூழலுக்கு மிகமிகச் சிறிதளவே பாதிப்பு இருக்குமென்றும், கதிரியக்க எச்சங்கள் மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன என்றும் வல்லுநர் கூறியிருப்பதை மேற்கோள் காட்டினார். சுரங்கத்தைக் குன்றுகள் மறைப்பதால் காக்காடு பூங்காப் பகுதியிலிருந்து தெரியாது என்றும், வானில் பறந்தால் மட்டும் பார்க்கலாம் என்றும், காக்காடு வருபவர்களில் 10 விழுக்காடு தான் விமானம் மூலம் வருகிறார்கள் என்றும் மேலும் எடுத்துக் கூறினார்.

ஏற்கனவே பழங்குடி மக்கள் சுரங்கம் தோண்டுவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளதைக் குறிப்பிட்டு, புனித இடங்களை சுரங்கம் நேரடியாகப் பாதிக்காது, அத்தலங்கள் ஆஸ்திரேலியச் சட்டங்களால் பாதுகாக்கப்படுகின்றன என்று ராபர்ட் ஹில் எடுத்துரைத்தார். மதத்தைக் காரணம் காட்டி மிர்ரார் இனத்தவர் சுரங்கத் திட்டம் நிறை வேறாமற் செய்ய முயலுகிறார்கள் என்று மேலும் குறிப்பிட்டார். "1997 வரை புனிதத் தலமான பாய்வெக் என்பதனை சுரங்கப் பள்ளத்தாக்கு முழுவதையும் ஒருசேரக் குறிப்பிடுவதற்காகச் சேர்க்கும்படி கூறப் படவில்லை. புனிதத் தலம் என்பதோடு நில்லாமல் ஆபத்துக்குள்ளாயிருக்கும் புனிதத்தலம் என்று ஆக்குவதற்காக பாய் வெக்கையும் சேர்க்கும்படி கூறப்பட்டது. ஆனால் இது தொல்பொருள் குறிப்புகளுக்கும் முந்தைய அறிக்கைகளுக்கும் மாறாக உள்ளது" என்று 1999ஆம் ஆண்டு அரசு அறிக்கை கூறுவதைச் சுட்டிக் காண்பித்தார்.

பழங்குடியினரின் சமூக, பொருளாதார முன்னேற்றம் மெதுவாக நடைபெறுவதற்கும் அவர்களது பண்பாடு சிதைவதற்கும் அரசு பொறுப்பல்ல என்று கூறிவிட்டு, "சுரங்க நிறுமம் தரும் பங்குப் பணத்திலிருந்து மதுபானம் வாங்குவதற்கும் மேற்கத்திய உணவு வகை வாங்குவதற்கும் அவர்கள் செலவழிப்பதை அரசு தடுத்து நிறுத்த முடியாது" என்று குறிப்பிட்டார்.

கக்காடு பூங்காவில், வரலாற்றுக்கு முந்திய காலப் பாறைக் கலை நினைவிடங்கள் உள்ளன. இவை, ஆதிகுடிகளுக்குப் பழக்கமான புராணகால வீரர்களையும், விலங்குகளையும் பொருள்களையும் சித்திரிக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com



பிரதிநிதிக் குழு உறுப்பனர் ஒருவர். ஆஸ்திரேலியர்கள் இராவின் சுரங்கத் திட்டத்தை மறுபரிசீலனை செய்யவும், மிர்ரார் இனத்தவரோடு மீண்டும் பேச்சு வார்த்தை நடத்தவும் உறுதி கூறினார்கள் என்பதை அவர் பாரிசிலுள்ள யுனெஸ்கோ குழு முன் எடுத்துரைத்தார்.

ராபர்ட் ஹில் 1999 ஜூலை 12ஆம் தேதி யுனெஸ்கோ குழு முன் பேசும்போது ஜபிலுகா சுரங்கம் 2001ஆம் ஆண்டு முதல் செயல்படத் தொடங்கும் என்றும், முதலில் வேலைகள் மெதுவாகவே நடைபெறும் என்றும், ரேஞ்சர் சுரங்கம் பத்தாண்டுகளில் மூடப்படும் சமயம் வேலைகள் விரைவு பெறும் என்றும், அரசு 18 இலட்சம் டாலர் ஒதுக்கி, காக்காடு பூங்காவைச் சீர்திருத்தவும், பழங்குடியினர் வீட்டுவசதி, குடிநீர் வசதி, கல்வி போன்றவற்றுக்கும் செலவிடும் என்றும் கூறினார்.

காக்காடு பூங்காவின் ஒரு பகுதியாக சுரங்கம் இல்லையென்ற போதிலும் பழங்குடியினரில் பண்பாட்டுச் சொத்து பற்றி விசாரிக்க ஏற்பாடு செய்யப்படும் என்று கூறிவிட்டு இராவுடன் பழங்குடியினர் ஒரு நடுநிலையாளர்முன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று குறிப்பிட்டார்.

**"இப்போது நினைவுச் சின்னங்கள் அல்லாத, ஆனால், மிகப்பெரும் பண்பாட்டு மதிப்புள்ள - முக்கியமாக, ஆஃப்ரிக்காவிலும் ஓசியானியாவிலும் இயற்கை அழகு நிலப்பகுதிகளைப் பண்பாடுகளாக நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். இவை மனிதகுலத்தின் பெயரால் பாதுகாக்கப்பட வேண்டும்."**



© வெள்ளை மாளிகைப் பத்திரிகைத் துறை வாஷிங்டன்

வெள்ளை மாளிகையில் 1999 ஏப்ரலில், ஜீபிலுக்கா திட்டின் 27 மிரார் "மரபு உரிமையாளர்களில்" ஒருவரான ஒய்வோன் மார்கருலாவை ஹில்லாரி கிளின்டன் வரவேற்கிறார். யுரேனியம் சுரங்கம் தோண்டுவதற்கு எதிராக இயக்கம் நடத்தி வருவதற்காக இவருக்கு அண்மையில் ஜாக்குவி கட்டோனாவுடன் (பின்னாலிருப்பவர்) சேர்த்து "கோல்டுமேன் சுற்றுச் சூழல் விருது" வழங்கப்பட்டது.

ராபர்ட்ஹில்லின் வாதங்களைக் கேட்ட பின் யுனெஸ்கோ உலக பரம்பரைச் சொத்துக் குழு காக்காடை ஆபத்துக்குள்ளாகியிருக்கும் பரம்பரைத்தலம் என்று வகைப் படுத்தத் தேவையில்லை என்று முடிவு செய்தது. இருந்தபோதிலும் மிர்ரார் இனத்தவரில் பண்பாட்டுப் பரம்பரை பாதிப்புறுவது பற்றிக் கவலையுறுவதாகக் குழு கூறியது. சுரங்கத்திட்டம் விளைவிக்கும் கேடுகள் பற்றிய அறிவியல் குறிப்புகள் தெளிவாக இல்லை என்றும் 2000ஆம் ஆண்டு ஏப்ரல் 15-க்குள் ஆஸ்திரேலிய அரசு புதிய அறிக்கைகள் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டது.

பிரதிநிதிக் குழு பாரிஸ் வந்திருந்த போது அரசு சாரா அமைவனங்களின் பிரதிநிதிகளும் வந்திருந்தனர். ஆஸ்திரேலிய அரசின் வற்புறுத்தல் காரணமாக அமைந்தது யுனெஸ்கோ குழுவின் முடிவு என்று ஒரு பிரதிநிதி விமர்சனம் செய்தார். 1972 யுனெஸ்கோ ஒப்பந்தத்தைப் பயனற்றதாகச் செய்ய ஆஸ்திரேலிய அரசு மோசமான உபாயங்களைக் கையாண்டதாக வேறொரு பிரதிநிதி விமர்சித்தார்.

காக்காட்டை ஆபத்துக்குள்ளாகியிருக்கும் தலம் என்று வகைப்படுத்தாமலிருக்க ஆட்களைப் பிடித்து வேலை செய்வதற்கு ஆஸ்திரேலிய அரசு 1999 தொடக்கத்தில் 6 இலட்சம் டாலர் ஒதுக்கியது. யுனெஸ்கோவின் பொது இயக்குநர் தேர்ந்தெடுக்கப்படுவதற்குப் போட்டியிடும் ஆஸ்திரேலிய அமைச்சர் காரெத் இவான்ஸை ஆதரிப்பதாகவும் அரசு கூறியது. இவ்வாறெல்லாம் செய்வது உலகப் பரம்பரைச் சொத்துக் குழுவில் செல்வாக்கைச் செலுத்துவதற்காகவே என்று ஒரு விமர்சனம் கூறப்பட்டது.

மேலே கூறப்பட்டவற்றிலிருந்து உலகப் பரம்பரைச் சொத்து தீங்கிழைக்கப்படக் கூடிய ஒன்றாக இருப்பதை அறியலாம். ஆபத்துக்குள்ளாகியிருக்கும் தலங்களின் எண்ணிக்கை 23 ஆகும். பொருளாதாரத் தேவை அவசர அவசியமாக இருக்கும் போது சுரங்கம் தோண்டுதல் அல்லது பொருளாதார முன்னேற்றத்துக்கான வேறு திட்டம் பரம்பரைத் தலத்துக்கு ஆபத்து உண்டாக்கும் என்ற காரணத்துக்காக தடை செய்யப்பட வேண்டியது கட்டாயமா? தலத்தின் முக்கியத்துவத்தை யார் தீர்மானிப்பது? எப்படி தலத்தைப் பாதுகாப்பது?

தொடக்கத்தில் மேற்கத்திய கலை பண்பாட்டு மரபுப்படி எது பரம்பரைச் சொத்து என்பது தீர்மானிக்கப்பட்டு வந்தது. ஆனால் பழஞ்சின்னங்கள் மட்டுமின்றி, பண்பாட்டு மதிப்புடைய தலங்களும் பாரம்பரியச் சொத்தாக இப்போது கணக்கிடப்படுகிறது. மனித குலத்தின் நன்மைக்காக அவை பாதுகாக்கப்பட வேண்டும் என்று முடிவாகியுள்ளது.

அவர்களுடைய நாட்டிலேயே கலாச்சார முக்கியத்துவம் உணரப்படாதிருந்தால் என்ன செய்வது? அனைத்துலக சமுதாயம் எந்த அளவுக்குப் போய் பாதுகாப்புக் கொடுக்கலாம்? 1972ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி, எந்த நாடு ஒரு தலத்தை உலகப் பாரம்பரிய சொத்துப் பட்டியலில் சேர்க்க விரும்புகிறதோ அந்த நாடு அதை முதலில் முக்கிய பாரம்பரியச் சொத்தாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

காக்காடு பொறுத்தவரை யுனெஸ்கோ குழு ஆபத்துக்குள்ளாயிருக்கும் பாரம்பரியச் சொத்து வகையில் சேர்ப்பதற்கு தன்னுடைய முன் ஒப்புதல் வேண்டுமென ஆஸ்திரேலிய அரசு வாதாடியது. வல்லுநர்களின் அறிக்கைகள் பரிசீலிக்கப்பட வேண்டியவை என்றும் வாதாடியது.

### சுற்றுச் சூழல் ஆதிக்கப் பேரரசு

உலகப் பரம்பரைச் சொத்தின் நிர்வாகத்தில் யுனெஸ்கோவும் தொடர்புடைய நாடும் சேர்ந்து செயல்பட வேண்டும் என்பதை எதிர்க்கும் நாடுகளுக்கு ராபர்ட் ஹில்லின் வாதங்கள் உதவியாயிருந்தன. ஐக்கிய அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் 40 பேர் ஆஸ்திரேலிய அரசின் நிலைப்பாட்டை ஆதரித்தனர். யுனெஸ்கோ சூழல் பொறுத்துத் தனி ஆதிக்கம் செலுத்துவதாகக் குறை கூறினர். 1999 ஜூலை 1ஆம் தேதி அந்த உறுப்பினர்கள் பில் கிளிண்டனிடம் கொடுத்த விண்ணப்பத்தில் ஆஸ்திரேலியர்களே விவகாரத்தைத் தீர்க்க வேண்டுமேயொழிய எங்கேயோ உள்ள உலகப் பாரம்பரியச் சொத்துக் குழு தீர்மானிக்கக் கூடாது என்றும், ஜபிலுகா பொறுத்து யுனெஸ்கோ குழு தலையிடக் கூடாது என்று ஐக்கிய அமெரிக்காவிலுள்ள உலகப் பாரம்பரியத் தலங்கள் ஐக்கிய அமெரிக்க காங்கிரஸின் கட்டுப்பாட்டில்

(தொடர்ச்சி ஐம்பத்திமூன்றாம் பக்கம்)

படிப்பகம்

www.padippakam.com



# மகளிர் எழுத்தறிவு: அரிச்சுவடியைத் திருத்துதல்

அன்னா ராபின்சன் - பான்ட்

**எழுத்தறிவு வகுப்புகளுக்குச் சென்றுவரும் நேப்பாள மகளிரின் அன்றாட வாழ்வைப் பகிர்ந்துகொள்வதன் மூலம், என்ன, எதற்காகக் கற்பிக்கப்படுகிறது என்பது குறித்து ஓர் ஆர்வமுள்ள ஆராய்ச்சியாளர் ஆராய்கிறார்.**

சேறும் சகதியுமாய் இருந்த பாதையில் சென்று கொண்டிருந்தபோது என்னைப் பார்த்த இலட்சுமி உடனே தன் கால் செருப்பை மரியாதை நிமித்தம் கழட்டி விட்டு, "நான் ஒரு பச்சை வெள்ளரிக்காய். எனக்கு இந்த வயதில் இப்படி சிரமம் வேண்டியதில்லை. என்னைப் பெற்றவர்கள் சிறுவயதில் படிக்க வைக்காததால் இந்தப் பாடு" என்று சொன்னாள். மேற்கு நேபாளத் திலுள்ள அருதார் கிராமத்தில் இரவு முதி யோர் கல்வி வகுப்புக்குப் போய்க் கொண்டிருந்தாள் இலட்சுமி. சிறுவயதில் பள்ளி சென்று படிக்காததால் நடுவயதில் எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ளச் செல்கி றாள். "சாகும்போது பச்சை வெள்ளரிக் காயா?" என்பது நேபாளப் பழமொழி. அதனால் தான் நான் ஒரு பச்சை வெள்ளரிக் காய் என்றாள். வயதானபின் எழுதப் படிக்கக் கற்றுக் கொள்வது ஒரு சவால் தான். ஆடம்பரமான நடவடிக்கையும் கூட. நான் இலட்சுமியுடன் சிநேகிதி என்ற முறையில் பேசினேன். அதோடு என் ஆராய்ச்சிக் காரியத்தையும் பார்த்தேன். எழுத்தறிவுக்கும் வாழ்வு முன்னேற்றத்துக் கும் உள்ள தொடர்பைப் பற்றி ஆராய்வது என் வேலை. எட்டுமாதமாக அருதார் ஊரில் தங்கியிருந்து இலட்சுமி போன்ற பெண்கள் ஏன் அந்த வயதில் எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ளப் போகிறார்கள், அதனால் அவர்கள் அடையும் பலன் என்ன என்பதை ஆராய்ந்து வருகிறேன். இலட்சுமி போன்றவர்கள் என்னைப் பார்த்து ஏன் மேற்கத்தியப் பெண் ஒருத்தி தன் நான்கு வயது மகனுடன் பெரிய சாலையிலிருந்து எட்டு மணி நேரம் நடக்க வேண்டிய தூரத்துக் கிராமத்தில் தங்கியிருக்க வேண்டும் என்று நினைப்பார்கள்.



நேப்பாளத்திலுள்ள அருத்தார் என்ற கிராமத்தில், தங்கள் கைக் குழந்தைகளுடன் வரும் தாய்மார்களுக்காக அலினா எழுத்தறிவு வகுப்பு நடத்துகிறார்.

## காரியநோக்க அணுகுமுறை தேவையில்லை

அநேக வளர்முக நாடுகளில் வயது வந்த பெண்களுக்கு எழுத்தறிவு சொல்லிக் கொடுப்பதன் நோக்கம் வருமானம் வரக் கூடிய பணிகளில் பெண்கள் ஈடுபட வேண்டும், உடல்நலம் பேணுவதில் அவர்கள் மேம்பாடுற வேண்டும் என்பதாகும். எழுத்தறிவு கொடுப்பதற்கு உதவி செய்யும் முகன்மைகளில் திட்டமிடுவோரும் கொள்கை வகுப்போரும், கொஞ்சம் கல்வி கற்ற தாய்மார்கள் நன்கு உடல் நலம் பேணுபவர்களாகவும், குழந்தைகளைப் படிக்க வைப்பவர்களாகவும், உற்பத்திப் பணியில் அக்கறை உள்ளவர்களாகவும் இருப்பார்கள் என்று அடித்துக் கூறுகிறார்கள். ஆனால் நான் இதுநாள் வரை பார்த்ததில் எழுத்தறிவு கற்க வரும் பெண்களும் கற்பிப்பவர்களும் இம்மாதிரி நோக்கத்துடன் இருப்பதாகத் தெரியவில்லை. உதவி செய்யும் முகன்மைகள் எழுத்தறிவு என்று கூற வேண்டிய இடத்தில் கல்வி என்னும் சொல்லைப் பயன்படுத்துகின்றன. வெறும் எழுத்தறிவு வேறு கல்வி என்பது வேறு. எழுத்தறிவு பெறுவதால் பெண்கள் அடையும் மேம்பாட்டைக் கவனித்து அறிய வேண்டிய முகன்மைகள், எழுத்தறிவு பெற்ற பெண்கள் சேமிப்பில் ஈடுபடுவதையும், கடன் கொடுத்து வாங்குவதில் விவரம் அறிந்தவர்களாயிருப்பதையும், வீடுகளுக்கு கழிப்பறை கட்டுவதில் அக்கறை கொள்வதையும் மேம்பாடு என்று எண்ணுகின்றன.

எழுதப்படிக்கத் தெரிந்து கொண்டபின் விளைய வேண்டிய மேம்பாடு பற்றி கற்பிப் போரும், கற்கவரும் பெண்களும் எந்தக் கருத்தும் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. எழுத்தறிவு பெறுவதற்கும் கல்வி பெறுவதற்கம் வேறுபாடு உண்டு என்று நினைக்கிறார்கள். கல்வி என்பது வழக்கமான பள்ளிகளில் பயில்வது என்றும் கல்வி கற்போர் பின்னால் நல்ல வேலைக் குப் போய் நல்ல அந்தஸ்து (மதிநிலை) பெற முடியும் என்றும், முதியோர் வகுப்பு என்பது ஏழைக்கேற்ற எள்ளுருண்டை தான் என்றும் பெண்கள் எண்ணுகிறார்கள். படிப்பு முடிந்து கொடுக்கப்படும் சான்றிதழ் வேலை தேடுவதற்கு உதவாது எனவும், "சும்மா நாங்கள் வைத்துக் கொள்ள" எனவும் சொல்கிறார்கள். எழுத்தறிவு கற்பிக்கும் வகுப்புகளுக்குச் சென்று பார்த்தேன். பெண்கள் என்ன கற்க விரும்பு

1) கட்டுரையில் காணும் சாய்வெழுத்துகள், ஆசிரியரின் களக் குறிப்புகளிலிருந்து எடுத்தவை.

கட்டுரையாசிரியர், சசக்ஸ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பிரிட்டிஷ் அறிஞர். எழுத்தறிவு ஆராய்ச்சிக்காக 1999 யுனெஸ்கோ பன்னாட்டு விருது பெற்றவர்.


படிப்பகம்

www.padippakam.com



கிறார்கள் என்பதையும், பாடத்திட்டம் எவ்வாறிருக்கிறது என்பதையும் கவனித்தேன். இரண்டும் ஒத்துப் போகாததால் பெண்கள் பலர் நடுவிலேயே வகுப்புகளுக்கு வருவதை நிறுத்திவிடுகிறார்கள். காரியநோக்க அணுகுமுறையைப் பெண்கள் வெறுத்து ஒதுக்குகிறார்கள். மேம்பாட்டுக் காரியங்கள் பொறுத்து விவரம் அறியவும் திறமை உண்டாகவும் சொல்லிக் கொடுப்பதைப் பெண்கள் விரும்பவில்லை. குடும்ப வாழ்க்கையை மேம்பாடு செய்வதற்காக மூன்றாம் உலக ஏழைப் பெண்கள் எழுத்தறிவு பெற வேண்டும் என்ற நோக்கம் பயனற்றது. ஏனென்றால் அந்தப் பெண்களுக்குக் குடும்பக் கட்டுப்பாடு பற்றியும் சத்துணவு பற்றியும் ஏற்கனவே தெரியும். அந்த விவர அறிவை அவர்கள் பயன்படுத்தவில்லை என்றால் அதற்குக் காரணம் வசதி இல்லாததாக இருக்கலாம் அல்லது புதிய கருத்துகளை ஒத்துக் கொள்ளாததாக இருக்கலாம். உடல்நலம் பற்றி விவாதிக்கவும், கடன் வாங்குதல் பற்றித் தெரிந்து கொள்ளவும் அவர்கள் வகுப்பில் சேரவில்லை. எழுதப்படிக்க அறிந்து கணக்கு வைத்து வரவும், கடிதங்கள் எழுதவும் தகுதியுடையவர் களாக ஆகி தங்கள் கணவன்மார்கள் மற்றும் குழந்தைகள் போல தாங்களும் கற்றவர்கள் என்றும் பெயர் பெற வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

**"நான் என்ன செய்வது? சாப்பிடுவதா? படிப்பதா? நெல்லை எப்படி அறுவடை செய்வேன்? பகல் முழுவதும் அதை எவ்வாறு உலர்த்துவேன்? பின்னர் எப்படிப் படிக்க வருவேன்?"**



© அன்னா ராமிங்கன்-பான்ட், சக்கஸ்

அருத்தாரில் எழுதப்படிக்கக் கற்றுக் கொள்ளும் ஒரு கீழ்சாதிப்பெண். இவர்கள் கணக்கு எழுதுவதைவிட, தன் மதிப்பை அதிகரித்துக் கொள்ளும் நோக்குடனேயே படிக்கிறார்கள்.

## கிண்டல்

பெண்களின் இந்த நோக்கத்தை எண்ணிப் பார்த்த பிறகு இன்னம் ஆழமாக ஆராய முற்பட்டேன். நேபாளத்தின் வெவ்வேறு பகுதிகளில் உள்ள பாடத் திட்டத்தைக் கவனித்தேன். ஒன்றுக்கொன்று மாறுபாடாகக் காணப்பட்ட பாடத்திட்டங்களை ஆராய்ந்தேன். மேற்கு நேபாளத்து வகுப்புகள் (அருதார் வகுப்பு போன்றவை) பன்னாட்டு உதவி முகன்மை யால் நடத்தப் பெறுகின்றன. கடன் வாங்கும் குழுக்கள் அமைப்பதற்கு வகுப்பிற்கு வரும் பெண்கள் பயன்படுத்தப் படுகிறார்கள். காட்மண்டு அருகே லலித்பூர் மாவட்டத்தில் உள்ளூர் அரசு சாரா அமைவனம் முதியோர் வகுப்பு நடத்துகிறது. அவர்களே வகுத்த பாடத் திட்டம். படித்தறிவு உண்டாக்குவதும் சுகாதாரம் பற்றி விழிப்புணர்வு உண்டாக்குவதும் நோக்கம்.

நேபாளத்தின் இரண்டு பகுதிகளிலும் சுகாதாரம் பற்றிக் கதைகள் மூலம் போதிக்கப்படுகிறது. சுகாதார முறையைப் பின்பற்றும் கிராமப் பெண், பின்பற்றாத பெண் ஆகியவர்களைப் பற்றிக் கதை உருவத்தில் பாடம் சொல்லப்படுகிறது. வயதில் மூத்த பெண்கள் அந்தப் பாடங் களைக் கிண்டல் செய்தார்கள் : *"நானி (பாடம் சொல்லித் தருபவர்) கீரையில் ஒருவகைப் புழு இருக்குமென்றும், அதைப் பச்சையாகச் சாப்பிட்டால், நோயுண்டாகும் என்றும் சொல்கிறார். வயலில் நெல் அறுவடை செய்யப் போகிறோம். நாள் முழுவதும் வேலை செய்கிற எங்கள் கண்ணில் கருமையான சாக் வளர்ந்திருப்பது படுகிறது. அதை எடுத்துச் சமையல் செய்ய ஏது நேரம்? ஆகவே அதைத் தின்கிறோம். புழு வயிற்றுக்குள் போய்விடுகிறதாக்கும். இப்படிப் பயப்பட்டால் முடியுமா? அப்புறம் நானி கொக்கிப் புழு பற்றிச் சொன்னார். கழிப்பறை போகும்போது காலில் செருப்பு இல்லாமல் போனால் கொக்கிப் புழு தொற்றிக் கொள்ளும் என்றார். நாங்கள் ஏன் கொக்கிப் புழுவைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்? எங்களுக்குத் தான் கழிப்பறை என்பதே இல்லையே! தேவைப்படும்போது ஓடைப் பக்கம் போவோம். அதுதான் கழிப்பறை.*

*மற்ற வயதான பெண்கள் 'களுக்' என்று சிரித்தார்கள். அவர்கள் போனபின் முன்பு பேசிய பெண் என்னிடம் கேட்டாள், "நான் என்ன செய்யட்டும். வீட்டிலே சாப்பிட்டுக் கிடப்பதா, படிக்க வருவதா தெரியவில்லை. நாளெல்லாம் வயலில் வேலை செய்வதால் உடம்பு முழுவதும் வலிக்கிறது. அசதியாக இருக் கிறது. எப்படிப் படிக்கிறது?"*

'நானி வயதில் மூத்த அனுபவசாலி. இந்த மாதிரிக் கிண்டலையெல்லாம் சமாளிக்கக் கூடியவர். அலுப்புடன் வருகிறவர்களையும் சமாளித்துவிடுவார். ஆனால் வகுப்பு நடத்தும் இளம் பெண்கள் இந்த மாதிரிக் கேள்விகள் கேட்டவுடன் அசந்துவிடுகிறார்கள். இன்னொரு பிரச்சினை மொழி. பாடங்ககள் நேபாளி மொழியில் இருக்கின்றன. ஆனால் படிக்க வரும் பெண்கள் பேசுவதோ நெவாரி மொழி. வயதான பெண்கள் நெவாரி மொழியில் பாடம் நடத்தினால் என்ன என்று கேட்பார்கள். ஆகவே நேபாளி, நெவாரி இரண்டையும் கலந்து பாடம் சொல்லித் தருவார்கள்.

## ஆசிரியர்த்தனம்

அருதாரில் பெண்கள் குழுக்களாகச் சேர்ந்து சேமிப்பு செய்தல், கடன் கொடுத்தல், கடன் வாங்குதல்,வருமானம் உண் ▶

படிப்பகம்

www.padippakam.com



▶ டாக்குதல் எப்படி என்று சொல்லித் தரப் படுகிறது. கணக்கு எழுதவும், கூட்ட நிகழ்ச்சிகள் பற்றிக் குறிப்பு எழுதவும், அறிக்கைகள் எழுதவும் தெரிய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடன் வாங்க உதவி செய்வதைப் போற்றினாலும், படிப்புக்கும் வருமானம் உண்டாக்குவதற்கும் என்ன தொடர்பு என்று பெண்கள் கேட்கிறார்கள். சன்சாரா என்ற பெண் குழுவின் பொருளாளர். கடன் கணக்குகளை அவளிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கணக்குப் புத்தகத்தில் என்ன எழுதியிருக்கிறது என்று சன்சாராவைக் கேட்டேன். தெரியாது என்றாள். மற்றவர்கள் எழுதுகிறார்கள். நான் கூட்ட சமயத்தில் எடுத்துக் கொண்டுபோய்க் கொடுப்பேன் என்றாள். பக்கத்திலிருந்த மகள் பெரிய மலை ஏறியா கொண்டுபோய்க் கொடுக்கிறார்கள் என்று கிண்டல் செய்தாள். மகள் படித்தவளாதலால் அவளிடம் இந்தப் பொறுப்பைக் கொடுக்கலாம் என்று சன்சாரா நினைத்தாள். ஆனால் அதற்கு அனுமதி இல்லை. ஏன் சன்சாராவை விடமாட்டேன் என்கிறார்கள் என்பதைப் பிறகு பாடமாகச் சொல்லக் கூடியவள் சன்சாரா. வாயினாலேயே கடன் விவரம், வட்டி விவரம், பாக்கி விவரம் எல்லாம் சொல்லிவிடுவாள். இந்த மரபுமுறைப் பழக்கத்தைப் பெண்கள் விரும்புகிறார்கள். ஆனால் வகுப்பில் கணக்கில் எல்லா விவரமும் எழுதப்பட வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அப்படி மாணவிகள் நடக்கவில்லை.

அருதார் வகுப்பிலும் லலித்பூர் வகுப்பிலும் பெண் மாணவிகள் எல்லாரும் சேர்ந்து சத்தமாக பாடத்தைப் படிப்பதை விரும்புகிறார்கள். ஆக்கமுறை விவாதத்தை விரும்பவில்லை. மேம்பாடு பற்றிய விஷயங்களில் ஆசிரியரின் அதிகாரத்தை பெண்கள் மதிப்பதில்லை என்றா லும் ஆசிரியரை 'மிஸ்' என்று அழைத்து மரியாதை செய்கிறார்கள். பள்ளிக்கூடத்தில் போல ஆஜர் சொல்கிறார் கள். அருதாரில் பாடம் சொல்லித்தரும் அலினா மாணவிகளை விட வயதில் சிறியவள். தன்னை விட வயதில் மூத்த பெண்களைப் பள்ளிப் பிள்ளைகளைப் போல் நடத்துவாள். எல்லோரும் தன் அண்டை வீட்டினர் என்ற போதிலும் அவளுடைய ஆசிரியர்த்தனம் குறைவதில்லை.

*அலினா : பாடம் புரிஞ்சுதா? எல்லாம் சொல்லிக் கொடுத்தேன். நீங்கள் புரிந்து கொண்டீர்களா தெரியவில்லை. நாளைக்கு வரும்போது குழந்தைகளை அழைத்து வராதீர்கள். வீட்டிலே பாடம் படியுங்கள்.*

*எல்லாப் பெண்களும் சிரிப்பார்கள். படிக்க ஏது நேரம் என்பார்கள்.*

*அலினா: நீங்கள் வீட்டிலே படிக்க வில்லையென்றால் நான் பாடம் நடத்துவது எப்படி? எல்லோரும் வீட்டுக்குப் போய் கிடைக்கிற நேரத்தில் படிக்க வேண்டும். தெரிஞ்சுதா?*

இப்படி வகுப்பு நடத்தினால் பெண்கள் என்ன பயன் பெறுவார்கள்? அநேக பெண்கள் கற்பிக்கும் முறை, பாடமொழி, பாட உள்ளடக்கம் முதலியவை பற்றிக் குறை சொன்னாலும், வகுப்புகளுக்குத் தவறாமல் வந்ததைப் பார்க்கும்போது எழுத்தறிவு பெறுவதால் ஏதோ பயன் இருக்கிறது என்று அவர்கள் கருதியதாகத் தோன்றுகிறது. கணக்கு எழுதி வருவதற்கான திறமையும், புழுக்களைப் பற்றிப் படித்தறியும் திறமையும் வளர்வது கண்கூடாகத் தெரிந்தாலும், அவர்கள் அனுபவத்தில் எதை மதிக்கிறார்கள் என்பது வெளிப்படையாகத் தெரியவில்லை. சன்சாராவுடன் பேசிக் கொண்டிருக்கும்போது குழுக்கூட்ட நடவடிக்கைக் குறிப்புகளில் பெண்கள் கையொப்பமிட்டிருப்பதைக் காண்பித்தாள். மற்றொரு பக்கத்தில் கைரேகை இருப்பதைக் கண்டேன். மனைவிக்குப் பதிலாக குழுக் கூட்டத்துக்குக் கணவன் வந்தபோது கைரேகை வைத்திருக்கிறார் என்று தெரிய வந்தது. கணவன் இன்னும் கைநாட்டுப் பேர்வழியாக இருக்கும்போது மனைவி கையெழுத்துப் போடும் அளவுக்கு வந்துவிட்டாள் என்பது பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதைக் காட்டுகிற தல்லவா? ஆண்கள் தங்களுக்கு மதிப்புக் குறைவு ஏற்பட்டதாக நினைக்க வில்லை. வீட்டில் ஓர் ஆளாவது எழுதப் படிக்கத் தெரிந்திருந்தால் நல்லது என்று தான் நினைத்தார்கள். பெண்களோ எழுத்தறிவு பெற்ற பெண்கள் என்ற பெயர் பெற்று விட்டார்கள். அருதார் பள்ளிக் கூடத்தில் பெற்றோர் கூட்டம் நடந்தபோது முதியோர் வகுப்பில் படித்த தாய்மார்கள் பள்ளிப் பதிவேட்டில் கையெழுத்திடும் தகுதி வந்துவிட்டதை ஊரறியக் காட்டு வதற்காகவே அங்கு வந்தார்கள்.



© அன்னா ராமிங்கர்-பாண், சக்கம்

அருத்தார் மகளிர் குழுவின் பொருளாளர் சன்சாராவுக்கு 7 குழந்தைகள். அவற்றில் இரு குழந்தைகளுடன் இங்கு காட்சியளிக்கிறார்.

## தனிமை கிடைத்தது

அருதார் முதியோர் வகுப்பில் நான் பார்த்த ஒன்று சில பெண்கள் எழுத்தறிறை தம் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்த பயன்படுத்துகிறார்கள் என்பதைக் காட்டியது. *மிஸ்ரா என்ற பெண்மணியின் அருகில் அமர்ந்து அவளுடைய நோட்டுப் புத்தகத்தை ஓரக் கண்ணால் பார்த்தேன். தன்னைப் பற்றி ஏதோ எழுதியிருக்கிறாள். நான் பார்க்கிறேன் என்று தெரிந்ததும் அதைக் கையை வைத்து மூடி விட்டாள். ஆசிரியர் அலினா என்ன எழுதியிருக்கிறாய் என்று கேட்டதற்கு ஏதோ என் மனசிலிருந்ததை எழுதினேன் என்று மிஸ்ரா பதில் சொன்னாள். ஆயினும் எழுதியதைக் காட்ட மறுத்தாள்.* அவளு டைய கணவன் வகுப்புக்கு ஒழுங்காக வரவிடா மல் தடுத்தான் என்பது எனக்குத் தெரியும். ஆகவே அதுபற்றி ஏதோ மனதிலுள்ளதை எழுதியிருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றியது. எழுதப் படிக்கத் தெரிவதால் உள்ளத்தில் உள்ளதை எழுதித் தனிமையில் தன் ஆதங்கத்தை வெளியிட முடிகிறது. சில பெண்கள் கட்டுரைகளும் கதைகளும் முதியோர் வகுப்பு மலர்களில் எழுதியிருக்கிறார்கள். (பெட்டிச் செய்தி காண்க)

முதியோர் கல்விக்கு உதவும் முகன்மைகள்தாம் கல்வித் திட்டத்தை வகுப்பவர்களாக இருக்கிறார்கள். நேபாளத்தில் நான் பெற்ற அனுபவம், முன்னேற்றத்துக்காகப் பாடுபடுவதாகச் சொல்லிக் கொள்கிறவர்கள் பெண்கள் எங்கேயிருந்து புறப்பட்டு எங்கே போக விரும்புகிறார்கள் என்பதை

(தொடர்ச்சி ஐம்பத்திமூன்றாம் பக்கம்)

## கீழ்சாதி வாழ்க்கை

புதிதாக எழுத்தறிவு பெற்றவர்களுக்கான "குழந்தைகளைக் காப்பாற்றுங்கள்" என்ற அமைவனத்தினால் (அமெரிக்கா) வெளியிடப் பட்டுள்ள ஒரு கதைத் தொகுதி "சாங்காலோ". இதை எழுதியவர் அருத்தாரைச் சேர்ந்த சுசீலா உப்பார்கோட்டி. இதில் வரும் ஒருகதையில் இவர் கீழ்சாதிப் பெண் என்ற முறையில் தமது நிலையை விளக்கியுள்ளார்.

"நேப்பாளத்தில் 36 சாதிகள் உள்ளன; இவை அனைத்தும் ஒரு பொதுவான பூந்தோட்டம் போல் விளங்குகின்றன."[1] கீழ்சாதிகள் ஒடுக்கப்படுகின்றன. நீரூற்றுகள், சத்திரங்கள், கோயில்கள் போன்ற இடங்களுக்குச் செல்லப் பெண்களுக்கு அனுமதி இல்லை. எங்கள் சாதியினர் படிக்கக் கூடாது என்று எங்கள் பெற்றோர் எங்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள். "படிப்பதில் என்ன இருக்கிறது? சரியான வேலை கிடைக்காது" என்பார்கள். கடிதம் எழுத வேண்டுமானால் மேல் சாதியினரிடம் செல்வார்கள். ஒரு கடிதம் எழுதிவாங்க முற்பகல் முழுவதும் அவர்களுக்கு வேலை செய்ய வேண்டும். எங்கள் அவலநிலை கண்டு பெரிதும் வருந்தினோம். முதியோர் வகுப்புகளில்கூட, மேல்சாதி நண்பர்களிடமிருந்து நாங்கள் விலகியே உட்கார வேண்டும். ஆனால், படித்தபிறகு, எங்களின் பிற்பட்ட நிலைமைக்கு எங்கள் படிப்பறிவின்மையே காரணம் என்பதை உணர்ந்து கொண்டோம். இப்போது, முதியோர் வகுப்புகளில் படித்தபிறகு, நாங்கள் மனதில் உள்ளதைக் கூற முடியும்; எழுத முடியும். நாங்கள் படிப்பதையும், கடிதங்கள் எழுதுவதையும் கண்டு எங்கள் பெற்றோர் பெரிதும் மகிழ்கிறார்கள். இளஞ்சகோதரர்களையும், சகோதரிகளையும் பள்ளிக்கு அனுப்பத் தொடங்கியிருக்கிறார்கள். பள்ளிகளில் கீழ்சாதியினரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கல்வியறிவு இல்லாமையால்தான் எங்கள் மீது ஆதிக்கம் செலுத்தப்படுகிறது என்பதையும் நாங்கள் ஒடுக்கப்படுகிறோம் என்பதையும் நாங்கள் புரிந்து கொண்டோம். ■

1) நேப்பாள மன்னர் பிருதிவி நாராயண்ஷா இதைக் கூறியதாகக் கூறப்படுகிறது. அவர் 18 ஆம் நூற்றாண்டில் நேப்பாளத்தை ஒருங்கிணைத்தார்.

படிப்பகம்

www.padippakam.com

கவனம்

# இளைஞரைப் பலிகொள்ளும் ஏமக்குறை நோய் நெருக்கடி

## பொருளடக்கம்


20 ஒவ்வொரு வாய்ப்பையும் கைக்கொள்க
நேர்முகம்: பீட்டர் பியட்

22 ஏமக்குறைவு நோய்க்கு முதற்பலி: தெற்கில் சிறுமிகள்

### 1| அதிர்ச்சி மையம் ஆஃப்ரிக்கா

24 மெல்லக் கொல்லும் நோய்
டேமியன் ருவேகெரா

27 பர்க்கினோ ஃபாசோ: ஆணுறை காய்க்கும் மரம்

28 கைகொடுக்கும் நாட்டு மருத்துவர்கள்
அலாசான் சிசே

### 2| தென் கிழக்கு ஆசியா

29 மெல்லப் பிறந்திடும் துணிவு
பவனா வியன்ராவி மற்றும் கரோல் லிவிங்ஸ்டோன்

31 தாய்லாந்து: வெள்ளத்திற்கு அணைபோட முயற்சி
வான்ஃபென் சிரஷ்தாபுத்ரா

### 3| வகுப்பறைக்கு அப்பால்

32 பள்ளியில் தடுப்பு: கடினமான வழி
மோனிக் ஃபூய்லோ

34 ஆசிரியர்களுக்கு திடீர் வகுப்புகள்
ஒய்வான் மோரன்

35 உகாண்டா: ஏமக்குறைவு நோய்க்கு எதிராகப் புனிதப்போர்
மேகி கீனான் வீலர்

36 வீதிக் குழந்தைகளைச் சொந்த இடத்தில் சந்தித்தல்
கில்லெர்மினா நாவாரோ

37 ஏமக்குறைவு நோய்க் களங்கம்
ஜீன் டுசால்ட்




© யுனெஸ்கோ/டெலிவெம்

உலகளாவிய ஏமக்குறை நோய் (எய்ட்ஸ்) நிலப் படத்தில் தொழில் வளமடைந்த உலகம் தனித்து நிற்கிறது. புதிதாக நோய் பீடிப்போர் வீதத்தை அது கட்டுப்படுத்தியிருக்கிறது; புதிய எச்ஐவி எதிர்ப்பு மருந்துகளின் இணைப்புகள் மூலம் இந்நோயால் மரணமடைவோர் எண்ணிக்கையை வெகுவாகக் குறைத்திருக்கிறது. ஆனால், மற்ற இடங்களில், ஆண்டுதோறும், இது கொள்ளை நோயாகப் பரவி வருகிறது; இந்நோயாளிகள் மிகமோசமாக நடத்தப் படுகிறார்கள். முக்கியமாக, தெற்கு மற்றும் கிழக்கு ஆசியாவிலும், சகாராவையொட்டிய ஆஃப்ரிக்க நாடுகள் பலவற்றில் நிலைமை கட்டுக்கடங்காமல் போய்விட்டது. 1998இல் 60 இலட்சம் பேரை எச்ஐவி பீடித்துள்ளது. இவர்களில் 40 இலட்சம் பேர் சகாராவையொட்டிய ஆஃப்ரிக்காவைச் சேர்ந்தவர்கள். சென்ற ஆண்டில் 25 இலட்சம் பேர் ஏமக்குறை நோயால் இறந்தார்கள்; இவர்களில் 20 இலட்சம் பேர் ஆஃப்ரிக்காவைச் சேர்ந்தவர்கள் (பக்: 20-21)

இந்த நோயைத் தடுக்க அம்மைப் பால் மருந்து எதுவுமில்லை. புதிய மருந்துகளின் இணைப்புச் சிகிச்சை முறைகள் மிகுந்த செலவு பிடிக்கக் கூடியவை. இந்நோய்க்கு எதிராக இப்போதுள்ள ஒரே ஆயுதம். தடுப்புமுறைதான். புதிதாக எச்ஐவி பீடிக்கப்படுபவர்களில் பாதிப்பேர் இளைஞர்கள் என்பதால், இத்தடுப்பு முறை அதிக இன்றியமையாததாகிறது. இளைஞர்களும், வயது வந்தவர்களைவிடப் பாதுகாப்பான பாலுறவு பற்றி அறிந்து கொள்வதில் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள்.

தடுப்புக் கல்வி பயனுடையதாக இருக்க வேண்டு மானால், அது ஒவ்வொருவரின் முந்துரிமையாக இருக்க வேண்டும். "நம் கண்களை மூடிக்கொள்ளவே நாம் விரும்புகிறோம்" என்று ஐ.நா. ஏமக்குறை நோய் உதவி நிறுவன இயக்குநர் பீட்டர் பியோட் கூறுகிறார் (பக்: 18-19). ஏமக்குறைநோய் ஒரு குறியீட்டுச் சுமையைக் கொண்டிருக்கிறது. பெரும்பாலும் இந்நோய் ஒரு சமூகத் தடைக்கல்லாகக் கருதப்படுவதற்கு அது விளக்கமளிக் கிறது. முக்கியமாக, சகாராவையொட்டி ஆஃப்ரிக்காவில் இதைக் காண்கிறோம் (பக்: 30-32). ஏமக்குறைநோய் பற்றிய கல்வியில் பள்ளிகள் இப்போதுதான் கவனம் செலுத்தத் தொடங்கியிருக்கின்றன. (பக்:30-31) இந்நோயுள்ளவர்களைச் சுற்றியுள்ள களங்கம் இக்கல்வி யை மேலும் சிக்கலாக்கியுள்ளது. (பக்: 35-36).

இருந்தபோதிலும், புதிய அணுகுமுறைகள், பலனளிக் கக் கூடும். தென் கிழக்கு ஆசியாவில் (பக்: 27-28), முக்கியமாகத் தாய்லாந்தில் பலன்கள் தெளிவாகத் தெரிகின்றன. அங்கு 100% கருத்தடை உறை இயக்கம் (பக்: 29) நடந்து வருகிறது. சகாராவையொட்டிய ஆஃப்ரிக்காவிலும் திரைப்படங்கள் (பக்:25), மரபு மருத்துவர்கள் (பக்: 26), குர்ஆரான் பள்ளிகள் (பக்: 33), பள்ளி ஆசிரியர்கள் (பக்: 32) மூலம் இந்த இயக்கம் நடத்தப்படுகிறது. தென் அமெரிக்காவிலும் ஆக்கமுறை யான அறிகுறிகள் காணப்படுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com

# ஒவ்வொரு வாய்ப்பையும் கைக்கொள்க

ஏமக்குறைவுநோயை எதிர்த்துப் போராடுவதற்கு நமது பாலுறவுப் பண்பாடு அடியோடு மாறவேண்டும். இளைஞர்களின் நடத்தை முறையில் தடுப்புக் கல்வியின் தாக்கத்தை ஐ.நா. ஏமக்குறைவுநோய் உதவித் திட்ட நிருவாக இயக்குநர் வலியுறுத்துகிறார்.

ஏமக்குறைவு நோயைக் குணப்படுத்த விஞ்ஞானிகள் தவறுவார்களானால், இந்தக் கொள்ளை நோய் மனித வாழ்வில் ஒரு மென்மையான அணுகுண்டாக அமையும்.

**கென்னத் கவுண்டா, ஜாம்பியா முன்னாள் குடியரசுத் தலைவர்.**

**உலகில் புதிதாக ஹெச்.ஐ.வி தொற்றுக்கு ஆளாகிறவர்களில் பாதிப் பேர் 15 வயது முதல் 24 வயதுக்குட்பட்ட இளைஞர்களாக இருக்கிறார்களே, அது ஏன்?**

ஏனென்றால் அந்த வயதில் தான் இளைஞர்கள் பாலியலில் இறங்க முற்படுகிறார்கள். பலருடன் தொடர்பு கொள்ளவும் செய்கிறார்கள். பலருடன் உடலுறவு கொள்வதால் நோய் தொற்றும் வாய்ப்பு அதிகம். கென்யாவிலும் ஜாம்பியாவிலும் ஆராய்ச்சி நடத்தியபோது, 15 முதல் 19 வயதுக்குட்பட்ட பெண்களில் 23 விழுக்காடு பேருக்கு ஹெச்.ஐ.வி. பாசிடிவ் தொற்று இருப்பது காணப்பட்டது. பையன்களில் 3 அல்லது 4 விழுக்காடுதான் தொற்று இருந்தது. உடலள விலும், சமுதாயப் பண்பாட்டு நிலையினாலும் பெண்கள் பாதிப்புறுவது அதிகம். பெண் குறியில் இலகுவாகத் தொற்று ஏற்படும். படிப்பு போன்ற முன்னேற்றம் இல்லாத பெண்களுக்குத் தொற்றும் வாய்ப்பு அதிகம். பையன்களைவிட வயதுவந்த ஆணுடன் உடலுறவு கொள்ளும்போது தொற்று ஏற்படும். ஏனெனில் வயதுவந்த ஆண்களில் பலருக்கு எச்.ஐ.வி. பாசிடிவ் இருக்கக்கூடும்.

**எய்ட்ஸ் தடுப்புக் கல்வி இளைஞர்களுக்குப் பயன்படுகிறதா?**

வயதுவந்தவர்களைவிட தடுப்பு பற்றிய செய்திகளை இளைஞர்கள் நன்கு மனதில் வாங்கிக் கொண்டு, பாலியல் பொறுத்து பொறுப்புடன் நடந்து கொள்கிறார்கள். தடுப்புப் பிரச்சாரம் செய்யப்பட்ட நாடுகளில் 15 முதல் 24 வயதுள்ளவர் களிடம் குறைந்த அளவே தொற்று இருந்தது. கடந்த எட்டு ஆண்டுகளில் உகண்டா நாட்டு நகரப் பகுதிகளில் தொற்றுநோய்க்காரர்களின் எண்ணிக்கை 40 விழுக்காடு குறைந்தது. ஜாம்பியாவில் பள்ளியில் படிப்போர்களிடம் தொற்று பெரிதும் குறைந்தது.

இதிலிருந்து தடுப்பு பற்றிய கல்வி பயனுள்ளது என்று தெரியவரும். வளர்முக நாடுகளில் பல சிறார்கள் பள்ளி சென்று படிப்பதில்லை என்றாலும், பெரும்பான்மையோர் பள்ளியில் சேருகிறார்கள். சிறார்களின் வயதுக்கேற்ப எய்ட்ஸ் தடுப்புக் கல்வி அளித்துவிட வேண்டும். ஆரம்பப் பள்ளி முதலே அக்கல்வி அளிக்கலாம். மிகச் சிறு வயதில் பாலியல் பற்றி கல்வி அளித்தால் பாலியல் உறவுகளில் இறங்கத் தூண்டுகோல் போடுவதாக ஆகிவிடும் என்பார்கள் சிலர். பாலியலில் இறங்குமுன் பாடம் படித்து விட்டா இறங்குகிறார்கள்? தடுப்பு பற்றி கல்வி பாலியல் பொறுத்து பொறுப்புணர்வு உண்டாக்கு கிறது. அவசரப்படாமல் காலம் தாழ்ந்து பாதுகாப்பு ஏற்பாட்டுடன் பாலியலில் ஈடுபடுகிறார்கள்.

**பள்ளிகளில் எய்ட்ஸ் கல்வியில் தக்க கவனம் செலுத்துகிறார்களா?**

உண்மையைச் சொல்வதென்றால் இல்லை என்று சொல்ல வேண்டும். தொழில்வளம் மிக்க நாடுகளில்கூட அக்கறை இல்லை. இருப்பினும் சில இடங்களில் சிறப்பான பணி செய்யப்பட்டிருக்கிறது. உதாரணமாக பிரேசிலில் நல்ல கல்வித் திட்டம் கடைப்பிடிக்கப்படுகிறது. யுனெஸ்கோ ஆதரவுடன் எய்ட்ஸ் கல்வி ஆரம்பப் பள்ளி முதலே அளிக்கப்படுகிறது. ஜிம்பாப்வேயிலும் எய்ட்ஸ் கல்வி ஆரம்பப் பள்ளி முதலே அளிக்கப்படுகிறது. யுனிசெப் அங்கே உதவி செய்கிறது. உகாண்டா பள்ளிகளில் 'நேர்முகப் பேச்சு' என ஒன்று பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அதே மாதிரித் திட்டம் கென்யாவிலும் வேறு சில நாடுகளிலும் பரவியுள்ளது. பல இடங்களில் பாடத் திட்டங்களில் எய்ட்ஸ் பற்றிச் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் நடைமுறையில் பயன்படுத்துவதில்லை. போதிக்க ஆசிரியருக்கு வசதி இல்லை என்பது சரியல்ல. ஆசிரியர் வசதியைப் பயன்படுத்துவதில்லை என்பதுதான் உண்மை.

**எய்ட்ஸ் தொற்று அதிகமுள்ள நாடுகளில் புதிய தொற்று ஏற்படுவதைக் கால்வாசியாகக் குறைப்பது குறிக்கோள் என்று ஐ.நா. பொதுச்சபை அண்மையில் அறிவித்ததே. இது ஆர்வமிகுதியால் செய்யப்பட்ட அறிவிப்பில்லையா?**

ஆர்வமிகுதிதான். ஆனால் இயலாதது என்று சொல்ல முடியாது. இளைஞர் முதல் வாழ்வில் பல கட்டத்தில் உள்ளவர்கள் எல்லாம் ஈடுபட்டால் வெற்றி உண்டு என்பதை அனுபவம் காட்டுகிறது. 20 முதல் 30 வயதுள்ளவர்களை விழிப்புணர்வுக் கல்வி அளிக்க ஏற்பாடு செய்கிறோம். ஆனால் அதற்குமுன் குமரப் பருவத்தினரைக் கலந்தாலோசித்துச் செய்வதால் உற்சாகமாகச் செய்ய முடிகிறது.

**எவரேனும் தங்கள் பாலுறவு வாழ்வைத் தொடங்குவதற்கு முன்பு பாடம் படிக்கக் காத்திருந்திருக்கிறாரா? தடுப்புக் கல்வி காரணமாக, மக்கள் பாலுறவில் அதிகப் பொறுப்புடையவர்களாக நடந்து கொள்கிறார்கள் என்பது புள்ளி விவரப்படி மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. அதாவது, தற்காப்பு முறைகளைப் பயன்படுத்தி அவர்கள் பாலுறவு கொள்கிறார்கள்.**

1997 முதல் ஆண்டுதோறும் இளைஞர்களுக்காக உலக எய்ட்ஸ் முகாம் நடத்துகிறோம். இந்த ஆண்டு கால்பந்து விளையாட்டு வீரர் ரொனால்டோ கலந்து கொள்கிறார். அவர் சொல்வதை இளைஞர்கள் அக்கறையுடன் கவனிக்கிறார்கள். உகாண்டா நாட்டுப் பிரபல பாடகர் பில்லி லுட்டாயாவும் கலந்து கொண்டார். பின்னர் அவர் எய்ட்ஸ் நோய் காரணமாக இறந்தார். லுட்டாயா போன்ற எய்ட்ஸ் நோய் உள்ளவர்கள் எடுத்துச் சொல்லும்போது நல்ல பயன் உண்டாகிறது. தங்களுக்கு எய்ட்ஸ் இருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டு மற்றவருக்கு எடுத்துச் சொல்லத் தைரியம் வேண்டும். ஏனென்றால் எய்ட்ஸ் இரண்டு கொடிய முகங்களைக் கொண்டது. எய்ட்ஸ் வைரஸ் ஆளைக் கொல்வது ஒன்று. இரண்டாவது, எய்ட்ஸ நோயுள்ளவரை இகழ்ந்து சமுதாயமே கொல்வது.



படிப்பகம்

www.padippakam.com





சான் சால்வடாரில் உலக ஏமக்குறைவு நோய் விழிப்புணர்வு நாள்.

**எய்ட்ஸ் நோய் இருப்பதை ஒரு கறை என்று கொள்வதை மாற்ற முடியுமா?**

அதற்குத்தான் இப்போது முயன்று வருகிறேன். தம்மிச்சையாகப் பணிபுரிய வருவோரை பள்ளிகள், மருத்துவமனைகள், அமைச்சகங்கள் மற்ற முக்கி இடங்கள் ஆகியவற்றுக்கு அனுப்பி வைக்கிறோம். அவர்கள் தங்களுக்கு எய்ட்ஸ் இருப்பதை வெளிப்படையாக ஒப்புக்கொண்டு நோய் பற்றி எடுத்துக் கூறுகிறார்கள். இதற்கு நல்ல பலன் ஏற்படுகிறது. அப்படிப்பட்டவர்கள் பலர் மாளவி, ஜாம்பியா, தாய்லாந்து, தென் ஆஃப்ரிக்கா, புருண்டி முதலிய நாடுகளில் பணிபுரிகிறார்கள். இந்த முறையை உலகம் பூராவிலும் பயன்படுத்த எண்ணுகிறோம். ஆனால் பணிபுரிய ஆட்கள் கிடைப்பது எளிதாயில்லை.

**எய்ட்ஸ் பற்றி 20 ஆண்டுகளாகியும் இன்னும் மூடி மறைக்கப்படுவது ஏன்?**

உலக முழுவதும் அருவருப்பு இருப்பது உண்மை. அநேக சமூகங்களில் பாலியல் பற்றிப் பேசவே முடியாது. கணவன் மனைவிகூட பாலியல் பற்றி பேசுதல் இயலாது. 15 ஆண்டு களுக்கு முன் எய்ட்ஸ் பற்றி இப்போது போல் எல்லோருக்கும் விவரம் தெரியாது. ஏதோ மற்ற வர்களுக்கு வரக்கூடிய நோய் என்று ஒவ்வொரு வரும் நினைப்பது இயற்கை. ஆகவே 20 ஆண்டுகளாக கண்ணை மூடிக்கொண்டு பேசா மலிருப்பதுமேல் என்று எண்ணிவரப்பட்டது. உகாண்டா, செனகல், தாய்லாந்து போன்ற ஒரு சில நாடுகளில்தான் அரசியல் தலைவர்கள் உரிய காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ள முன் வந்தனர். ஐக்கிய அமெரிக்க மக்களாட்சித் தலைவ ராக இருந்த ரொனால்டு ரீகன் ஒருமுறை கூட வெளியே பேசும்போது 'எய்ட்ஸ்' என்னும் சொல் லைச் சொல்லவே மாட்டார். ஏழை நாடுகளில் மட்டு மல்ல செல்வ மிகுந்த அமெரிக்காவிலும் ஒரே மாதிரி கருத்துதான் நிலவியது.

இதுவரை பல நாட்டு அரசியல் தலைவர் களிடம் அவர்கள் நாட்டில் எய்ட்சினால் நிலைமை மோசமாக உள்ளது என்று கூறிவந்தேன். இப் போது அவர்கள் நடவடிக்கை எடுக்க முன் வந்துள்ளார்கள். இது பெரிய வெற்றியல்லவா?

**எப்படி இந்த மாற்றம் ஏற்பட்டது?**

சமூகங்களில் எய்ட்ஸ் பற்றிய தாக்கம் மிக அதிகமாகிவிட்டது. அதனால் அதைப் புறக் கணித்துவிட முடியாத நிலை வந்தது. நான் தற் பெருமையாகச் சொல்லவில்லை. ஐ.நா. பலரை யும் ஒன்று சேர்த்து செயல்பட்டதற்கு நல்ல பலன் ஏற்பட்டது. கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்தி எய்ட்ஸ் பற்றிச் செய்திகள் கொடுக் கிறோம். எல்லாத் துறையினரிடமும் சென்று எய்ட்ஸ் பற்றி எடுத்துக் கூறுகிறோம். சாரணர்கள், பெண் இயக்கங்கள், உழவர்கள் என்று பலதரப் பட்டவர்களிடமும் சென்று எடுத்துக் கூறுகிறோம். நானே நாட்டின் தலைவர் களையும், பெரிய நகரங்களின் மேயர்களையும், நிதி அமைச்சர் களையும், வணிகத் தலைவர்களையும், படை அதிகாரிகளையும், இசை விற்பன்னர்களையும், விளையாட்டு வீரர்களையும், கிறித்துவ மதக் குருமார்களையும், இஸ்லாமிய இமாம்களையும் நேரில் சந்தித்துப் பேசுகிறேன். அவர்கள் சமூகத் திற்கு எடுத்துச் சொல்லக் கூடியவர்கள். மதத் தலைவர்கள் எய்ட்ஸ் தடுப்பு முயற்சிகளுக்குத் தடையாக இருப்பார்கள் என்று சொல்வார்கள். ஆனால் நான் அவர்ககளை நேசத்துடன் உதவுபவர் களாகக் கருதுகிறேன்.

**அவர்கள் உண்மையில் நேசம் காட்டுகிறார்களா?**

மதத் தலைவர்கள் மக்களோடு தொடர்புடைய வர்கள். எய்ட்ஸ் தடுப்பு நடவடிக்கை பற்றி எடுத்துச் சொன்னால் நன்கு கேட்கிறார்கள். ஆட்சித்துறையில் மேலேயுள்ளவகளிடம் சென் றால் பேசி சரிக்கட்டுவது சிரமம்தான். என்றா லும், வட்டிகன் நாட்டுத் தூதர் 1999 மார்ச் மாதத் தில் நாங்கள் போனஸ் அயர்ஸில் ஏற்பாடு செய் திருந்த மாநாட்டுக்கு வந்தார். எய்ட்ஸ் நோயை எதிர்த்துப் போராடுவதில் மத அர்ச்சர்களை ஈடு படச் செய்வது மாநாட்டின் நோக்கம். மாநாடு செய்த முடிவு : பள்ளிகளில் பாலியல் கல்வி அவசியம் என்பதாகும். சில ஆண்டுகளுக்குமுன் இப்படியெல்லாம் நடக்குமா? ■

நேர்முகம்: ஜாஸ்மினா சோப்போவா,
*"யுனெஸ்கோ கூரியர்"* இதழாளர்.

## ஐ.நா.ஏமக்குறைவு நோய் உதவி: ஒருங்கிணைந்த பணி

எச்ஐவி/ஏமக்குறைவு நோய் பற்றிய ஐ.நா. வின் கூட்டுத் திட்டம் 1996 ஜனவரியில் தொடங்கப்பட்டது. இது ஒரு புதுமையான கூட்டாண்மை; இது, ஐ.நா. மேம்பாட்டுத் திட்டம், ஐ.நா. மக்கள் தொகை நிதியும், ஐ.நா. குழந்தைகள் நிதியம், உலகச் சுகாதார அமைவனம், யுனெஸ்கோ, ஐ.நா. பன்னாட்டுப் போதை மருந்துக் கட்டுப்பாட்டுத் திட்டம், உலக வங்கி ஆகிய ஏழு ஐ.நா. அமைப்புகளை ஒருங்கிணைக்கிறது. ஐ.நா. அமைப்பு முறையில் இவ்வகையைச் சேர்ந்த முதலாவது திட்டம் இது. பல்வேறு துறைகள், அரசு முதல் குடியியல் சமுதாயம் வரையிலான பல்வேறு கூட்டாளிகளின் முயற்சிகளுக்கு ஆதரவளித்து விரிவுபடுத்துவது இத்திட்டத்தின் நோக்கம். ■

**Internet: http://www.unaids.org**

படிப்பகம்

www.padippakam.com

# ஏமக்குறைவு நோய்க்கு முதற்பலி: தெற்கில் சிறுமிகள்

தீவிரமாகப் பரவிவரும் ஏமக்குறைவு நோய்க்கு, இளைஞர்கள், முக்கியமாகச் சிறுமிகள் பலியாகி வருகின்றனர். வளர்முக நாடுகளும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன.

எச்ஐவி/ஏமக்குறைவு நோய் பரவத் தொடங்கி 20 ஆண்டுகளுக்குப் பிறகு, அது ஒரு பெருகிவரும் நெருக்கடியாக வளர்ந்து வருகிறது. இளைஞர்களையும், வளர்முக உலகையும் அது அளவுக்கு அபரிமிதமாகப் பாதித்து வருகிறது. உலகெங்கும் எச்ஐவி பீடித்துள்ள 3.34 கோடிப் பேரில் மூன்றில் ஒரு பகுதியினர் 15-34 வயதுப் பிரிவைச் சேர்ந்தவர்கள். எச்ஐவி புதிதாகப் பீடிக்கப்படுவோரில் பாதிப்பேர் இந்த வயதுப் பிரிவைச் சேர்ந்தவர்க்ள். ஒவ்வொரு நிமிடமும் ஐந்து இளைஞர்களை இந்நோய் பீடிக்கிறது. மேலும், சிறுவர்களைவிடச் சிறுமிகள் நான்கைந்து மடங்கு அதிகமாக இந்நோயால் பீடிக்கப்படுவதாக ஆஃப்ரிக்காவில் நடந்த ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

1998 இல் எச்ஐவி புதிதாகப் பீடித்தவர்கள் 95% பேர் வளர்முக உலகைச் சேர்ந்தவர்கள்; இவர்களில் சகாரா சார்ந்த ஆஃப்ரிக்காவைச் சேர்ந்தவர்கள் மட்டும் 70% பேர். ஆஃப்ரிக்காவில் இன்று மிகப் பெரிய உயிர்க்கொல்லி நோயாக விளங்குவது ஏமக்குறை நோய்தான். ஆஃப்ரிக்காவில் சென்ற ஆண்டில் எச்ஐவி கண்ட சிறுவர்களில் பத்தில் ஒன்பதுபேர் 15 வயதுக்குட்பட்டவர்கள். சில ஆஃப்ரிக்க நாடுகளில் குழந்தைகள் மரணம் 1998 மட்டும் 150% அளவுக்கு உயர்ந்தது. ஏமக்குறைவு நோய் காரணமாக, ஆயுள் நீட்சிக் காலம் 20 ஆண்டுகள் வரைக் குறைந்துள்ளது. இந்த நெருக்கடியினால், பொருளாதார மேம்பாட்டிலும் பெரும்பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆசியாவில், ஏமக்குறை நோயுடன் வாழும் 72 இலட்சம் பேரில், ஐந்தில் ஒருவர் சென்ற ஆண்டில் பீடிக்கப்பட்டவர்கள்.

2020 ஆம் ஆண்டுவாக்கில் இந்த வீதம் 37.1% அளவுக்கு உயரும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. ■

### எச்ஐவி/ஏமக்குறைவுநோய் பரவல்: உலகளாவிய மதிப்பீடுகள் - 1998 டிசம்பர்

| | |
|---|---|
| **1998 இல் புதிதாகப் பீடிக்கப்பட்டவர்கள்:** | |
| மொத்தம் | 58,00,000 |
| வயதுவந்தோர் | 52,00,000 |
| மகளிர் | 21,00,000 |
| 15 வயதுக்குக் குறைந்த குழந்தைகள். | 5,90,000 |
| **எச்ஐவி/ஏமக்குறைவு நோயுடன் வாழ்பவர்கள்** | |
| மொத்தம் | 3,34,00,000 |
| வயதுவந்தோர் | 3,22,00,000 |
| மகளிர் | 1,38,00,000 |
| 15 வயதுக்குட்பட்ட குழந்தைகள் | 12,00,000 |
| **1998இல் ஏமக்குறைவு நோயினால் இறந்தோர்** | |
| மொத்தம் | 25,00,000 |
| வயதுவந்தோர் | 20,00,000 |
| மகளிர் | 9,00,000 |
| 15 வயதுக்குட்பட்ட குழந்தைகள் | 5,10,000 |
| **ஏமக்குறைவு நோய் தொடங்கியதிலிருந்து இதுவரை இறந்தோர்** | |
| மொத்தம் | 1,39,00,000 |
| வயதுவந்தோர் | 1,07,00,000 |
| மகளிர் | 47,00,000 |
| 15 வயதுக்குட்பட்ட குழந்தைகள் | 32,00,000 |

ஆதாரம்: UNAIDS

## ஏமக்குறைவுநோய்: சில தகவல்கள்

ஈட்டிய நோய்த்தடைக் காப்புக் குறைபாட்டு நோய் எனப்படும் எய்ட்ஸ் என்ற நோய், மனித நோய்த்தடைக் காப்புக் குறைபாட்டு நோய்க்கிருமி எனப்படும் எச்ஐவி கிருமிகளினால் உண்டாகிறது. இக்கிருமி, உடலிலுள்ள நோய்த் தடுப்பு அமைப்பு முறையை நலிவடையச் செய்கிறது.

ஒருவரை ஒருமுறை எச்ஐவி பீடித்துவிட்டால், அவருக்கு ஆயுள் முழுவதும் அந்தப் பீடிப்பு நீடிக்கிறது. நோய்த்தடுப்பு அமைப்பு முறை வலுவிழப்பதால் உண்டாகும் கடுமையான சந்தர்ப்பவாத நோய்களுக்கு அவர் பலியாகி விடுகிறார். நலிவுறுத்தும் நோய்க்கிருமி எதிர்ப்பு மருத்துகளினால், எச்ஐவி நோய் முன்னேற்றத்தைத் தாமதப்படுத்தலாம். ஆனால், இந்த மருந்துகள் இன்று வளர்முக உலகிலுள்ள பெரும்பாலான மக்களுக்கு இன்று கிடைக்கவில்லை. அவர்களுக்கு, சந்தர்ப்பவாத நோய்களைத் தடுப்பதற்கான மருந்துகள் கூடக் கிடைப்பதில்லை. நலிவுறுத்தும் நோய்க்கிருமி எதிர்ப்புச் சிகிச்சை கிடைக்காத தனிமனிதர்களிடம், எச்ஐவி கிருமி பீடித்து, அது கொடிய ஏமக்குறை நோயாக முதிர்ச்சியடைவதற்கு 8 ஆண்டுகள் பிடிக்கிறது. ஆனால் எச்ஐவி பீடித்த பிறகு பெரும்பாலான நோயாளிகள் ஈராண்டுகளுக்கு மேல் உயிர் பிழைப்பதில்லை.

பாதுகாப்பாற்ற பாலுறவு (கருத்தடை உறையில்லாத உறவு), சோதனை செய்யப்படாத இரத்தம் செலுத்துதல், மாசுபட்ட ஊசிகள், கர்ப்பத்தில், குழந்தை பிறக்கும்போது அல்லது தாய்ப்பால் கொடுக்கும்போது தாயிடமிருந்து குழந்தைக்கு நோய் பீடித்தல் போன்ற காரணங்களால் எச்ஐவி பரவுகிறது.

எச்ஐவி மெதுவாகச் செயற்படும் கிருமி. இது பீடிக்கப்பட்ட நோயாளிகளில் பெரும்பாலோர் ஆரோக்கியமாகத் தோன்றுவார்கள்; நோய்பீடித்த பல ஆண்டுகள் வர உடல் நலத்தோடு காணப்படுவார்கள்; தங்களிடம் எச்ஐவி கிருமி உள்ளது என்பதைக்கூட அவர்கள் அறிந்திருக்கமாட்டார்கள். எனினும், அக்கிருமியை அவர்கள் மற்றவர்களுக்குப் பரப்பி வருவார்கள். உலகிலுள்ள எச்ஐவி பீடித்தவர்களில் 90% பேர் அவர்களிடம் அந்தக்கிருமி இருப்பதை அறிந்திருக்கவில்லை என்று ஐ.நா. ஏமக்குறை நோய் உதவி நிறுவனம் மதிப்பிட்டுள்ளது. ஆய்வுக்கூடத்தில் இரத்தத்தை அல்லது எச்சிலைப் பரிசோதனை செய்து பார்ப்பதுதான் ஒருவரிடம் எச்ஐவி கிருமி உள்ளதா என்பதைக் கண்டறிய ஒரே வழி. ■


ஆதாரம் : UNAIDS

படிப்பகம்

www.padippakam.com



## ஏமக்குறைவு நோயுடன் வாழ்வோர்: மண்டலவாரி மதிப்பீடுகள்





## ஏமக்குறைவு நோயுடன் வாழ்வோர்: மண்டலவாரி மதிப்பீடுகள்

| | எச்ஐவி/ஏமக்குறைநோயுடன் வாழும் வயது வந்தோர் (15-49 வயது) (மக்கள் தொகையில் %) | எச்ஐவி கிருமி உள்ள (வயது வந்த) மகளிர் % | நோய் பரவத் தொடங்கிய காலம் | வயது வந்தவர்களிடம் எச்ஐவி ஏமக்குறை நோய் பரவும் முக்கிய |
|---|---|---|---|---|
| சகாரா சாந்த ஆஃப்ரிக்கா | 8 | 50 | 70களின் பின் - 80 களின் முன் | Hetero |
| வட ஆஃப்ரிக்கா மற்றும் மத்திய கிழக்கு | 0.13 | 20 | 80 களின் பின் | IDU, hetero |
| தெற்கு மற்றும் கிழக்கு ஆசியா | 0.69 | 25 | 80 களின் பின் | Hetero |
| கிழக்கு ஆசியா மற்றும் பசிபிக் | 0.068 | 15 | 80 களின் பின் | IDU, hetero, MSM |
| இலத்தீன் அமெரிக்கா | 0.57 | 20 | 70களின் பின் - 80 களின் முன் | MSM, IDU, hetero |
| கரிபீயன் | 1.96 | 35 | 70களின் பின் - 80 களின் முன் | Hetero, MSM |
| கிழக்கு ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியா | 0.14 | 20 | 70களின் பின் - 80 களின் முன் | IDU, MSM |
| மேற்கு ஐரோப்பா | 0.25 | 20 | 70களின் பின் - 80 களின் முன் | MSM, IDU, |
| வட அமெரிக்கா | 0.56 | 20 | 70களின் பின் - 80 களின் முன் | MSM, IDU, hetero |
| ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து | 0.1 | 5 | 70களின் பின் - 80 களின் முன் | MSM, IDU |
| மொத்தம் | 1.1 | 43 | | |

ஆதாரம்: UNAIDS, ஜெனீவா

*MSM=ஆணுடன் ஆண் பாலுறவு மூலம் பரவுதல், IDU=ஊசி மருந்துசெலுத்துவதன் மூலம் பரவுதல், Hetero=ஆண் பெண் பாலுறவு மூலம் பரவுதல்







படிப்பகம்

www.padippakam.com

# 1 | அதிர்ச்சி மையம் ஆஃப்ரிக்கா

# மெல்லக் கொல்லும் நோய்

▸ டேமியன் ருவேகெரா

**உலகளாவிய ஏமக்குறைவு நோய்ப் பரவலைப் பொறுத்தவரையில், பல்வேறு துறையினரும் தீவிரப்பங்கு கொள்ளும் பேரளவிலான, பல முனைத் தடுப்பு இயக்கம் ஒன்றைத் தொடங்குவதைத் தவிர ஆஃப்ரிக்காவுக்கு வேறு வழி ஏதுமில்லை.**

ஆஃப்ரிக்காவிலுள்ள சஹாராப் பகுதி நாடுகளில் பரவியிருக்கும் எய்ட்ஸ் தொற்றுநோய் அண்மை நூற்றாண்டுகளில் ஏற்பட்ட நோய்களுள் மிக மோசமான ஒன்றாகும். அந்தப் பகுதியில் உலக மக்கள் தொகையில் பத்திலொரு பங்கு மக்கள்தாம் வசிக்கிறார்கள். ஆனால் உலகத்தில் எய்ட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டவர்களில் மூன்றில் இரண்டு பங்குப் பேர் அப்பகுதியில் வாழ்கிறார்கள். சில நாடுகளில் அங்கே நிலைமை கட்டுக்கடங்காமல் உள்ளதாக ஐ.நா எய்ட்ஸ் அமைவனம் கூறுகிறது.

ஆஃப்ரிக்காவின் சஹாராப் பகுதி உலகத்திலேயே ஏழையாக உள்ள பகுதி. வறுமையானது நோய் நெருக்கடியை அதிகரிக்கக்கூடியதாக இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் தடுப்பு நடவடிக்கை போதுமான அளவில் இல்லை. சில ஆஃப்ரிக்க நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கையினால் விளைந்த பலனி லிருந்து அப்பகுதியிலும் அத்தகைய நடவடிக்கை எடுத்தால் நல்ல பலன் ஏற்படும் என்று சொல்லலாம்.

நோய், வலி, சாவு இவைபற்றி அப்பகுதி மக்கள் பரம்பரையாகக் கொண்டுள்ள கருத்து இன்னும் மாறாமலிருப்பது ஒரு முக்கிய பிரச்சினை. சாபத்தினால் அல்லது தெய்வ கோபத்தினால் உண்டாவது நோய் என்று மக்கள் கருதுகிறார்கள். யாரோ நஞ்சு வைத்துவிட்டதால் நோய் வந்தது என்றும் கூறுவார்கள். உடல்நலம் கெட்டு நோய் வருகிறது என்று எண்ணமாட்டார்கள்.

எய்ட்ஸ் நோய் பாலியலுடன் தொடர்பு உடையது. சாவுக்குக் காரணமாவது. ஆணின் விந்து மூலமும் பரவக்கூடியது. உடல் இரத்தத்தின் மூலம் பரவும். தாய்ப்பால் மூலம் குழந்தைக்குப் பரவும். பாலியல் சம்பந்தப்பட்டதாக இருப்பதால் எய்ட்ஸ் நோய் என ஒன்று இருக்கிறதென்று ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள் அப்பகுதி மக்கள். சில இளைஞர்கள் காதலர்களை வாழவிடாமல் அதைரியப்படுத்தும் நோய் என்று ஏளனமாகக் கூறுவார்கள். ஆரம்பத்தில் ஆஃப்ரிக்கர்களால் தான் எய்ட்ஸ் உலகில் பரவியது என்று கூறப்பட்டதால் நோய்க்கான விஞ்ஞான விளக்கங் களை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். ஆஃப்ரிக் கர்கள் குரங்குகளுடன் பாலியல் உறவு கொண்டதன் மூலம் பரவியது என்று சொல்லப் பட்டதால் பதிலுக்கு ஆஃப்ரிக்கர்கள், "வெள்ளை யர்கள் மூலம்தான் எய்ட்ஸ் வருகிறது. முக்கியமாக நாய்களை முத்தமிடவும், நாய்களோடு உடலுறவு கொள்ளவும் செய்கிற வெள்ளைக்காரப் பெண்கள் தாம் நோயுண்டாகக் காரணம்" என்று சொல்ல முற்பட்டனர்.

தடுப்பு பற்றிய கல்வியின் முதன்மை நோக்கம் தவறான கருத்துகளை நீக்குவதும் அறியாமையைப் போக்குவதும் ஆகும். இரண்டாவது நோக்கம் ஆணுறை என்பது வெள்ளைக்காரர்கள் சமாசாரம் என்று எண்ணுவதை மாற்றுவதாகும். மேலும் ஆணுறை வாங்குவதற்கு ஓர் ஆஃப்ரிக்கருக்குப் பணவசதி இராது. மாதம் 50 டாலர் சம்பாதிப்பவர் நான்கு ஆணுறைகளுக்கு 20 சென்ட் செலவழிப்பது கடினமே.

தடுப்பு பற்றிய கல்வி பயனளிக்க வேண்டுமாயின் ஆஃப்ரிக்க மக்கள் நோய் பற்றிப் பார்க்கும் மரபுமுறையையும் அவர்கள் கொண்டிருக்கும் தவறான கருத்துகளையும் தெரிந்து கொள்ள வேண்டும். நகரங்களில்கூட குமரப் பருவத்தினர் பெற்றோர்களுடன் பாலியல்பற்றிப் பேசமாட்டார்கள். சமவயதினருடன் ஒரே பாலினர் பேசக்கூடும். ஆகவே எய்ட்ஸ் கல்வி ஆண், பெண், குமரப் பருவத்தினர் ஆகியோருக்கு வெவ்வேறு விதமாக அளிக்கப்பட வேண்டும்.

வ்யதுவந்தோர் நெடுநாள் பழக்கங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். குமரப்பருவத்தினர் பாதுகாப்பான பாலியல் ஈடுபாடு கொள்ளும்படி உணர்த்தப்படவேண்டும். விழிப்புணர்வு ஊட்டி, சரியான தகவல்களைக் கூறி, கல்வி புகட்ட வேண்டும்.


ஆஃப்ரிக்க நாடுகளில் வசதிக் குறைவு உண்டெனினும் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், நோய்பற்றிய சரியான தகவல்கள் கொடுக்கவும் பெரிதும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சுவரொட்டிகள், வானொலி முதலியவை மூலமும்

▸ ருவாண்டா மானிடவியலறிஞர்; அனைத்து ஆஃப்ரிக்க ஏமக்குறைவு நோய் உதவி அமைவனத்தின் உறுப்பினர்.

படிப்பகம்

www.padippakam.com






© ராப் குர்ஸ்வி/பானோஸ் பிக்சர்ஸ், இலண்டன்

புருண்டியில் ஒரு சுவரொட்டி

நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகள் மூலமும் விளம்பரங்கள் மூலமும் மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டப்பட்டது. பத்து நாட்களில் ஆணுறை விற்பனை அதிகரித்தது. அடிக்கடி விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொண்டால்தான் பலன் ஏற்படும்.

### குருமார்கள் செல்வாக்குள்ள சமூகங்களில் இளைஞர்களுக்குப் போதனை

இளைஞர்கள்தாம் எய்ட்ஸ் நோய்க்கு ஆளாகக் கூடியவர்கள். அவர்களுக்கு நோய் பற்றி கல்வி அளிப்பது பெரிய சவாலாக இருக்கிறது. 15-லிருந்து 24 வயதுக்குட்பட்டவர்கள் தாம் உலகில் புதிதாக நோய்க்குள்ளாகிறவர்களில் பாதிப் பேர். 1998ஆம் ஆண்டில் உலகில் எய்ட்ஸ் நோய் தாக்கப்பட்டவர்களில் 90 விழுக்காடு சஹாராப் பகுதி நாடுகளில் வசிக்கும் 15 வயதுக்குட்பட்ட சிறார்களாகும். அந் நாடுகளில் பாலியல் தொடர்பு மிகச் சிறுவயதில் தொடங்கிவிடுகிறது. 12 அல்லது 13 வயதுச் சிறுமிகள் பாலியல் உறவுக்குள்ளாகிறார்கள்.

தடுப்புபற்றிய கல்விக்கு ஏற்ற இடம் பள்ளிகள். (30-31 பக்கம் பார்க்க) ஆனால் சஹாராப் பகுதி நாடுகளில் ஆரம்பப் பள்ளி வயதை எட்டியவர்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் பள்ளி சென்று படிப்பதில்லை. உயர்நிலைப் பள்ளி வயதுடையவர்களில் 80 விழுக்காடு படிக்கப் போவதில்லை. ஆஃப்ரிக்காவில், அரசாங்கம், சமுதாயம், வெளிநாட்டு உதவி எல்லாவற்றையும் ஒன்றிணைத்து செயல்பட வேண்டியுள்ளது.

அரசியல் அதிகாரமுடையவர்கள் உயர்மட்டத்திலுள்ளனர். நோய் பரவுவதில் அவர்கள் பங்கு உண்டு. பல பிரச்சினைகள் காரணமாக தடுப்பு வேலைகளில் ஈடுபட முடியவில்லை என்கிறார்கள். போர் ஏதேனும் நடைபெற்றால் எய்ட்ஸ் தடுப்பு முதன்மை பெறாது. போரில்லாத சமயம் பிரச்சினையாயிருப்பது வறுமை. அதனால் நோய் பற்றி கவனிக்க முடியாது போகிறது. தேர்தல் சமயம் என்றால் நோயைப் பற்றி எண்ணவே நேரமிராது.

"பலகாலம் எய்ட்ஸ் பற்றி கூறப்பட்டவை உண்மையாயிரா என்ற எண்ணத்தில் கண்ணை மூடிக்கொண்டு இருந்துவிட்டோம். தென் ஆஃப்ரிக்காவில் எய்ட்ஸ் அதிகமாதலால் இளைஞர்கள் ஆணுறை பயன்படுத்த வேண்டும் என்று அறிவுரை கூறினார் தபோ மெபிகி.

ஆஃப்ரிக்க அரசாங்கங்கள் எய்ட்சுக்கு முன்னுரிமை அளித்து செயல்படாவிட்டால் பயனில்லை. உகாண்டாவில் நல்ல வெற்றி விளைந்தது. 1986இல் பதவியேற்ற அதிபர் யொவேரி மியூஸ்வெனி 60 படை அதிகாரிகளைப் பயிற்சிக் ▶

## சகாரா சார்ந்த ஆஃப்ரிக்காவில் எச்ஐவி/ஏமக்குறைவு நோய்

**கடுமையாகப் பீடித்த 5 நாடுகள். . .**

**ஜிம்பாப்வே:** இதன் 1.17 கோடி மக்களில் 15 இலட்சம் பேர் எச்ஐவி/ஏமக்குறை நோயுடன் வாழ்கிறார்கள். வயது வந்தவர்கள்* எச்ஐவி பீடித்தோர் வீதம் 24.84%

**பாட்ஸ்வானா:** மொத்தம் 15 இலட்சம் மக்கள் தொகையில், 1,90,000 பேர் எச்ஐவி/ஏமக்குறை நோயுடன் வாழ்கின்றனர். வயதுவந்தவர்களின் எச்ஐவி பீடித்தோர் வீதம் 25.1%

**நமீபியா:** மொத்தம் 16 இலட்சம் மக்களில், 150,000 பேர் எச்ஐவி/ஏமக்குறைவு நோய் பீடித்தவர்கள். வயதுவந்தவர்களில் எச்ஐவி/ஏமக்குறைவு நோய் பீடித்தோர் வீதம் 19.94%

**ஜாம்பியா:** மொத்தம் மக்கள்தொகை 85 இலட்சம். இவர்களில் 7,70,000 பேர் எச்ஐவி/ஏமக்குறை நோய் கண்டவர்கள். வயதுவந்தவர்களில் எச்ஐவி/ஏமக்குறைநோய் பீடித்தோர் 19.07%

**சுவாசிலாந்து:** மொத்த மக்கள் தொகை 9,00,000. இவர்களில் 84,000 பேர் எச்ஐவி/ஏமக்குறைநோய் கண்டவர்கள். வயது வந்தவர்களில் எச்ஐவி பீடித்தோர் வீதம் 18.05%

**மிகக்குறைவாகப் பாதிக்கப்பட்ட 5 நாடுகள்**

**மடகாஸ்கர்:** மக்கள் தொகை 1.58 கோடி. இவர்களில் எச்ஐவி/ஏமக்குறை நோய் கண்டவர்கள் 8,600. வயதுவந்தவர்களில் எச்ஐவி பீடித்தவர்களின் வீதம் 0.12%

**மாரிட்டானியா:** மொத்தமக்கள் தொகை 24 இலட்சம்; எச்ஐவி/ஏமக்குறைவு நோயுடன் வாழ்பவர்கள் 6,100 பேர். வயதுவந்தவர்களில், எச்ஐவி பீடிக்கப்பட்டோர் வீதம் 0.52%

**பூமத்தியரேகை கினி:** மக்கள் தொகை 4,20,000 இவர்களில் எச்ஐவி/ஏமக்குறைவு நோய் கண்டோர் 2,400. வயதுவந்தவர்களில் எச்ஐவி பீடித்தோர் வீதம் 1.21%

**நைஜர்:** மக்கள்தொகை 98 இலட்சம். இவர்களில் எச்ஐவி/ஏமக்குறைவு நோய் கண்டவர்கள் 65,000 பேர். வயது வந்தவர்களில் எச்ஐவி கண்டவர்கள் வீதம் 1.45%

**மாலி:** மக்கள்தொகை 1.17 கோடி. இவர்களில் எச்ஐவி/ஏமக்குறைவு நோயுடன் வாழ்பவர்கள் 89,000. வயது வந்தவர்களில் எச்ஐவி பீடித்தோர் 1.67%

* வயதுவந்தவர்கள் எனும் சொல் 15-49 வயதைக் குறிக்கும்.

ஆதாரம்: UNAIDS, 1998

ஏமக்குறைவு நோய்த் தடுப்புக்காக உலகம் ஆண்டுதோறும் 150 கோடி டாலர் செலவிடுகிறது. இதில், எச்ஐவி கிருமியைப் பரப்புவோர் மிக அதிகமுள்ள சகாரா சார்ந்த ஆஃப்ரிக்காவில் ஆண்டுக்கு 20 கோடி டாலர் மட்டுமே செலவிடப்படுவது ஒரு விசித்திரமான நிலை. இத்தொகையில் 10%-ஐ ஆஃப்ரிக்க நாடுகள் வழங்குகின்றன. இது அவற்றின் ஏழ்மையைக் குறிப்பதுடன், தடுப்புக் கொள்கையில் அவை போதிய கவனம் செலுத்தாமலிருப்பதையும் காட்டுகிறது.

**டாக்டர் ஃபிரான்ஸ்வா சியேஸ், நிருவாக இயக்குநர் அனைத்து ஆஃப்ரிக்க ஏமக்குறைவு நோய் உதவி அமைவனம்**

படிப்பகம்

www.padippakam.com




© யுனெஸ்கோ/பிமிரல், ஜெனிவா

கெனியாவில் ஒரு சுவரொட்டி

▶ காக கியூபா அனுப்பினார். கியூபாவில் சோதனை செய்தபோது 20 பேருக்கு எய்ட்ஸ் இருப்பது தெரியவந்தது. உடனே அதிபர் தடுப்பு வேலைகளுக்காக நிதி ஒதுக்கினார். நல்ல பலன் ஏற்பட்டது. 1989-க்கும் 1995-க்குமிடையே 15 வயதுக்கும் 19 வயதுக்கும் இடைப்பட்ட பெண்களில் பாலியலில் ஈடுபடாதோர் 46 விழுக்காடு என்று தெரியவந்தது. முன்பு 26 விழுக்காடு சுத்தமான கன்னிகள் என்ற நிலை இருந்தது. எய்ட்ஸ் பற்றி அறிந்தபின் பாலியல் தொடர்பு கொள்ள மறுக்கும் தைரியம் ஏற்பட்டுவிட்டது.

செனகலில் மேல்மட்டத்து அரசியல் தலைவர்கள் நடவடிக்கை எடுத்து நல்ல பலன் விளைந்தது. 1998இல் 16 இலட்சம் டாலர் தடுப்புப் பிரச்சாரத்துக்கும் அதே அளவு நோயுற்றவர்களின் பராமரிப்புக்கும் ஒதுக்கப்பட்டது. ஆஃப்ரிக்காவைப் பொறுத்த அளவில் இது ஒரு பெரிய தொகையாகும்.

அரசாங்கம் தன்னளவில் செலவு செய்ய முன் வந்தால் உதவி முகன்மைகள் உதவ முன் வருகின்றன. அதற்கு மேல் பன்னாட்டு அமைவனங்களான ஐ.நா. எய்ட்ஸ், உலக சுகாதார அமைவனம், யுனெஸ்கோ ஆகியவை உதவக் கூடியவை. எய்ட்ஸ் பிரச்சினைபற்ற ஆஃப்ரிக்க தலைவர்கள் நன்கு உணர்ந்தால் செயலில் ஈடுபட இயலுகிறது. போட்ஸ்வானா, கென்யா, மாளவி, உகாண்டா ஆகிய நாடுகள் தவிர மற்ற ஆஃப்ரிக்க நாடுகள் ஒவ்வொன்றும் 1996-இல் சுமார் 10 லட்சம் டாலர் தடுப்பு நடவடிக்கைக்காக செலவழிக்க முன் வந்தன.

ஆன்மிகத் தலைவர்களும் மரபுமுறைத் தலைவர்களும் ஆஃப்ரிக்காவிலும் பெரிதும் மதிக்கப் படுகிறார்கள். மதம் அங்கே எய்ட்சுக்கு எதிராகப் போராடுவதற்கு உதவி செய்வதைவிட தொந்தரவே செய்தது. ஆணுறை உபயோகிப்பது பாவம் என்று சொன்னால் கத்தோலிக்கர் எவரும் அதைப் பயன்படுத்தமாட்டார். இமாம் எய்ட்ஸ் பற்றிப் பேசமாட்டார் என்றால் முஸ்லிமும் ஆணுறைப் பக்கம் போகமாட்டார்.

1997-இல் செனகலிலுள்ள டாகர் ஊரில் எய்ட்ஸ் பற்றிய மாநாடு நடந்தது. இஸ்லாம் மற்றும் கிறித்துவ மதங்களின் பிரதிநிதிகளாக 300 பேர் ஆஃப்ரிக்கா, ஐரோப்பா, மத்திய கிழக்கு ஆகியவற்றிலிருந்து வந்திருந்தார்கள். ஆட்களைச் சேர்த்ததே பெரிய சாதனையாக விளங்கியது. காரசாரமான விவாதங்களுக்குப்பின் எய்ட்ஸ் என்பது ஒரு நோய் என்பதும் அதற்கு மருத்துவம் செய்தல் வேண்டும் என்பதும் ஒப்புக் கொள்ளப் பட்டது. இப்போது ஆஃப்ரிக்க கண்டத்தில் மதத் தலைவர்கள் எய்ட்சுக்கு எதிரான நடவடிக்கைகளில் கலந்து கொள்கிறார்கள்.

எய்ட்ஸ் நோய்க்குச் சரியான மருந்து இல்லாததால் மரபுவழித் தலைவர்களைக் கொண்டு இறந்த மூதாதையர்களின் ஆவியிடம் உத்தரவு பெறுவதற்கு மக்கள் முற்படுகிறார்கள். மனைவி இறந்தால் மனைவியின் தங்கையை மறுமணம் செய்வதும், கணவன் இறந்தால் அவனுடைய தம்பியை மறுமணம் செய்வதும் உண்டு. இம் மாதிரிச் செய்வதால் எய்ட்ஸ் பரவ வாய்ப்பு உண்டு. மரபுவழித் தலைவர்கள் எய்ட்ஸ் தடுப்புக்கு உதவ விரும்பினால் மாற்றுவழிகளை எடுத்துக் கூறலாம்.

## வழக்காறுகள்

ஆஃப்ரிக்க மக்கள் நாட்டு மருத்துவர்களிடம் பண்டுவத்துக்குச் செல்வது வழக்கம். அப்படிப்பட்ட மரபுவழி நோய்தீர்ப்போர் நைஜீரியாவில் மட்டும் ஏழு இலட்சம் பேர் இருக்கிறார்கள். ஆனால் 12 கோடி மக்களுக்கு அங்கே 20,000 மருத்துவர்கள்தாம் இருக்கிறார்கள். நோய் தீர்ப்போருக்கு எய்ட்ஸ் பற்றி எடுத்துக்கூறி, பொறுப்புள்ளவர்களாக ஆக்குவதற்கு பல திட்டங்கள் வகுக்கப்பட்டன. உதாரணமாக, 1995-96 ஆண்டில் தென்ஆஃப்ரிக்க எய்ட்ஸ் நிறுவனம் ஐந்து இலட்சம் பண்டுவர்களையும் 650 கழகங்களையும் தொடர்பு கொண்டு, நோயின் அறிகுறி சிலவற்றைத் தீர்க்கலாமேயொழிய நோயினைத் தீர்க்க முடியும் என்று வாதிட்டார்கள்.

பரம்பரை வைத்திய முறைகளிலும் சுன்னத்து போன்ற காரியங்களிலும் உள்ள ஆபத்துகளை உணரச் செய்ய ஜிம்பாப்வே தேசிய மரபுவழி நோய் தீர்ப்போர் சங்கம் 500 பயிலரங்குகள் நடத்தியது. அந்த அளவுக்கு மாற்றம் ஏற்பட்டது.

தடுப்பு பற்றிய கல்வியே ஆஃப்ரிக்காவில் பயனளிக்கக்கூடியது. மருத்துவம் பார்ப்பதும் நடைபெற வேண்டும். மருந்துகள் மற்றவர்களுக்கு, உங்களுக்கு ஆணுறை மட்டும் என்று ஆஃப்ரிக்கர்களிடம் சொல்லிக் கொண்டிருப்பது சரியன்று. மருத்துவத்துக்கு வசதி செய்வதால் தடுப்பு வேலையும் பலப்படுகிறது. மருத்துவம் செய்துகொள்ளாத எய்ட்ஸ் நோயாளி மற்றவர்களுக்கு நோய் பரப்பக்கூடியவனாக இருப்பான். எனவே மருத்தவமும் தேவை, பாதுகாப்பு மற்றும் தடுப்பு ஏற்பாடுகளும் தேவை. ■

தமிழில் : கு. ராஜாராம்

அது நம் காலத்துப்
பொருள்....
காதல் சந்திப்புகளில்
தவிர்க்க முடியாத ஒரு
துணைச் சாதனம். நிமிட
நேரப் புணர்ச்சி
மகிழ்ச்சியில் தொல்லை
தரும் தோழன். மிக
அற்பமானது; ஆனாலும்
அவசியமானது.
அதுதான் பாலுறவு
உறை.

"பாதுகாப்புடன் போ!"
லிப்ரியோ/சிடாக்ஷன்,
பாரிஸ், 1999



படிப்பகம்

www.padippakam.com



# பர்க்கினோ ஃபாசோ: ஆணுறை காய்க்கும் மரம்

**திரைப்பட இயக்குநர் ஃபான்டா ரெஜினா, விருப்பு வெறுப்புகளை எதிர்த்துச் சிரிப்பினால் போராடுகிறார். அதில் வலுவான செய்தியையும் கொடுக்கிறார்.**

பர்கினா பாஸோ நாட்டைச் சேர்ந்த ஒவ்காடெவ்கெவ் எனும் ஊரில் வசிப்பவர் கொனாட்டே. அவருக்கு இரண்டு மனைவிகள். இருவருள் ஒருத்தி தன் உறவுக்காரப்பெண் எய்ட்ஸ் நோய் பற்றிச் சொன்னதைக் கேட்டபின் கணவனிடம் ஆணுறை உபயோகிக்கும்படி கேட்டுக் கொண்டாள். கலங்கிப்போன கொனாட்டே தன் நண்பர்களிடம் ஆணுறைபற்றி விசாரித்தான். அவர்கள் அவனைக் கேலி செய்தார்கள். அவனும் ஆணுறை அணிவது தன் பெருமைக்கு இழுக்கு என்று நினைத்தான். கவலைக்கு ஆளான கொனாட்டே வெகுவிரைவில் புணரலாற்றல் அற்றவனாகிப் போனான்.

அப்புறம் உள்ளூர் மந்திரவாதியும் வைத்தியருமான பெரியவரிடம் போனான். அவர் அந்தப் பொருள் (ஆணுறை) வளரும் மரத்தைக் கண்டு பிடித்து அதனடியில் அமர்ந்து பூசை செய்யச் சொன்னார். கொனாட்டே அந்த மரத்தைச் தேடிச் சென்றான்.

இப்படிச் செல்கிறது கொனாட்டே தேடிய பொருள் என்னும் சினிமா. எய்ட்ஸ் தடுப்பு பற்றி நகைச்சுவையாக எடுத்த படம், அப்படத்தை இயக்கியவர் 36 வயதான பான்ட்டா ரெஜினா நக்ரோ எனும் பெண்மணி. ஏன் அப்படிப்பட்ட படத்தை எடுத்தேன் என்பது பற்றி அவர் கூறுகிறார்;

**எய்ட்ஸ் என்னும் அவலத்தைப் பற்றிப் படம் எடுக்கும்போது ஏன் நகைச்சுவையைக் கையாண்டீர்கள்?**

எய்ட்ஸ் பற்றிப் பயந்து சாவதால் பயன் இல்லை, அவலத்தைப் பற்றிச் சொன்னால் மக்கள் ஓடிவிடுவார்கள். ஆனால் நகைச்சுவை கலந்து கொடுத்தால் மக்கள் கவனித்துப் பயன் பெறுவார்கள். நான் ஆஃப்ரிக்கப் பெண் ஆனதால் எனக்கு எய்ட்ஸ் பற்றி மிகுந்த அக்கறை உண்டு. சினிமாவைப் பயன்படுத்தி எய்ட்ஸ் தடுப்புக்கு உதவலாம் என்று எண்ணினேன். சினிமா சிறந்த சாதனம். என்னுடைய மக்களின் சிந்தனை எப்படியிருக்கும் என்று எனக்குத் தெரியும். சும்மா "ஆணுறை அணியுங்கள்" என்று கூறினாலும் அணியாவிட்டால் ஏற்படும் ஆபத்தைப் பற்றிச் சொல்லிவிட்டு உருக்கமாக ஆணுறையின் அவசியத்தைக் கூறினாலும் பயன் இராது. பரம்பரை மனப்பான்மை பற்றி எனக்குத் தெரியும். அதனால் வேறு வழியில் சென்றேன். நகைச்சுவை மூலம் தவறான கருத்துகளை எளிதில் போக்கலாம்.

**உங்கள் படத்தில் எத்தனையோ கேள்விகள் எழுப்பியுள்ளீர்கள். ஆனால் எய்ட்ஸ் தொற்றினால் பாதிப்புறக்கூடிய இளைஞர்களுக்கு நேரடியாக எதுவும் சொல்லவில்லையே, ஏன்?** உண்மைதான். நேரடியாக எதையும் கூறினால் இளைஞர்கள் ஒழுக்கம் இழக்க நேரிடும் என்று என்னிடம் கூறினார்கள். ஆகவே அதை விட்டுவிட்டேன். இந்தப் பிரச்னையில் வெளிவேடம் போடுவோரை நிறையக் காணலாம். சுகாதாரத்துறை அதிகாரிகளும் சமுதாய அமைவனத்தைச் சேர்ந்தவர்களும் இளைஞர் பற்றிப் பேசுவதைத் தவிர்க்கிறார்கள். விழிப்புணர்வுக் கூட்டங்களுக்குக் குழந்தைகள் வந்து உட்கார்ந்து விடுகிறார்கள். அவர்களை யாரும் விரட்டுவதில்லை. அவர்கள் ஆணுறை அணிவது எப்படி என்பதைத் தெரிந்து கொள்வது நல்லதுதான். என்னுடைய சினிமாவைப் பலரும் பார்க்க வசதி உண்டாக்குகிறேன். அதனால் பர்கினா பாஸோவிலுள்ள இளைஞர்கள் பார்க்க முடிகிறது. தொலைக்காட்சியில் என் படம் காட்டப்பட்டது. ஆனால் மக்களில் பலரிடம் தொலைக்காட்சிப் பெட்டி இல்லை. அதனால் ஊர் ஊராகச் செல்லும் சினிமா பயனுள்ளதாக இருக்கும். நகரங்களிலும் கிராமங்களிலும் சினிமாப் படம் காண்பிப்பதோடு கலந்துரையாடவும் வாய்ப்பு உண்டாக்குவது நலம்.

**கருத்தடைச் சாதனங்கள் விற்பனை செய்ய எந்திரங்கள் இல்லாத ஆஃப்ரிக்க நாடுகளில், மக்கள் – குறிப்பாக இளைஞர்கள் – அவற்றை வாங்கத் துணிவதில்லை.**

**உங்களுக்கு எவ்வளவுதூரம் வெற்றி கிடைத்திருக்கிறது?**

தானியங்கி எந்திரத்தின் மூலம் ஆணுறை விற்கும் வசதி ஆஃப்ரிக்காவில் இல்லாததால், மக்கள் கடைக்குச் சென்று கேட்டு வாங்கக் கூசுகிறார்கள். ஆகவே இனாமாக ஆணுறை வழங்குகிறோம் அல்லது உரிய பணம் கொடுக்கிறோம். ஆணுறைப் பெட்டி கொடுத்தால் வாங்குபவர் மகிழ்ச்சியடைகிறார். பணமாகக் கொடுத்தால் அவர் கடைக்குப் போய் வாங்கக் கூசுகிறார். என் படத்தைப் பார்த்து சிறுவர்கள் கடைக்குப் போய் 'கொனாட்டே சமாசாரம்' கொடு என்று கேட்டு வாங்குகிறார்கள். இந்த அளவு வெற்றி கிடைத்ததை நான் படம் தயாரித்ததற்காகப் பெற்ற பரிசைவிட முக்கியமானதாக நான் கருதுகிறேன்.

**நேர்முகம்: ஜாஸ்மினா சோப்போவா ■**

**பர்க்கினோ ஃபாசோவில் எச்ஐவி/ஏமக்குறைவு நோய்**

மொத்த மக்கள் தொகை 1.1 கோடி. இவர்களில் 3,70,000 பேர் எச்ஐவி/ஏமக்குறைவு நோயுடன் வாழ்கின்றனர். 15-49 வயதுப் பிரிவைச் சேர்ந்த வயதுவந்தவர்களில் எச்ஐவி கண்டவர்கள் வீதம் 7.17% இது 15 வயதுக்குட்பட்ட 22,000 குழந்தைகளுக்கும் இந்நோய் உள்ளது. இதுவரை இந்நோய்க்கு 2,50,000 பேர் பலியாகியுள்ளனர்.

ஆதாரம்: UNAIDS, 1998

எத்தியோப்பியாவில் ஏமக்குறை நோய்த் தடுப்புப் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாகப் பொம்மலாட்டம் பயன்படுத்தப்படுகிறது.



© லிபா டெய்லர்/பானோஸ் பிக்சர்ஸ், இலண்டன்

படிப்பகம்

www.padippakam.com

# கைகொடுக்கும் நாட்டு மருத்துவர்கள்

அலாசான் சிசே

**ஆஃப்ரிக்காவில், நவீன மருத்துவர்களை விட அதிக எண்ணிக்கையிலுள்ள மரபு நாட்டு மருத்துவர்கள், ஏமக்குறைவு நோய் எதிர்ப்புப் போராட்டத்தில் முக்கியப் பங்கேற்று வருகிறார்கள்.**

**செனகலில் எச்ஐவி/ஏமக்குறைவு நோய்**

மொத்த மக்கள் தொகை 87 இலட்சம். இவர்களில் 75,000 பேர் எச்ஐவி/ஏமக்குறைவு நோயுடன் வாழ்கிறார்கள். 15-49 வயதுப் பிரிவைச் சேர்ந்த வயதுவந்தவர்களில் எச்ஐவி பீடித்தோர் வீதம் 1.77% இத்துடன், 3,800 குழந்தைகளுக்கும் இந்நோய் உள்ளது. இந்நோய் தொடங்கியதிலிருந்து இந்நோயினால் இறந்தோர் எண்ணிக்கை தெரியவில்லை.

ஆதாரம்: UNAIDS, 1998

"என் எலும்பெல்லாம் தெரிகிறது பாருங்கள். கண்பார்வை மங்கி கிட்டத்தட்ட குருடனாகி விட்டேன்" என்றார் 12 ஆண்டுகளாக எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டிருந்த அமடௌ செள என்பவர். இந்த நிலையில் மலங்கோ மருத்துவரிடம் சென்றார். மலங்கோ மருத்துவம் என்பது நோய் தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செய்யும் முறையைக் கையாள்வதாகும். "மலங்கோ மருத்துவம் செய்தபின் கண்பார்வை சரியாயிற்று. உடல் எடை கூடிற்று. முன்னைவிட எவ்வளவோ உடல் நிலை தேர்ந்தது" என்று அமடௌ செள கூறினார். என்றாலும் அமடௌ செளக்குத் தெரியும் தனக்கு எய்ட்ஸ் நோய் முற்றிலும் குணமாகவில்லை என்று.

செனகல் நாட்டின் பாதிக் பகுதி தலைநகரிலிருந்து 150 கி.மீ தூரத்தில் உள்ளது. அங்கு 1983-இல் மலங்கோ சங்கம் உருவாக்கப் பட்டது. மரபு வழியில் மருத்துவம் செய்பவர்கள் அச்சங்கத்தில் 450 பேர் உறுப்பினர்களாக இருந்தார்கள். அவர்கள் 264 கிராமங்களில் மருத்துவம் பார்க்கிறவர்கள். அவர்களில் ஐந்தில் ஒரு பங்கினர் பெண்கள். எந்த வியாதிக்கும் இயற்கையில் மருந்து இருக்கிறது என்பது அவர்கள் சித்தாந்தம். சூரணங்கள், கஷாயங்கள் முதலிய வற்றை அவர்கள் மருந்தாகக் கொடுப்பார்கள். அத்துடன் ஆவிகளையும் நோய் நீக்கியாகப் பாவிப்பது அவர்களுடைய வழக்கம். எல்லா உயிர்களும் ஆன்மிகச் சக்தியினால் உருவாக் கப்படுகின்றன; உயிரில்லாத இயற்கைப் பொருள் களுக்கும் ஆன்மா உண்டு எனும் கொள்கையு டையவர்கள் அம்மருத்துவர்கள். அண்டச் சங்கிலித் தொடரில் உள்ள கீழினங்கள் (அதாவது கனி மங்கள், தாவரங்கள் மற்றும் விலங்குகள்) மேலினத்துடன் (அதாவது ஆவிகள், மூதாதை யர்கள், தெய்வங்கள்) சேர்வதற்கு இணைப்பாக இருப்பவர்கள் மனிதர்கள் என்பதால் நோய் தீர்வதற்கு அந்த எல்லாவற்றையும் எல்லோரையும் வழிபட வேண்டும் என்பதும் அவர்களுடைய கொள்கைகளாகும்.

மற்ற நாடுகளில் நாட்டு மருத்துவர்கள் எய்ட்ஸ் நோயை முற்றிலும் குணமாக்கிவிட முடியும் என்று பெருமை பேசுவார்கள். ஆனால் மலங்கோ மருத்துவர்கள் அவ்வாறு கூறுவதில்லை. எய்ட்ஸ் நோய் வந்தவர்களிடம் உள்ள வயிற்றுப் போக்கு, வாந்தி, வெள்ளைய அணுமிகும் நோய் போன்றவற்றை நீக்கி துன்பத்தைக் குறைப்பார்கள் மலங்கோ மருத்துவர்கள். தங்களால் முடியவில்லை என்றால் ஆங்கில மருத்துவரிடம் போகச் சொல்வார்கள். செனகல் நோயாளிகள் மட்டுமின்றி மற்ற ஆஃப்ரிக்க நாடுகள், ஐரோப்பா, ஐக்கிய அமெரிக்கா முதலியவற்றிலிருந்து வந்த நோயாளிகள் 10,000 பேருக்கு மருத்துவம் பார்த்திருக்கிறார்கள்.

ஏதேனுமொரு மட்டுமீறிய தொழில்நுட்ப இரகசிய ஆயுதத்தை நாம் கண்டுபிடிக்கத் தேவையில்லை. தேவையான விடைகள் ஆஃப்ரிக்காவிலேயே உள்ளன.

பீட்டர் பியோட்,
நிருவாக இயக்குநர், UNAIDS
(1949)

## சாலையில் முதல் நிறுத்தம்

செனகல் மக்களில் முக்கால் வாசிப்பேர் மரபுவழி நாட்டு மருத்துவர்களிடம்தான் போகிறார்கள். "ஆங்கில மருத்துவர் இலட்சம் பேருக்கு ஒருவர் இருக்கிறார். நாட்டு மருத்துவர் ஆயிரம் பேருக்கு ஒருவர் இருக்கிறார்" என்கிறார் மேற்கத்திய மருத்துவம் பயின்ற டாக்டர் எரிக் குபோடெவ்செவ். மரபு வழி மருத்துவர்கள் சில நோய்களைக் குணப்படுத்துகிறார்கள் என்றும் தடுப்பு பற்றியும் கவனம் செலுத்துகிறார்கள் என்றும் அவர் கூறுகிறார். எய்ட்ஸ் நோயாளியிடம் மற்றவர்களிடம் உடலுறவு கொண்டு நோயைப் பரப்ப வேண்டாம் என்று மலங்கோ மருத்துவர்கள் அறிவுரை கூறுகிறார்கள் என்றார். மரபுவழி மருத்துவர்களின் அறிவுரை வாய்மூலம் பரவி பலருக்கும் எட்டுகிறது.

1998-இல் சாம்பே கிராமத்தில் இரண்டு அரசு சாரா அமைவனங்கள் சேர்ந்து நடத்திய எய்ட்ஸ் கருத்தரங்கில் மரபுவழி மருத்துவர்கள் கலந்து கொண்டனர். 35 மருத்துவர்கள்தாம் வந்தனர். தகவல் பயிலரங்குகள், விவாதங்கள், செய்திப் படங்கள் போன்றவை தடுப்பு முயற்சிகளின்

**"சில பகுதிகளில், 1,00,000 பேருக்கு ஒரு மருத்துவர் வீதம் உள்ளனர்; 1000 பேருக்கு ஒரு மரபு நாட்டு மருத்துவர் வீதம் இருக்கின்றனர்."**

அவசியத்தை எடுத்துக்காட்டியதை அவர்கள் கவனித்தார்கள். "நாட்டு வைத்தியர்களை விழிப்புணர்வு நடவடிக்கைகளளளில் சரிவரப் பயன்படுத்தாமலிருக்கிறோம். அந்த முயற்சிப் பாதையில் முதல் நிறுத்தம் அவர்களே. அவர்களைப் பயன்படுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது" என்று கூறினார் டாக்டர் முஸ்தபா கய்யி என்பவர்.

செனகலின் தலைநகர் டாக்காரில் சென்ற 1999 மார்ச் மாதம் நடைபெற்ற மரபுவழி மருந்து பற்றிய மாநாட்டில் நாட்டு மருத்துவர்கள் முக்கிய பங்கு ஆற்றமுடியும் என்பது ஒப்புக் கொள்ளப் பட்டது. மாநாட்டுக்கு 250 ஆங்கில மருத்துவர்களும் 200 நாட்டு வைத்தியர்களும் வந்திருந்தார்கள். அரசியலாரும், பத்திரிகையாளர்களும், 30 நாடுகளிலிருந்து எய்ட்ஸ் நோயாளிகளும் வந்திருந்தனர். விவாதங்களின் முடிவில் ஐ.நா. எய்ட்ஸ் திட்டங்களில் பங்கு கொள்ளுமாறும், எய்ட்ஸ் பற்றிய அடுத்த உலகளாவிய மாநாடு தென் ஆஃப்ரிக்காவிலுள்ள டர்பனில் 2000 ஆவது ஜூலையில் நடைபெறுவதிலும் கலந்து கொள்ளுமாறும் நாட்டு வைத்தியர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. ■

இதழாளர், டாகர் (செனகல்)

-தமிழில்: கு.ராஜாராம்

படிப்பகம்

www.padippakam.com



# 2 | தென் கிழக்கு ஆசியா

# மெல்லப் பிறந்திடும் துணிவு


◗ பவானா வியன்ராவி மற்றும் கரோல் லிவிங்ஸ்டோன்

**ஏமக்குறைவு நோய்த் தடுப்பு பற்றிய செய்தியைப் பரப்புவதில் செய்தித் தொடர்புச் சாதனங்களின் ஆற்றலை இந்த மண்டலம் மேன்மேலும் அதிகமாகப் பயன்படுத்தி வருகிறது. அதே சமயம், மரபுத் தடைக்கட்டுகள், கல்வித் திட்டங்களுக்குத் தொடர்ந்து தடங்கல் செய்கின்றன.**

எம்.டி.வி. ஆசியா என்னும் தொலைக்காட்சி இப்போது எய்ட்ஸ் தடுப்புப் பிரச்சார நிகழ்ச்சி ஒன்றை ஒளிபரப்புகிறது. மிக நவீனமான அருமையான நிகழ்ச்சியாக உள்ளது. பெரிய நகரங்களில் உள்ள வசதிபடைத்த இளைஞர்கள் எம்.டி.வி பார்க்கிறார்கள். அவர்கள் எய்ட்ஸ் தடுப்பு நிகழ்ச்சியினால் பெரிதும் பயன் அடைகிறார்கள். வசதி படைத்தவர்களாதலின் ஆணுறை வாங்கி தங்களைக் காத்துக் கொள்ளக் கூடியவர்கள் அவர்கள். ஆசியாவின் அடுத்த தலைமுறையில் தலைவர்களாகக் கூடியவர்கள் பலர் அந்த இளைஞர்களில் அடக்கம்.

தென்கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த மெகாங் பகுதியிலுள்ள இளைஞர்களில் பெரும்பாலோர் வசதியற்றவர்கள். கிராமங்களில் வேலை செய்பவர்களும், பெரிய நகரங்களில் தொழிற்சாலைகளில் புதிதாகத் தொழிலாளியாகச் சேர்ந்தவர்களும், தினக் கூலிகளும் எம்.டி.வி. பார்க்க வாய்ப்பு இல்லாதவர்கள். பள்ளிகளில் ஆறாம் வகுப்புக்கு மேலேதான் எய்ட்ஸ் பற்றிய கல்வி அளிக்கப்படுகிறது. அநேகர் ஆறாம் வகுப்புக்கு மேல் தொடர்ந்து படிக்கிறார்கள். இவ்வாறு பல இளைஞர்களுக்கு எய்ட்ஸ் பற்றிய கல்வி கிடைக்காமல் போகிறது.

வியட்னாமில் ஒரு சுவரொட்டி




© நிக் டன்லப் / பானோஸ் பிக்சர்ஸ், இலண்டன்

ஆசியாவின் தென்கிழக்குப் பகுதியில் எய்ட்ஸ் தடுப்பு நிகழ்ச்சிகள் நடத்த மரபு வழி அருவை தடங்கலாக இருக்கிறது. பாலியல் கல்வி இளைஞர்களுக்கு அவசியம் என்று யாரும் கருதவில்லை. பெற்றோர்கள் தாம் தங்கள் மகன் அல்லது மகளுக்குத் திருமணம் நிச்சயிக்கிறார்கள். கம்போடியா, மியான்மர் போன்ற நாடுகளில் பெரியோர் நிச்சயித்த திருமணங்களே நடைபெறுகின்றன. 'நல்ல' பெண் எனப்படுபவள் திருமணத்துக்குமுன் பாலியல் உறவில் ஈடுபட்டிருக்கவே கூடாது. திருமணத்துக்கு முன் பாலியல் உறவு கொள்வது ஒத்துக்கொள்ளப்படக் கூடியதன்று.

### கிலி ஊட்டுதல்

எல்லா நாடுகளிலும் போல தென்கிழக்கு ஆசியாவிலுள்ள ஆசிரியர்களும் மாணாக்கர்களும் பாலியல் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதற்குச் சங்கடப்படுகிறார்கள். ஆசிரியர்களுக்கு மாணாக்கர்களிடம் எவ்வாறு பாலியல் பற்றி விவாதிப்பது என்று பயிற்சி அளிக்க வந்தவர்கள் அந்த ஆசிரியர்கள். ஆணுறை எதையும் கையால் தொட்டதுகூட கிடையாது என்பதையும், பயிற்சியின்போது ஆசிரியர்கள் மிகவும் நெளிவதையும் கண்டு வியந்தார்கள். பாலியல் பற்றி வெளிப்படையாகப் பேசும் பழக்கமற்ற சூழல்தான் தென்கிழக்கு ஆசியாவில் உள்ளது. அரசு சாரா அமைவனங்கள் தாம் எய்ட்ஸ் பற்றி கல்வி அளிக்க வேண்டியிருக்கிறது. கல்வி அளிக்கும்போது பாலியல் உறவு கொண்டாலோ போதை மருந்து ஊசி போட்டுக் கொண்டாலோ எய்ட்ஸ் வந்து சாக வேண்டியதுதான் என்று கூறி அச்சுறுத்த வேண்டியிருக்கிறது. பரம்பரையாக உள்ள அருவருப்புகள் பாலியல் மற்றும் எய்ட்ஸ் பற்றிக் கல்வி அளிப்பதற்குத் தடங்கல்களாக உள்ளன. மியான்மர் நாட்டில் 1992 வரை ஆணுறை பயன்படுத்துவது சட்ட விரோதம் என்று சொல்லப்பட்டது. சில நாடுகளில் ஒரு பெண் பாலியல் உறை கொண்டு போவதைப் பார்த்தால் அவளை மக்களும் காவல் துறையும் விபச்சாரி என்று சொல்லிவிடுகிறார்கள்.

இளைஞர்களுக்கு எய்ட்ஸ் பற்றிய கல்வி அளிக்குமுன் அவர்களுடைய பாலியல் வாழ்க்கை பற்றித் தெரிந்துகொண்டு, அவர்களுக்குப் பயன்படும் வகையில் கல்வி அளிக்க வேண்டும். இப்போதெல்லாம் தென்கிழக்கு ஆசியாவில் எவ்வளவோ மாற்றங்கள் வந்துவிட்டன. இளம் தம்பதிகள் இப்போது கைகோர்த்துச் செல்லலாம். ▶

◗ முறையே உரிய சுகாதாரத் தொழில் நுட்பத்தின் தொழில் நுட்ப ஆலோசகர் மற்றும் பாங்காக்கிலுள்ள இதழாளர்.

படிப்பகம்

www.padippakam.com

20 ஆண்டுகளுக்குமுன் அப்படிச் செய்ய முடியாது. தாய்லாந்தில் அவரவர்களே வாழ்க்கைத் துணையைத் தேடிக்கொள்ளும் நிலை வந்துள்ளது. பாலியல் வாழ்க்கையின் ஒரு அம்சம் என்பதைக் குறிக்கும் அளவுக்கு விளம்பரங்கள் அமைந்திருக்கின்றன.

இருந்தும் மரபுக் கொள்கைகள் இருந்து வருகின்றன. பெண் கன்னித்தன்மை கெடாது இருப்பதை முக்கியமாகக் கருதுவதால், இளம் வயதினர் பரத்தையரில்லம் செல்வதைப் பெரிய குற்றமாகக் கருதுவதில்லை. பாலியல் தொழில் தென்கிழக்கு ஆசியாவில் எய்ட்ஸ் பரவக் காரணமாக உள்ளது. தாய்லாந்தில் பெண்களைவிட ஆண்கள் அதிகமாக எய்ட்ஸ் நோய்க்குள்ளாகிறார்கள். 2005-ஆம் ஆண்டு வாக்கில் இது சம விகிதமாகி விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தாய்லாந்தின் வடபகுதியிலுள்ள பரத்தையரில் 44 விழுக்காட்டினர் எய்ட்ஸ் நோய் உடையவர்கள். கம்போடியாவில் சில பகுதியில் பரத்தையரில் 60 விழுக்காடு எய்ட்ஸ் நோயினால் பீடிக்கப்படுகிறார்கள்.

### பரத்தமை பற்றி

கம்போடியாவில் 13 வயதிலே அல்லது இன்னும் குறைந்த வயதிலே பரத்தமைத் தொழில் மேற்கொள்ளப்படுகிறது. மிகச் சிறுவயதுப் பெண்ணோடு உடலுறவு கொண்டால் எய்ட்ஸ் வராது என்று பரத்தையரின் வாடிக்கையாளர்கள் நினைக்கிறார்கள். கம்போடியாவில் பரத்தமைத் தொழிலில் ஈடுபட்டிருப்போரில் 80 விழுக்காடு இளம் வயதினரே. மலைவாழ் பெண்கள் தொழிலில் இறங்கிவிடுகிறார்கள். பரத்தமைத் தொழில் தொடர்ந்து வளர்கிறது.

அநேக அரசாங்கங்கள் நடைமுறைக்கு ஏற்றவாறு நடவடிக்கைகள் எடுத்தன. கம்போடியாவிலும் தாய்லாந்திலும் பரத்தமை விடுதிகளுக்கு ஆணுறைகள் கொடுத்து எய்ட்ஸ் தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எய்ட்ஸ் தடுப்பு கல்வி பெறாதவர்களுக்கும் ஆணுறை வாங்கப் பணவசதி இல்லாதவர்களுக்கும் இந்த ஏற்பாடு பயன்படுவதாயிருக்கிறது. எல்லா வகை ஆணுறைகளும் இலவசமாகக் கிடைக்க முடியாது தான். வறுமை காரணமாக எய்ட்ஸ் கிருமி பரவ வாய்ப்பு ஏற்படுகிறது. காசு கொடுத்து ஆணுறை வாங்க இயலாதவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்.

வாழ்க்கையில் உயர்நிலையில் உள்ளவர்கள் எய்ட்ஸ் தடுப்புக் கல்வியினால் நல்ல பயன் பெறுகிறார்கள். அவர்களுக்கு அக்கல்வி அளிக்கும் போது எய்ட்ஸ் பற்றி மட்டும் விவாதிப்பது கிடையாது. பலதும் விவாதிக்கப்படும். வாழ்க்கையில் முன்னேறுவதற்கான வழிவகைகள் பற்றியும் விவாதிக்கப்படும். வாழ்க்கையில் எதிர்ப்படும் எல்லாப் பிரச்சினைகளையும் சமாளிப்பது பற்றி விவாதிக்கப்படும்.

குறைவான கல்வியுடைவர்கள் எய்ட்ஸ் பற்றி சரியான கருத்துக் கொள்வதற்குப் பத்திரிகை போன்ற தகவல் தொடர்புச் சாதனங்கள் உதவுகின்றன. வியட்நாமில் ஆங்காங்கு சிறு கூட்டங்களில் உரையாற்றி எய்ட்ஸ் பற்றி விவரங்கள் சொல்கிறார்கள். கம்போடியாவிலுள்ள அரசுசாரா அமைவனம் ஒன்று படகுச் சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்து மெகாங் பகுதியில் எய்ட்ஸ் நோய்க்குள்ளான போர்வீரர் வீடு திரும்புவதைப் படம் பிடித்தது. அந்தப் படம் நன்கு அமைந்ததால் மூன்றுமாத காலத்தில் இலட்சம் பேர் பார்த்தார்கள்.

எய்ட்ஸ் நோய் வந்தவர்களைப் பற்றி எதிர்மறையான கருத்துகள் பல உலவுவதால் அரசுசாரா அமைவனங்கள் சில தாய்லாந்தில் எய்ட்ஸ் நோய் வந்த இளைஞர்களின் படங்களைச் சேகரித்து வெளியிட்டன. பத்திரிகைகளுக்குப் படம் எடுக்கும் வல்லுநர்கள் உதவினார்கள். எய்ட்ஸ் வந்தவர்கள் மற்றவர்களைப் போல் நல்லகளையோடு சுறுசுறுப்பாக வாழ்கிறார்கள் என்று படங்கள் காட்டின.

அதிகமாக இளைஞர்களைப் பீடிக்கம் எய்ட்ஸ் தொற்றுநோயை சமூகப் பொருளாதாரம் பிரச்சினையாகவும் நாட்டின் முன்னேற்றப் பிரச்சினையாகவும் அரசாங்கங்களும் சமூகமும் எடுத்துக்கொள்ள வேண்டும். எய்ட்ஸ் பரவுவதைக் கட்டுப்படுத்தாவிட்டால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி நாளடைவில் பாதிப்புறும். நாட்டின் மேம்பாட்டுத் திட்டங்கள் எய்ட்ஸ் ஒழிப்பு திட்டத்தையும் கொண்டனவாக இருக்க வேண்டும். அதிலும் இளைஞர்கள் பொறுத்த திட்டங்களாயிருந்தால் எய்ட்ஸ் பற்றிய திட்டமும் கட்டாயம் இருக்க வேண்டும். ■

தமிழில்: கு.ராஜாராம்

"அடிமட்டத்தில் (குழந்தைகள், இளைஞர்கள்) கல்வியறிவூட்டுவதுடன் தொடங்க வேண்டும். அப்போதுதான், இளைஞர்கள் பயனுடையவர்களாகவும், ஏமக்குறைவு நோயிலிருந்து பாதுகாக்கப்பட்டவர்களாகவும் வளருவார்கள். இல்லையென்றால், மரம் மாண்டுவிடும்."

**ஆசியாவிலும் பசிபிக்கிலும் ஏமக்குறைவு நோய் பற்றிய நான்காவது பன்னாட்டு மாநாட்டின் இளைஞர் பிரதிநிதி, மணிலா (ஃபிலிப்பைன்ஸ்), 1997 அக்டோபர்.**

## தெற்கு மற்றும் கிழக்கு ஆசியாவில் எச்ஐவி/ஏமக்குறைவு நோய்

கடுமையாகப் பீடித்த 5 நாடுகள்......

**கம்போடியா:** மொத்த மக்கள் தொகை 1-05கோடி. இவர்களில் 1,30,000 பேர் எச்ஐவி/ஏமக்குறைவு நோயுடன் வாழ்கிறார்கள்.
வயது வந்தவர்களில்* எச்ஐவி பீடித்தோர்வீதம் 2.4%

**தாய்லாந்து:** மொத்த மக்கள் தொகை 5.9கோடி; இவர்களில், 7,80,000 பேர் எச்ஐவி/ஏமக்குறைவு நோயுடன் வாழ்கிறார்கள்.
வயதுவந்தவர்களில் எச்ஐவி பீடித்தோர் வீதம் 2.23%

**மியான்மார்:** மொத்த மக்கள் தொகை 4.7கோடி. இவர்களில் 4,40,000பேர் எச்ஐவி/ஏமக்குறைநோயுடன் வாழ்கிறார்கள்.
வயதுவந்தவர்களில் எச்ஐவி பீடித்தோர் வீதம் 1.79%

**இந்தியா:** மொத்த மக்கள்தொகை 96கோடி. இவர்களில் 41 இலட்சம்பேர் எச்ஐவி/ஏமக்குறைவு நோய் கண்டவர்கள்.
வயதுவந்தவர்களில் எச்ஐவி பீடித்தோர் வீதம் 0.82%

**நேப்பாளம்:** மொத்த மக்கள்தொகை 2.26கோடி. இவர்களில் 26,000 பேர் எச்ஐவி/ஏமக்குறைவு நோய் பீடித்தவர்கள்.
வயதுவந்தவர்களில் எச்ஐவி பீடித்தோர்வீதம் 0.24%

...மிகக் குறைவாகப்பாதிக்கப்பட் 5 நாடுகள்

**வங்காளதேசம்:** மொத்த மக்கள்தொகை 12.2 கோடி. இவர்களில் எச்ஐவி/ஏமக்குறைவு நோய் கண்டவர்கள்.
வயதுவந்தவர்களில் எச்ஐவி பீடித்தோர் வீதம் 0.03%

**லாவோஸ்:** மொத்த மக்கள்தொகை 52 இலட்சம். இவர்களில் எச்ஐவி/ஏமக்குறைவு கண்டவர்கள்1,100 பேர்.
வயதுவந்தவர்களில் எச்ஐவி பீடித்தோர் வீதம் 0.04%

**இந்தோனேசியா:** மொத்தமக்கள் தொகை 12.2கோடி. இவர்களில் எச்ஐவி/ஏமக்குறைவு கண்டவர்கள் 52,000 பேர்.
வயது வந்தவர்களில் எச்ஐவி பீடித்தோர் வீதம் 0.05%

**ஃபிலிப்பைன்ஸ்:** மொத்தமக்கள் தொகை 7.07 கோடி. இவர்களில் எச்ஐவி/ஏமக்குறைவு நோய் கண்டவர்கள் 24,000 பேர்.
வயதுவந்தவர்களில் எச்ஐவி பீடித்தோர் வீதம் 0.06%

**இலங்கை:** மொத்த மக்கள் தொகை 1.83 கோடி. இவர்களில் எச்ஐவி/ஏமக்குறைவு நோய்கண்டர்கள் 6,900 பேர்.
வயதுவந்தவர்களில் எச்ஐவி பீடித்தோர் வீதம் 0.07%

* வயதுவந்தோர் 15-49 வயதினர்

ஆதாரம்: UNAIDS, 1998



படிப்பகம்

www.padippakam.com



# தாய்லாந்து: வெள்ளத்திற்கு அணைபோட முயற்சி

வான்ஃபென் சிரஷ்தாபுத்ரா

தாய்லாந்து இடைவிடாத தேசிய இயககத்தின் மூலம் எச்ஐவி பீடித்தோர் வீதத்தைக் கட்டுக்குள் கொண்டு வந்திருக்கிறது. ஆனால், பொருளாதார நெருக்கடி, இந்த முன்னேற்றத்தில் தன் நிழலைக் கவித்திருக்கிறது.




பாங்காக்கில் "கருத்தடை உறை இரவு"

**தாய்லாந்தில் எச்ஐவி/ ஏமக்குறைவு நோய்**

மொத்த மக்கள் தொகை 5.9 கோடி. இதில் 7,80,000 பேர் எச்ஐவி/ ஏமக்குறைவு நோய் கண்டவர்கள். 15-49 வயதுப் பிரிவைச் சேர்ந்த வயதுவந்தவர்களில், எச்ஐவி பீடித்தோர் வீதம் 2.23%.
15 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் இந்நோய் கண்டவர்கள் 14,000 பேர்.
இதுவரை இந்நோய்க்குப் பலியானோர் எண்ணிக்கை 2,30,000.

ஆதாரம்: UNAIDS, 1998

பிரிட்டிஷ் தடுப்புஉறை நிறுவனமானா டியூரெக்ஸ் தாய்லாந்து நாட்டில் ஆய்வு செய்து 1998 டிசம்பரில் அறிக்கை வெளியிட்டது. ஆய்வின் போது கேள்வி கேட்கப் பட்டவர்களில் 60 விழுக்காடு ஆணுறை பயன் படுத்துகிறார்கள் என்று தெரிந்தது. ஐ.நா எய்ட்ஸ் அமைவனம் 21 வயதான தாய்லாந்து ஆண்களை விசாரித்தபோது 1991-க்கும் 1995-க்கும் இடையே தாய்லாந்து நாட்டு விலைமகளிர் இல்லங்களில் வாடிக்கையாளர்கள் ஆணுறை பயன்படுத்துவது 61 விழுக்காட்டிலிருந்து 93 விழுக்காடு உயர்ந்துள்ளது என்று தெரியவந்தது. அதே காலகட்டத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை பாதியாகக் குறைந்துவிட்டதாகவும் புலனாகிறது.

இத்தகைய மாற்றத்துக்குக் காரணம் எய்ட்ஸ் நோய்க்கு எதிரான முயற்சிகள் தாய்லாந்தில் பெரிய அளவில் செய்யப்பட்டது தான். தாய்லாந்தில் முதல் எய்ட்ஸ் நோயாளியை அடையாளம் கண்டதற்குமுன் 1984இல் மெச்சாய் வீரவைத்யா (திருவாளர் ஆணுறை) என்னும் குடும்பக் கட்டுப் பாட்டுத் திட்ட முன்னோடி பொதுஇடங் களின் ஆணுறை அவசியத்தைப் பற்றிப் பாட்டுகள் பாடுவார். நாட்டைக் கேவலப்படுத்துகிறார் என்று முதலில் அவரைக் குறை கூறினார்கள். பின்னர் பாலியல் நோய்களும் எய்ட்ஸ் நோயும் பரவுவதைத் தடுக்கும் முயற்சியில் அவரது பணி சிறந்தது என்று பாராட்டப்பட்டது. அவருடைய பணிக்கு ஆதரவு தந்தவை சில அரசுசாரா அமைவனங்கள்.

பின்னர் நாட்டில் எய்ட்ஸ் நோய் அதிகமாகப் பரவவே அரசாங்கம் எதிர்ப்பு நடவடிக்கை எடுத்தது. மூன்று ஆண்டுத் திட்டம் ஒன்றை அரசாங்கம் 1992இல் அறிவித்தது. 1996இல் 8.23 கோடி டாலர் நிதி ஒதுக்கப்பட்டது. வேறு எந்த நாட்டிலும் இந்த அளவு நிதி ஒதுக்கப்படவில்லை. நலவாழ்வு அமைச்சகத்தை ஒன்றிணைத்து தடுப்பு பற்றிய கல்வி வழங்கப்பட்டது. பின் சமூகமே பொறுப்பேற்று தடுப்புக் கல்வி வழங்கலாயிற்று. தொலைக்காட்சி தகவல்கள் அளிப்பதில் முக்கிய பங்கு ஆற்றியது. அந்த நிகழ்ச்சிகளில் அதிகப் பணம் கொடுத்து வணிக விளம்பரங்கள் செய்யப்பட்டன. கிராம சமுதாயங்கள் பணம் சேர்த்து தடுப்பு நடவடிக்கைகளுக்கு உதவின. புத்த பிக்குகள் குடும்பத்தாரால் ஒதுக்கப்பட்ட எய்ட்ஸ் நோயாளிகளுக்கு அடைக்கலம் தந்தார்கள். சியாங் மாய் என்னுமிடத்தில் உள்ள மகாமகுத் என்ற புத்தப் பல்கலைக்கழகம் சார்ந்த சங்க மெட்டா எனும் சமயக் கழகம் 500 பிக்குகளையும் பிக்குணிகளையும் தடுப்பு நடவடிக்கைகளிலும் மருத்துவ காரியங்களிலும் ஈடுபடச் செய்யப் பயிற்சி அளித்தது.

எய்ட்ஸ் நோய் உடையவர்களே அநேக நகரங்களில் விழிப்புணர்வு உண்டாக்கும் பணியில் ஈடுபட்டார்கள். 1993இல் அமைத்த புதுவாழ்க்கை நண்பர்கள் சங்கம் என்ற அமைப்பு நூற்றுக்கணக்கான உறுப்பினர்கள் கொண்டது. பள்ளிகளிலும் மற்ற இடங்களிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். சங்க உறுப்பினர்கள் பலர் எய்ட்ஸ் பற்றி வகுப்புகள் நடத்திப் பாடம் சொல்லுகிறார்கள்.

## சாதித்து முடித்துவிட்டதாக எண்ணுவதும் நிதிப் பற்றாக்குறையும்

1990-களில் அடுத்து பாலியல் நோய்களுக்கான மருத்துவமனைகள் தங்களிடம் வரும் பாலியல் தொழிலிலுள்ள நோயாளிகளுக்கு இலவசமாக ஆணுறைகள் வழங்கின. விலைமகளிர் இல்லங்களில் தடுப்பு உறைகள் பயன்படுத்துமாறு எடுத்துக் கூறின. இந்தச் செயல் திட்டம் 1991இல் தேசிய அளவில் மேற்கொள்ளப்பட்டது. இதனால் தான் தாய்லாந்தில் வெற்றி ஏற்பட்டது என்கிறார் ஐ.நா. எய்ட்ஸ் அமைவனத்தின் ஆசிய-பசிபிக் பகுதி இயக்குநர்.

ஆனால் பல காரணங்களால் தடுப்பு நடவடிக்கைகள் கடந்த இரண்டு ஆண்டுகளாக வேகம் குன்றிவிட்டன. இதுவரை கிடைத்த வெற்றியில் திருப்தி அடைந்து சுணக்கம் ஏற்பட்டுள்ளது என்று சொல்லப்படுகிறது. சில குறிப்பிட்ட குழுக்களுக்கு மட்டும் தடுப்புக் கல்வி அளிப்பது என்ற புதுக்கொள்கையும் ஒரு காரணம் எனப்படுகிறது. பெரிய அளவில் எல்லோருக்கும் பயன்படும்படியாகத் திட்டம் அமைக்காதது குறையாக உள்ளது. 1997இல் ஏற்பட்ட பொருளாதார நிதி நெருக்கடியினால் எய்ட்ஸ் நோய்த் தடுப்புக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் கால்பங்கு குறைக்கப் பட்டதை ஒரு காரணமாகக் கூறுகிறது நலவாழ்வு அமைச்சகம்.

(பக்கம் ஐம்பத்திமூன்றாம் பக்கம்)

"பாங்காக் போஸ்ட்" இதழின் இதழாளர் (தாய்லாந்து)

படிப்பகம்

www.padippakam.com

# 3 | வகுப்பறைக்கு அப்பால்

## பள்ளியில் தடுப்பு: கடினமான வழி

◗ மோனிக் ஃபூய்லோ

**ஏமக்குறைவு நோயின் அபாயத்தை இளைஞர்கள் அறிந்து கொள்ளும்படி செய்வதற்குச் சிறந்த இடம் பள்ளிதான். ஆனால், இந்தத் தலைப்பு கத்தி முனைபோன்றது. மிக அரிதான ஒரு சில ஆதாரங்களுடன் இதனைக் கையாள்வது மிகக் கடினம்.**

வளர்முக நாடுகளில் பள்ளிச் சிறார்களுக்கு எய்ட்ஸ்பற்றிக் கல்வி அளிப்பது அண்மையில்தான் நடைபெறுகிறது. அரசியல் தலைவர்களும் பள்ளித் தலைமை ஆசிரியர்களும் மற்ற ஆசிரியர்களும் பாலியல் என்றாலே அருவருப்பு அடைகிறார்கள். தவிரவும் எய்ட்ஸ்பற்றிய கல்வி சிறார்களைப் பாலியல் காரியங்களில் ஈடுபடுவதற்கு ஊக்கமளித்துவிடும் என்று நம்புகிறார்கள். ஐ.நா. எய்ட்ஸ் பிரிவு 1997இல் அளித்த அறிக்கையில் பாலியல் கல்வியால் சிறார்களைப் பாலியல் நடவடிக்கைகளில் இறங்கச் செய்யக் கூடிய ஆபத்து இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

பின்னர், வளர்முக நாடுகளில் நிலைமை மாறத் தொடங்கியது. இப்போது அநேக வளர்முக நாடுகளில் எய்ட்ஸ் கல்விப் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக ஆகியுள்ளது. முஸ்லிம் நாடான இந்தோனேஷியா பாலியல் கல்வி என்னும் சொற்றொடருக்குப் பதிலாக இனப்பெருக்கச் சுகாதாரம் பற்றிய கல்வி எனும் சொற்றொடரைப் பயன்படுத்துகிறது. வேறு பல நாடுகளும் அதே போல் செய்கின்றன.

### செனகல் நாட்டு முன்னோடித் திட்டங்கள்

மேற்கு ஆஃப்ரிக்காவிலும் மத்திய ஆஃப்ரிக்காவிலும் எய்ட்ஸ் பற்றிய கல்வியை 'குடும்ப வாழ்க்கை' மற்றும் மக்கள் தொகை பற்றிய கல்வி' என்னும் தலைப்பில் சேர்த்துவிட்டார்கள். இதில் உயிரியல், குடும்பப் பொருளாதாரம், சுகாதாரம், குடியியல், ஒழுக்கம் என்று பல்வகைப் பாடங்கள் உள்ளன. கல்வித் திட்டம் அமைப்பதில் மட்டுமின்றி திறம்படக் கற்பிப்பதிலும் சிரமம் இருக்கிறது. அநேக நாடுகளில் அரசாங்கங்கள் இந்தக் கல்வித்திட்டங்களுக்கு இன்னும் ஒப்புதல் அளிக்கவில்லை.

இத்துறையில் செனகல் நாடு முன்னோடியாக விளங்குகிறது. குடும்பம் பற்றிய கல்வி அங்கே ஆரம்ப நிலைப் பள்ளிகளிலேகூட சொல்லித் தரப்படுகிறது. 1994இல் செனகலைச் சேர்ந்த அரசு சாரா அமைவனம் ஒன்று 140 குடும்பக் கல்விச் சங்கங்களை அமைத்தது. நாட்டின் உயர்நிலைப் பள்ளிகளில் 52 விழுக்காடு அச்சங்கங்களில் சேர்ந்தன. 1997இல் டாக்கர் பல்கலைக் கழகத்தில் அத்தகை சங்கங்கள் மூன்று தொடங்கப்பட்டன. சங்கத் தலைவராவதற்குப் பயிற்சி அளிக்கப் படுகிறது. 2,000 மாணாக்கர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள். அவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் சிறுமிகள். தலைவர்கள் மற்ற மாணாக்கர்களுக்கு எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வு ஊட்டுகிறார்கள். பள்ளிச் சிறார்கள் மட்டுமின்றி பள்ளியில் படிக்காத சிறார்களும் விழிப்புணர்வு பெறுவதற்காக கலாச்சார விழாக்கள், விடுமுறைக்கால முகாம்கள் போன்றவை நடத்துகின்றனர். அச்சங்கங்களின் நிர்வாகத்தை ஆசிரியர்கள் கவனித்து உதவி செய்கிறார்கள். 1997-98 பள்ளி ஆண்டில் 45,000 இளைஞர்கள் பயன்பெற்றார்கள்.

ஆசியாவில் எய்ட்ஸ் கல்வி அளிப்பதில் நாட்டுக்கு நாடு வேறுபாடு காணமுடிகிறது. தாய்லாந்து, கம்போடியா, லாவோஸ், வியட்நாம், ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளில் தடுப்புக்கல்வி என்பது முறையான கல்வியில் ஓர் அங்கமாக உள்ளது. நேபாளம், பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலத்தீவு ஆகியவற்றில் தடுப்புக் கல்வி தொடங்க உள்ள நிலையிலிருக்கிறது. இந்தியாவில் உடற்பயிற்சிக் கல்வியிலும், சமூகப் பயன் உள்ள உற்பத்திக் காரியங்கள் பற்றிய வகுப்புகளிலும் எய்ட்ஸ் விழிப்புணர்வு பற்றிப் போதிக்கப் படுகிறது. எய்ட்ஸ் என்றாலே என்னவென்று சரியாக அறியாமல் அரைகுறை தெரிந்த ஆசிரியர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள். ஆசிரியர்களுக்கு உதவியாகப் புத்தகங்களும் தரப்படவில்லை. எப்படி அந்த ஆசிரியர்கள் பயனுள்ள முறையில் சொல்லித்தர இயலும்?

### ஆசிரியர்கள் தங்களுக்கிருந்த மனத்தடைகள் நீங்கப் பெறல்

"என்னுடைய மாணவன் ஒருவன் எய்ட்ஸ் பற்றி ஒரு கேள்வி கேட்டான். எனக்குப் பதில்

◗ பன்னாட்டுக் கல்வி ஒருங்கிணைப்பாளர்; இவருக்கு உதவி செய்பவர் நூதாலியே பார்போசா (யுனெஸ்கோ, டாக்கர்); டாக்கரில் (செனகால்) உள்ள மக்கள் தொகை மற்றும் மேம்பாட்டுக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் பார்பாக்கர் ஃபால்; புதுதில்லியில் (இந்தியா) உள்ள யுனெஸ்கோ அலுவலகத்தில் முன்னாள் திட்ட வல்லுநர் ஆசா ஆண்டர்சன்-சிங்.



படிப்பகம்

www.padippakam.com






செனகல் சிறுவர்கள் தொடக்கப்பள்ளி பாட நூல்கள் மூலம் ஏமக்குறைவு நோய் பற்றி அறிகிறார்கள்.

சொல்லத் தெரியவில்லை. அதனால், அதெல்லாம் பள்ளிக்கூடப் பாடத்தைச் சேர்ந்ததில்லை என்று பதில் சொல்லி மழுப்பினேன். தைரியம் வந்து அப்படி அவன் கேள்வி கேட்டது அதுதான் முதல் தடவை என்று எனக்குத் தோன்றியது. இனிமேல் அப்படி கேட்கமாட்டான் என்று எனக்குத் தெரியும் என்று ஆஃப்ரிக்காவின் டோகோ நாட்டு லோமியில் நடந்த கருத்தரங்கில் வரலாற்று ஆசிரியர் ஒருவர் சொன்னார்.

ஆசிரியர்களுக்கு எய்ட்ஸ் பாடத்தை எப்படிக் கையாள்வதென்று தெரியவில்லை. மனசில் தயக்கம், தடையுணர்வு எல்லாம் உண்டு. மேற்கு ஆஃப்ரிக்காவில் கினியா நாடு மட்டும்தான் தேசிய ஆசிரியர்கள் கல்லூரிகளில் எய்ட்ஸ் பற்றிப் போதிக்க ஏற்பாடு செய்துள்ளது. உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு சொல்லித்தர ஏற்பாடு செய்துள்ளன டோகோ நாடும் பர்கினா பாசோ நாடும் மற்ற ஆஃப்ரிக்க நாடுகள் சிறிதளவு முயன்றுள்ளன.

ஆசிரியர்கள் பரஸ்பரம் கலந்து எப்படி மாணவர்கள் தங்கள் சந்தேகம் மற்றும் கவலை எல்லாவற்றையும் வெளிப்படையாகச் சொல்லக் கூடிய சூழலை உண்டாக்குவது, அவர்கள் எய்ட்ஸ் வராமல் தங்களைக் காத்து கொள்வது பற்றிக் கற்பிப்பது எப்படி என்று தெளிவடைவதற்கு வசதி இருக்க வேண்டும். 1990ஆம் ஆண்டை அடுத்து யுனெஸ்கோவும் உலக சுகாதார அமைவனமும் பாடத்திட்டம் வகுப்போருக்கான கையேடுகள் வெளியிட்டன. சில ஆயிரம் பிரதிகள் அச்சிடப் பட்டன. ஆனால் 51½ கோடி ஆசிரியர்கள் இருக்கிறார்கள். மிக அண்மையில் டோகோ நாடு பள்ளிச் சிறார்களுக்கான கையேடு தயாரித்து பள்ளியில் கொடுக்காமல் வெளியே தனித்துக் கொடுத்தது.

## சிறுவயதிலேயே கற்பித்துவிட வேண்டும்

எய்ட்ஸ் பாடம் கற்பிப்பதற்குத் தகுந்த துணைக்கருவிகள் இருந்தும் ஆசிரியர்கள் அவற்றைப் பயன்படுத்துவதில்லை. இளம் ஆசிரியர்கள் புதிய அணுகுமுறையை ஏற்றுப் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் பரவாயில்லை. யாருமே சிறுவர்களிடம் பாலியல் பற்றிப் பேசத் தயாராயில்லை. பெற்றோர்கள் தாங்கள் செய்யக் கூடிய காரியமில்லை என்று ஆசிரியர்களிடம் தள்ளிவிடுகிறார்கள். ஆசிரியர்கள் குடும்பத்தி னரிடம் பொறுப்பு இருப்பதாகச் சொல்லி திரும்பத் தள்ளிவிடுகிறார்கள். கத்தோலிக்க நாடுகளில் தேவாலயம் பொறுப்பு என்று சொல்லி விடுகிறார்கள். லத்தீன் அமெரிக்க கத்தோலிக்க நாடுகளில் "ஆணுறை சைத்தானின் கருவி" என்று சொல்கிறார்கள். ஆயினும் சிறுவர்களுக்கு எய்ட்ஸ் நோயைப் பற்றி நன்கு எடுத்துச் சொன்னால் அவர்கள் வயதுவந்தவர்களைக் காட்டிலும் தங்களை நன்றாகப் பாதுகாத்துக் கொள்கிறார்கள். சிலி, பிரேசில், மெக்ஸிகோ ஆகிய நாடுகளில் 15 முதல் 18 வயதுக்குட்பட்ட பையன்கள் ஆணுறை களைத் தவறாது பயன்படுத்துகிறார்கள்.

ஆனாலும் கல்வி அதிகாரிகள் சிறார்கள் பாலியலில் ஈடுபடுகிறார்கள் என்பதையே ஒப்புக் கொள்ள மறுத்து தடுப்புத் திட்டங்களை ஆதரிக்க முன்வருவதில்லை. உண்மையில் குமரப்பருவத் தினர் பாலியல் காரியங்களில் ஈடுபடுகிறார்கள். புதிதாக எய்ட்ஸ் தொற்றுவது 15 முதல் 24 வயதுடையவர்களைத் தான். ஆதலால் சீக்கிரமாக காலா காலத்தில் சிறார்களுக்கு எச்சரிக்கை உணர்வு ஊட்டப்பட வேண்டும்.

(தொடர்ச்சி ஐம்பத்திமூன்றாம் பக்கம்)

## ஏமக்குறைவு நோய்க் கல்வியில் யுனெஸ்கோ

கல்வி உத்திகளைப் பயன்படுத்தி தனி மனிதர் மற்றும் சமுதாய அளவில் பொறுப்பான மனப் போக்குகளையும் நடத்தை முறையையும் வளர்க்கும் நோக்குடன் யுனெஸ்கோ தடுப்புப் பிரிவு 1987 இல் நிறுவப்பட்டது. திறம்பட்ட கல்வித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான தேசியத் திறம்பாடுகளை மேம்படுத்துவது இதன் நோக்கம். இதற்கு, முன்னோடித் திட்டங்களை நிறைவேற்றுவதும், நிபுணத்துவ ஆலோசனை கூறுவதும், மாநாடுகள் நடத்துவதும், ஆசிரியர் பயற்சிப் பயிலரங்குகள் நடத்துவதும் அவசியம். குடியியல் சமுதாயத்தின் ஒத்துழைப்புடன் இளைஞர்களுக்காகப் பன்னாட்டு இயக்கங்கள் நடத்தவும், உயர்கல்வி படைப்பாற்றல் போதனை, ஆசிரியர்களுக்கான வழிகாட்டிகள், கல்விச் சாதனங்கள் வெளியிடுதல் ஆகியவற்றுக்கு இது உதவுகிறது.

1998-1999-க்கான ஐ.நா. ஏமக்குறைவுக் நோய் உதவி ஒருங்கிணைந்த வேண்டுகோளுக்கிணங்க பண்பாட்டு ஆராய்ச்சி மற்றும் நிருவாகத் திட்டப் பிரிவு தொடங்கப்பட்டது. எச்ஐவி/ஏமக்குறை நோய்க்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளை உருவாக்கும்போது, விரிவான நோக்கில் மக்கள் பண்பாடுகளைப் புரிந்துகொண்டு, கவனத்தில் எடுத்துக்கொள்வது இதன் அடிப்படைக் குறிக்கோள் ஆகும். ஏமக்குறைவுநோய் ஆராய்ச்சி மற்றும் தடுப்புக்கான உலக அறக்கட்டளை 1993 இல் யுனெஸ்கோ தலைமை இயக்குநர் ஃபெரிக்கோ மயூர், எச்ஐவி கிருமியின் கூட்டுக்கண்டுபிடிப்பாளர் பேராசிரியர் லூக் மான்டேக்னியர் ஆகியோரால் நிறுவப்பட்டது. ஏமக்குறைவு நோய்க்கு எதிராக அரசு அதிகாரிகள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்காக, தனியார் முயற்சிகள் அனைத் தையும் ஒருங்கிணைப்பதும், ஆராய்ச்சியிலும், தடுப்பிலும் புதிய கூட்டாண்மைகளை ஏற்படுத்து வதும், புதுவகை ஒத்துழைப்பினைக் கண்டறிவதும் இந்த அறக்கட்டளையின் நோக்கமாகும். ■

+...

• http : // www. unesco. org/education

ஏமக்குறை நோயினால் ஒரு குழந்தை சாகும்போதெல்லாம், மனித உரிமைகள் மீறப்படுகின்றன.

**குழந்தைகளும் ஏமக்குறைவு நோயும்: உடனடி அபாயம்: யுனிசெஃப்**

படிப்பகம்

www.padippakam.com

# ஆசிரியர்களுக்கு திடீர் வகுப்புகள்

டாக்டர் ஒய்வான் மோரன்

ருவாண்டா ஆசிரியர்கள், நாள்தோறும் தீவிரப்பணிகளுக்கும் விவாதங்களுக்குமிடையில், வகுப்பறையில் ஏமக்குறைநோய் பற்றி அச்சமோ வெட்கமோ இன்றி விவாதிக்க கற்றுக் கொள்கிறார்கள்.

**ருவாண்டாவில் எச்ஐவி/ஏமக்குறைவு நோய்**

**மொத்த மக்கள் தொகை 58 இலட்சம். இவர்களில் எச்ஐவி/ஏமக்குறைவு நோய் கண்டவர்கள் 3,70,000 பேர். 15-49 வயதுப் பிரிவைச் சேர்ந்த வயதுவந்தவர்களில் எச்ஐவி பீடித்தோர் வீதம் 12.75% மேலும், 15 வயதுக்குட்பட்ட 22,000 குழந்தைகளையும் இந்நோய் பீடித்துள்ளது. இதுவரை இந்நோய்க்குப் பலியானோர் 1,70,000 பேர்.**


ஆதாரம்: UNAIDS, 1998

ருவாண்டா நாட்டுத் தலைநகர் கிகாலியிலிருந்து சாலைவழியாக இரண்டுமணி நேரம் பயணம் செய்து அடைய வேண்டிய முஜினா எனுமிடத்துப் பள்ளிக்கூடக் கட்டடத்தில் எய்ட்ஸ் பற்றிய பாடம் கற்பதற்காக ஆசிரியர்கள் கூடியிருக்கிறார்கள். ஆசிரியர்கள் எல்லோரும் குழப்பத்துடன் காணப்படுகிறார்கள். நாங்கள் என்ன செய்ய முடியும் என்று கேட்கிறார்கள். எங்கள் மாணாக்கர்கள் சிறுவயதிலேயே பாலியல் நடவடிக்கைகளில் இறங்குகிறார்கள் என்று சொல்கிறார்கள். பையன்கள் 16 வயதிலும் பெண்கள் 12 வயதிலும் தொடங்கி விடுகிறார்கள். வயதுவந்தவர்கள் சிறு பெண்களுக்குத் தொந்தரவு கொடுக்கிறார்கள். ஆதலால் பள்ளிதான் சிறார்களுக்கு எய்ட்ஸ் தடுப்பு பற்றிப் போதிக்கச் சரியான இடம் என்பதை ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால் சிறார்களுடன் எப்படிப் பேசுவது?

பாடத்திட்டத்தில் எய்ட்ஸ் மற்றும் பாலியல் நோய்கள்பற்றிப் பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனால் அந்தப் பாடங்கள் நடத்துவது எப்படி என்று ஆசிரியர்களுக்குச் சொல்லித்தரப்படவில்லை. ஆசிரியர்களிடம் தேவையான புத்தகங்கள் இல்லை. ஏதோ வானொலியில் கேட்ட சிலவற்றைத் தவிர ஆசிரியர்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. பாலியல் விஷயங்களை மறைத்துக் கூறும் மங்கலக் குறிப்புச் சொற்கள் அவர்களுடைய தாய்மொழியில் இல்லை. குழந்தைகளின் மனதைக் கெடுப்பதாகப் பெற்றோர்கள் சொல்வார்கள் என்றும் ஆசிரியர்கள் அஞ்சுகிறார்கள்.

ஆசிரியர்களுக்கு எய்ட்ஸ் நோய் பற்றிய தகவல்களும் எப்படி பாடம் நடத்துவது என்பதற்கான குறிப்புகளும் அளிப்பதற்காக மேற்சொன்ன ஒருநாள் பயிற்சி முகாம் அமைக்கப்பட்டது.

ஆரம்பத்திலிருந்து ஆசிரியர்களிடம் எய்ட்ஸ் என்பது இரத்தத்தில் பரவுகிற நோய் என்றும், மற்ற பாலியல் உறுப்புகளில் நேரடிப் பாதிப்பு உண்டாக்குவதில்லை என்றும் விளக்கப்பட்டது. வேறு தொற்று நோய் பற்றிப் பேசுவதுபோலப் பேசலாம் என்று ஆசிரியர்களிடம் சொல்லப்பட்டது. இரத்தம் பற்றியும் அதன் வேலைகள் பற்றியும் ஆசிரியர்களுக்குச் சரியாகத் தெரியவில்லை. அவர்கள் நாட்டில் மலேரியா அதிகமாதலால், இரத்தத்திலுள்ள சிவப்பு அணுக்கள் பிராணவாயுவைக் கொண்டு செல்கின்றன என்பது தெரியும். வெள்ளை அணுக்கள் பற்றியோ நோய்த் தடுப்புக்கு அவை உதவுவது பற்றியோ தெரியவில்லை.




டாக்டர் ஒய்வான் மோரனும், உகாண்டாவின் “குழந்தைக்குக் குழந்தைத்” திட்டம் இணைந்து வெளியிட்டுள்ள ஒரு நூலின் அட்டைப்படம் (1996)

இரத்தம் பற்றிய அடிப்படைத் தகவல்கள் விளையாட்டுகள் மூலமும் சுருக்கமான உரை மூலமும் அளிக்கப்பட்டன. உடம்பிலே போன்றது வெள்ளை அணுக்கள் நோய்க் கிருமிகளை எதிர்த்து நின்று தடுக்கும் செயல் என்று விளக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் கூச்சம் நீங்கி எப்படி வைரஸ் தாக்குகிறது என்று நடித்துக் காட்டினார்கள். திருவாளர் எச்ஐவி, திருவாளர் மலேரியா என்று பெயர் சூட்டப்பட்டவர்கள் எப்படி அந்தந்த வைரஸ்கள் செயல்படுகின்றன என்பதை எடுத்துச் சொன்னார்கள்.

எச்ஐவி வைரஸ் மனித உடலுக்குள் எவ்வாறு நுழைகிறது என்பதைப் பார்க்குமுன் ஆண்பெண் குறிகளின் படங்களை வரையுமாறு ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். ஒரு சிலரால் மட்டும் வரைய முடிந்தது. கைக்குக் கிடைத்த பொருள்களை வைத்து பெண்குறி மற்றும் கர்ப்பப்பை ஆகியவற்றின் மாதிரிகள் உண்டாக்கப்பட்டன. எய்ட்ஸ் நோயின் பல கட்டங்கள் பற்றி விளக்கப்பட்டது.

(தொடர்ச்சி ஐம்பத்திமூன்றாம் பக்கம்)

எங்கள் நாடு பாட்ஸ்வானாவில், பெற்றோர்க்கும் அவர்கள் குழந்தைகளுக்குமிடையிலான என் இதயத்திலிருந்து நான் எழுப்பும் குரல் இதுதான்:
“பெற்றோர்களே! எங்களுடன் பேசுங்கள்! உங்கள் செய்தித் தொடர்பு, வழி காட்டுதல், உரையாடல் இல்லாமல் நாங்கள் மறைந்துபோன தலைமுறையினராகி விடுவோம். எங்கள் உதவிக்கு வாருங்கள்!”

**கம்பாலாவில் (உகாண்டா) 1995 இல் நடந்த ஏமக்குறைவு நோய் பற்றிய பன்னாட்டு மாநாட்டில் 14 வயது சிறுமி ஆற்றிய உரை.**

பாரிஸ் VI பல்கலைக்கழகத்தின் (ஃபிரான்ஸ்) சுகாதார மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் “குழந்தைக்குக் குழந்தைத்” திட்டத்தின் உறுப்பினர்.



படிப்பகம்

www.padippakam.com



# உகாண்டா: ஏமக்குறைவு நோய்க்கு எதிராகப் புனிதப்போர்

மேகி கீனான் வீலர்

முறைசாராப் பள்ளிகள் மசூதிகளுடன் இணைந்தவை. தடுப்புக்கான அடிப்படைகள் குறித்து இளைஞர்களுக்குப் போதிப்பதில் முஸ்லிம் சமயத் தலைவர்கள் தலையாய பங்கு கொள்கிறார்கள்.

தன் பெற்றோர்களுடன் எய்ட்ஸ் பற்றிப் பேசியதே கிடையாது என்று ஒப்புக் கொண்டார் முகம்மது முபிர். அதைப் பற்றிப் பேசினால் மரியாதைக் குறைவாக இருக்கும் என்று கூறினார் அந்தக் குமரப் பருவத்து இளைஞர். அந்தச் சிறு வயதில் முகம்மது முபிர் எய்ட்ஸ் நோயைப் பற்றி எவ்வாறு தெரிந்து கொள்ள முடியும்?

உகாண்டாவிலுள்ள இஸ்லாமிய மருத்துவ சங்கம் ஒரு புதுமையான திட்டம் வகுத்து, ஆங்காங்குள்ள மசூதிகளுடன் சேர்ந்து மதரஸா பள்ளிகளில் எய்ட்ஸ் பற்றிய கல்வி போதிக்க ஏற்பாடு செய்துள்ளது. கம்பாலாவிற்கு 50 கி.மீ. தென்மேற்கிலுள்ள மிபிக்கி என்னும் மாவட்டத்திலும் தலைநகரிலிருந்து 140 கி.மீ. வடகிழக்கிலுள்ள கமுலி மாவட்டத்திலும் அவ்வித ஏற்பாடு செய்திருக்கிறது. முஸ்லிம் இளைஞர்கள் அங்கே

**முறைசாராப் பள்ளிகள் மசூதிகளுடன் இணைந்தவை. தடுப்புக்கான அடிப்படைகள் குறித்து இளைஞர்களுக்குப் போதிப்பதில் முஸ்லிம் சமயத் தலைவர்கள் தலையாய பங்கு கொள்கிறார்கள்.**

கற்றுக் கொள்கிறார்கள். உகாண்டாவின் 2 கோடி மக்களில் 16 விழுக்காடு முஸ்லிம்கள். 1989இல் உகாண்டாவின் தலைமை முஸ்லிம்கள் எய்ட்சுக்கு எதிராக ஒரு புனிதப்போர் தொடங்கு வதாக அறிவித்தார்கள். அதன் தொடர்ச்சியாக மதரஸாக்களில் எய்ட்ஸ் பற்றி கல்வி அளிக்கும் திட்டம் உருவாகியது.

உகாண்டா நலவாழ்வு அமைச்சகமும் ஐ.நா. குழந்தைகள் கல்வி நிதியும் இணைந்து 36 பாடங்கள் கொண்ட பாடத்திட்டத்தை மதரஸா பள்ளிகளின் பயன்பாட்டுக்காக வகுத்துத் தந்தன. எப்படி எய்ட்ஸ் பரவுகிறது பரவாமல் தடுப்பது எப்படி, கட்டுப்பாடு செய்வது எப்படி என்று பாடங்கள் உள்ளன. திறமைகளை வளர்த்துக் கொள்வது எப்படி என்றும் பாடங்கள் சேர்க்கப்பட்டன. திறம்படப் பேசுவதற்கும், உறுதியாக நிற்பதற்கும் சொல்லித் தரப்படுகிறது. ஓர் ஆண் ஒரு சிறுமியிடம் வந்து பாலியல் தொடர்பு கொள்ள நெருங்கினால் எப்படி மறுதலிக்கிறது என்பது அப்பெண்ணுக்குத் தெரிய வேண்டும் என்கிறார் நீமா நக்யான்ஜோ என்னும் மதரஸாப் பள்ளித் திட்ட அலுவலர். ஷேக்குகள், இமாம்கள், அவர்களின் உதவியாளர்கள் போன்றோருக்கு பாடத்திட்டத்தை எப்படிக் கையாள்வது என்பதனை அவர் பயிற்றுவிக்கிறார். பயிற்சி பெற்றவர்கள் மதரஸாக்களில் ஆசிரியர்கள் ஆற்றும் பணியை மேற்பார்வையிடுவார்கள். 1995இல் தொடங்கப்பட்ட திட்டத்தின் கீழ் 350 மதரஸாக்களில் 36,000 சிறார்கள் பயன் பெற்றனர்.

"எய்ட்ஸ் பற்றி போதிப்பது ஒரு சவாலான காரியம் என்றாலும் சிறார்கள் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது" என்றார். புகுலூப் மசூதியைச் சேர்ந்த இமாம் ஹாசன் மகோலா. சில முஸ்லிம் மதப் பழக்கவழக்கங் கள், சுத்தமில்லாத கத்தியால் சுன்னத்துச் செய்வது, பாதுகாப்பில்லாத முறையில் இறந்தவர் உடலைச் சுத்தம் செய்வது போன்றவை எச்.ஐ.வி. வைரஸ் தொற்ற வாய்ப்பு உண்டாக்கக் கூடியவை. ஆணுறை பற்றி போதிப்பதற்கு அநேக பெருந் தடங்கல்கள் எழுந்தன. ஆணுறை பயன்படுத்து வதற்கு ஊக்கம் அளித்தால் மணஉறவுக்கு வெளியே பலர் பாலியல் உறவு வைத்துக் கொள்ள ஊக்கம் ஏற்படும் என்று முஸ்லிம் மதத் தலைவர்கள் வாதிட்டார்கள். இஸ்லாமிய மருத்துவ சங்கம் இஸ்லாமியத் தலைவர்களுடன் ஓராண்டு விவாதித்து, பாலியலில் ஒழுக்கம் கடைப்பிடிப்பது, மணஉறவுக்குள் மட்டும் உடலுறவு கொள்ள வேண்டும் என்னும் இரண்டு நியதிகளை வற்புறுத்துவது என்றும், இரண்டு நியதிகளையும் மீறும்போது ஆணுறை பயன் படுத்தல் வேண்டும் என்றும் போதிக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. இஸ்லாமியத் தலைவர்கள் அடுத்த ஆண்டில் ஆணுறை பற்றி போதிக்கலாம் என்று ஒப்புக் கொண்டனர்.


(தொடர்ச்சி ஐம்பத்திமூன்றாம் பக்கம்)

### உகாண்டாவில் எச்ஐவி/ஏமக்குறைவு நோய்

மொத்த மக்கள் தொகை 2.07 கோடி. இவர்களில் 9,30,000 பேர் எச்ஐவி/ஏமக்குறைவு நோய் கண்டவர்கள். 15-49 வயதுப் பிரிவினரில் எச்ஐவி பீடித்தோர் வீதம் 9.51% தவிர, 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 67,000 பேருக்கு இந்நோய் கண்டுள்ளது. இதுவரை இந்நோய்க்கு 18 இலட்சம் பேர் பலியாகியுள்ளனர்.

ஆதாரம்: UNAIDS, 1998

கிராம மசூதியுடன் இணைந்த இந்த உகாண்டாப் பள்ளியில், ஆண்டவனுக்கு மட்டுமின்றி, ஏமக்குறைவு நோய்க்கும் அஞ்சுவதற்கு மாணவர்கள் கற்கிறார்கள்.



© மேகீலர், கியேட்டிம்

அமெரிக்காவின் சுதந்திரமான எழுத்தாளர் அண்மையில் உகாண்டாவில் பல ஆண்டுகள் தங்கியிருந்து ஐ.நா. ஏமக்குறைநோய் உதவித் திட்டத்திற்காக இரு ஆய்வறிக்கைகளைத் தயாரித்துக் கொடுத்தார். அவற்றில் ஒன்று இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

# வீதிக் குழந்தைகளைச் சொந்த இடத்தில் சந்தித்தல்

கில்லெர்மினா நாவாரோ

இலத்தீன அமெரிக்காவில் வீதிக் குழந்தைகளுக்கான ஒரே ஏமக்குறைவு நோய்த் திட்டம் மெக்சிகோ நகரில் தோன்றியது. இம்மண்டலத்தின் மற்ற நாடுகளுடன் இதுபற்றிய நிபுணத்துவத்தைப் பகிர்ந்துகொள்ள இது தயாராக இருக்கிறது.




மெக்சிகோ நகரில் ஓர் அகதிகள் முகாமில் காசா அலியான்சா என்ற அரசுச் சார்பற்ற அமைவனம் நடத்திவரும் பட்டறையில் ஓர் இளம் அமைப்பாளர்.

தெருதான் அவர்களுடைய வீடு. மெக்சிகோ நாட்டில் பல்லாயிரம் சிறார்கள் தெருவிலே உண்டு உறங்கி விளையாடி வாழ்கிறார்கள். வேலை கிடைக்கும்போது வேலை செய்யச் சொல்கிறார்கள். அநேகர் பாலியல் தொழிலில் இறங்கி விடுகிறார்கள். ஏதோ சில பிசோக் காசு சம்பாதிக்க முடியும். அவர்களை எய்ட்ஸ் நோய் தொற்றும் வாய்ப்பு மிக அதிகம். இன்னும் சில ஆண்டுகளில் அவர்களில் பலர் எய்ட்ஸ் நோய்க்குப் பலி ஆகக்கூடும்.

எய்ட்ஸ் நோய்த் தடுப்பு இலகுவான காரியம் அன்று. அதிலும் தெருவாழ் சிறார் பொறுத்து இன்னும் சிரமமான காரியம். "தெருச் சிறார்கள் ஒரு நிலையற்றவர்கள். சில சமயம் முரடர்களாக முரண்டு பிடிப்பவர்களாக இருக்கிறார்கள்" என்று கூறினார் உளவியல் அறிஞரான கால்பெர்ட்டோ கட்டிக்கா என்பவர். 1986ஆம் ஆண்டிலிருந்து மெக்சிகோவில் தொண்டாற்றிவரும் அரசு சாரா அமைவனமான காசா அலையன்சா 'நிலவு' என்னும் தலைப்பில் ஒரு நிகழ்ச்சித் திட்டம் இரண்டாண்டுகளுக்குமுன் தொடங்கியது. வீடில்லாச் சிறார்களுக்கென லத்தீன் அமெரிக்காவில் உள்ள எய்ட்ஸ் தடுப்புத் திட்டம் அது ஒன்றுதான்.

மௌனம் = மரணம்
"ஆக்ட் அய்" என்னும் ஏமக்குறைநோய் எதிர்ப்புக் குழுவின் முழக்கம்

## அரைகுறை அறிவு

எய்ட்ஸ் நோய்க்கு ஆளான 6,180 சிறார்களையும் குமரப்பருவத்தினரையும் கண்காணித்து வருகிறது நிலவுத் திட்டம். இருளில் ஒளி கொடுக்கும் திட்டமாக அது கருதப்படுகிறது. தடுப்புப் பணி செய்வது முதன்மையானது என்றாலும் எச்.ஐ.வி பாசிடிவ் ஆக உள்ள சிறார்களை நெருங்கிக் கவனித்து, மருத்துவம் செய்கிறது நிலவு. உளவியல் அறிவுரையும் வழங்குகிறது.

"1997 முதல் நோய் தொற்றப்பட்ட சிறார்களின் எண்ணிக்கை அதிகமாகி விட்டது. ஆதலால் தடுப்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்துகிறோம்" என்கிறார் நிலவுத் திட்டத்தில் பணியாற்றும் நிகாசியோ காசியா லோபஸ் என்பவர். "தெருச் சிறார்களுக்கு பாலியல் பற்றியும் எய்ட்ஸ் பற்றியும் தெரியும். ஆனால் அது அரைகுறை அறிவு. ஆகவே பயனுள்ள முறையில் தடுப்புக்கான முயற்சிகள் மேற்கொள்வது அவசியமாக உள்ளது" என்று அவர் மேலும் குறிப்பிடுகிறார்.

காசா அலையன்சா அமைவனத்தைச் சேர்ந்த ஆசிரியர்களும் தாமாக முன்வந்து பணிபுரிவோரும் ஆங்காங்குள்ள தெருப் பையன்களையும் சிறுமிகளையும் தேடிப்பிடித்து அமைவனத்தின் புகலிடத்துக்குக் கொண்டுவந்து வாரம் இருமுறை ஒரு மணி நேரம் 'எச்ஐவி-எய்ட்ஸ் - என்பவை யாவை' என்னும் தலைப்பில் நடைபெறும் பயிலரங்கில் உட்கார வைக்கிறார்கள். எப்படி நோய் பரவுகிறது, எப்படி ஒவ்வொருவரும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று போதிக்கப்படுகிறது. தெருவிலே போய் சிறார்களிடம் போதிப்பதுண்டு. ஆசிரியர்கள் விளையாட்டுச் சாமான்களைத் தூக்கிக் கொண்டு சென்று தெருவிலேயே விளையாட்டு மூலம் சொல்லித் தருவார்கள். அம்பு எய்தல் ஒரு விளையாட்டு. கரும்பலகையில் கட்டங்களில் பாடக் குறிப்புகள் இருக்கும். சிறுவர்கள் எய்யும் அம்பு பதியும் கட்டத்தில் உள்ளதை எடுத்துச் சொல்லி அவர்களிடம் கேள்விகள் கேட்டுப் பாடம் புகட்டுவார்கள் ஆசிரியர்கள். தடகள விளையாட்டு போன்றது மாராத்தான் விளையாட்டு. லூனாகா என்பது பரமபத சோபான விளையாட்டு போன்றது. எச்ஐவி பற்றியும் உடலிலுள்ள தடுப்பு ஏற்பாடு பற்றியும், எய்ட்ஸ் வராமல் காப்பது பற்றியும் அதில் விவரங்கள் இருக்கும். படங்களைக் கொண்டு கருத்துகளை உருவாக்குவது இலகுவான காரியம்.

1996இல் ஐ.நா. குழந்தைகள் நிதி அமைவனமும் மெக்சிகோ நகர அதிகாரிகளும் இணைந்து ஆய்வு செய்ததில் 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட 13,373 சிறார்கள் தெருவில் வாழ்ந்து வேலை செய்கிறார்கள் என்று அறியப்பட்டது. 1992 முதல் 1995-க்குள் அந்த எண்ணிக்கை 20 விழுக்காடு அதிகமாகியது. ஆண்டுக்கு 6 விழுக்காடு அதிகரிப்பு இருந்தது.

காசா அலையன்சா அமைவனம் ஐக்கிய அமெரிக்கா, கனடா, கௌதமாலா, ஹோண்டுராஸ், கோஸ்டாரிகா, நிகராகுவா ஆகிய நாடுகளில் பணியாற்றுகிறது. அங்கெல்லாம் 'நிலவு' கல்வித் திட்டம் செயல்படுகிறது. லத்தீன் அமெரிக்கா முழுவதிலும் பயன்படுத்த உதவியாக கையேடு ஒன்று தயாரிக்கவிருக்கிறது.

மெக்சிகோவிலுள்ள காசா அலையன்சாவின் தலைமையகம் புதிய வண்ணப் புத்தகங்கள், படங்கள், விளையாட்டுகள் தயாரித்து எச்ஐவி பற்றி தகவல்கள் அளிப்பதற்கு திட்டமிடுகிறது. அந்த அமைவனத்தார் பள்ளிகள் முதலியவற்றுக்கு வேண்டுகோளின்பேரில் சென்று உரையாற்றுகிறார்கள். 'நிலவு' திட்டம் பிரகாசமாக வெற்றி நடைபோடுகிறது. ■

---

**மெக்சிக்கோவில் எச்ஐவி/ஏமக்குறைவு நோய்**

மொத்த மக்கள் தொகை 9.42 கோடி. இவர்களில் பீடித்தோர் 1,80,000. 15-49 வயதுப்பிரிவு வயதுவந்தவர்களில் எச்ஐவி கண்டவர் வீதம் 0.35%. மேலும் 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் இந்நோய் பீடித்தோர் 1,700 பேர். இந்நோய் பரவியதிலிருந்து இதுவரை இதற்குப் பலியானோர் எண்ணிக்கை தெரியவில்லை.

ஆதாரம்: UNAIDS, 1998

---

மெக்சிகோ நகரிலுள்ள இதழாளர்.

+...
● http://www.casa-alianza.org



படிப்பகம்

www.padippakam.com



# ஏமக்குறைவு நோய்க் களங்கம்

ஜீன் டுசால்ட்

**ஏமக்குறைவு நோய் கண்டவர்களை ஓரவஞ்சனையுடன் நடத்துவது. இக்கொள்ளைநோய்க்கு எதிரான போராட்டத்தில் ஒரு பெரும் முட்டுக்கட்டையாக உள்ளது. கல்வியறிவூட்டுவதுதான் இதற்கு ஒரே தீர்வு.**

நான் காதலிக்கிறேன்;
உண்கிறேன்;
உடுக்கிறேன்;
மற்றவர்களைப்
போலவே ஒரே
காரியங்களைச்
செய்கிறேன். எனக்கும்
அவர்களுக்கும்
வேறுபாடு உள்ளதா?
நான் நோயுற்றிருக்கிறேன்
என்பதைக் காட்டும்
அறிகுறி ஏதேனும்
என்மீது இருக்கிறதா?
என்னால் யாருக்கும்
ஆபத்து இல்லை.

**ஆர்சேன் தாவோ,**
**கோட்டே டெல்வாயர்:**
**"லா ரெவியூ நுவார்" இதழ்,**
**பாரிஸ்**

தென் ஆஃப்ரிக்க மாகாணமான குவாசுலு-நேட்டாலிலுள்ள ஒரு கிராமத்தில் வசித்த குகுதலாமினி என்ற பெண் எய்ட்ஸ் நோயால் கடுமையாகப் பீடிக்கப்பட்டு, அந்நோய் இருப்பது காரணமாக இறந்து போனாள். நோய் வைரஸ் அவளைக் கொல்லவில்லை. ஊர் அவளைக் கொன்றது. நோய் வந்ததுமல்லாமல் எச்ஐவி பாசிடிவ் பற்றி அவள் வெளிப்படையாகப் பேசியதைக் கண்ட கிராம மக்கள் ஊருக்கே அவமானம் தேடித் தந்தாள் என்று மிகவும் கோபித்துப் பக்கத்து வீட்டுக்காரர் அவளை மோசமாக அடித்துவிடவே அவள் போலீசில் குறையீடு கொடுத்தாள். ஆனால் காவல்துறை அவளைக் காப்பாற்ற ஏதும் செய்யவில்லை. மறுநாள் இரவு, கிராம மக்கள் முதலில் அவளுடைய வீட்டைத் தாக்கினார்கள். பின் அவள்மீது கற்களை எறிந்து அவளை அடித்துக் கொன்றேவிட்டார்கள்.

இந்தக் கதை எப்படியோ உலகம் முழுவதும் பரவியது. ஆனால் உலகத்துக்குத் தெரியவராத இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எத்தனையோ உண்டு. எய்ட்ஸ் நோய் உள்ள குழந்தையை பள்ளிக் கூடத்தைவிட்டு நீக்க வேண்டும் என்று மற்ற குழந்தைகளின் பெற்றோர்கள் போராடுவார்கள். சில பல் மருத்துவர்களும் மற்ற மருத்துவர்களும் எய்ட்ஸ் உள்ளவர்களுக்கு மருத்துவம் பார்க்க மறுப்பார்கள். உதவி புரிய வருபவர்களிடம் அண்டை அயலார் எய்ட்ஸ் நோயாளி அருகில் வசிக்கும் காரணத்தால் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். எய்ட்ஸ் நோயாளி இறந்தபின்னும் மக்கள் மனதில் பயம் போவதில்லை. மயானப் பணியாளர் பிணத்தை ஏற்று இறுதிச் சடங்குகள் செய்ய மறுப்பதுண்டு.

இந்த மாதிரி வேற்றுமை பாராட்டப்படுபவர்கள் பெரும்பாலும் ஏழைகள். ஆதரவு இல்லாதவர்கள். தங்களை மோசமாக நடத்துவது பற்றிப் பிறர்மேல் குற்றம் சொன்னால் நிலைமை மேலும் மோசமாகக்கூடும். எய்ட்ஸ் வந்ததால் நிராகரிக்கப்படுபவர்கள் ஏராளமாக இருக்க வேண்டும். ஒருசிலர் பற்றியே விவரங்கள் தெரிந்துள்ளன.

### ஓரங்கட்டப்படுகிறார்கள்

சுற்றிலுமுள்ளவர்கள் தள்ளிவைப்பது ஒருபுறமிருக்க, வேற்றுமை பாராட்டும் சட்டங்களும் எய்ட்ஸ் நோயாளிகளுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுகின்றன. 'அனைவருக்குமுரிய மனித உரிமைகள் அறிவிப்பு' இருந்தும் அதைமீறி, தடுப்பு நடவடிக்கை என்று சொல்லிக்கொண்டு சில அரசாங்கங்கள் சட்டங்கள் இயற்றுகின்றன. பொது சுகாதாரத் திட்டங்கள் பல மனித உரிமைகளை மீறும் வகையில் உள்ளன. எத்தனையோ எடுத்துக்காட்டுகள் சொல்லலாம்.

சிலரைப் பொறுத்து இரத்தப் பரிசோதனையைக் கட்டாயமாக்கியுள்ளன சில நாடுகள். நியூயார்க் மாநிலத்தில் புதிதாகப் பிறந்த குழந்தைகள் இரத்தப் பரிசோதனை செய்யப்பட வேண்டும். ஐக்கி அமெரிக்காவின் 18 மாநிலங்களில்




சோகத்தில் ஒற்றுமை: டொமினிக் குடியரசில் குமரப்பருவத்தினருக்காக வெளியிடப்படும் இந்தக் கையேட்டின் தலைப்பு.

சிறையிலுள்ள கைதிகளுக்கு இரத்தப் பரிசோதனை செய்யப்படுகிறது. எகிப்து, பல்கேரியா, ஜார்ஜியா போன்ற நாடுகளில் அங்கு 30 நாட்களுக்குமேல் தங்கவரும் வெளிநாட்டவர்களுக்கு இரத்தப் பரிசோதனை கட்டாயம். ஐக்கிய அமெரிக்க மாநிலங்கள் சிலவற்றில் ஒருவருக்கு ஹெச்.ஐ.வி பாசிட்டிவ் என்று தெரியவந்தால் சோதித்த மருத்துவர் அந்த விவரத்தை அரசு அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டும். ஹெச்.ஐ.வி பாசிட்டிவ் கொண்டவர்கள் ஐக்கிய அமெரிக்காவுக்குள் நுழைய அனுமதிக்கப்படுவதில்லை.

"எய்ட்ஸ் பொறுத்து எந்த மனித உரிமை பாதிக்கப்படுகிறது என்பதை அறிய அனைவருக்கு முரிய மனித உரிமைகள் அறிவிப்பைப் படித்துப் பார்க்கும்போது, 40 ஆண்டுகளுக்குமுன் மனிதகுலம் முழுவதற்கும் பொதுவாகப் பயன்படக்கூடியவையாக உருவாக்கப்பட்ட மனித உரிமைகளும் சுதந்திரங்களும் எய்ட்சைப் பொறுத்து பெரும்பாலும் மீறப்பட்டிருக்கின்றன அல்லது மறுக்கப்பட்டிருக்கின்றன என்பதனைக் காண்கிறோம்" என்று மனித உரிமை வல்லுநரான காத்தரீனா தோமாசெவ்ஸ்கி என்பவர் எய்ட்ஸ் தொடர்பான "அறமும் சட்டமும்" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள தன் கட்டுரை நூலில் குறிப்பிடுகின்றார். எய்ட்ஸ் நோயாளிகளின் உரிமைகளைக் கட்டுப்படுத்துவதற்கு எவ்வித மருத்துவ அல்லது பொது சுகாதாரக் காரணமுமில்லை என்று வல்லுநர்கள் கூறுகிறார்கள். இருப்பினும் வேற்றுமை பாராட்டுதல் தொடர்ந்து இருந்து வருகிறது.

கனடா எச்ஐவி/ஏமக்குறைவு நோய் சட்ட இணையத்தின் உறுப்பினர்.

படிப்பகம்

www.padippakam.com

மற்ற நோயாளிகளிடம் பரிவு காட்டுகிறோம். ஆனால் எய்ட்ஸ் நோயாளியிடம் வெறுப்பு காட்டுகிறோம். ஒவ்வொரு நாட்டிலும் ஒரு சிலரைப் பொறுத்து சமுதாயத்தில் ஏதோ ஒரு வகை வெறுப்பு இருந்துவரும். வெளிநாட்டிலிருந்து வந்து குடியேறியவர்கள், அகதிகள், கைதிகள், பரத்தையர்கள், பழங்குடி மக்கள், போதைமருந்துப் பழக்கமுடையோர், ஓரினச் சேர்க்கையர் முதலியோர் வெறுப்புக்குள்ளாகுபவர்களில் சிலர். எய்ட்ஸ் நோய் பற்றித் தெரிந்தபின், அவர்கள் அந்த நோயைப் பரப்பக்கூடியவர்கள் என்னும் கருத்து உருவாகிறது. அவர்களுக்கு உதவுபவர்களையும் மதிப்பதில்லை. அடிப்படை வெறுப்பு எய்ட்ஸ் சம்பந்தப்படும்போது பேருருவம் எடுக்கிறது.


உலகில் இருவகையினரைப் பார்க்கிறோம். எய்ட்ஸ் நோய் வந்தவர்களும் அவர்களுக்கு உதவுகின்றவர்களும் ஒருவகை. நாம் பாதுகாப்புடன் இருக்கிறோம் நமக்கும் அந்த நோய்க்கும் சம்பந்தமில்லை என்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள் மற்றொரு வகை. முதல் வகையினர் எய்ட்ஸ் நோய் இருப்பது வெளியில் தெரிந்தால் கேவலம் என்று நோயை மறைக்கிறவர்களாயிருக்கிறார்கள். நெருப்புக் கோழி தலையை மணலுக்குள் புதைத்துக் கொண்டு பாதுகாப்பா இருப்பதாக எண்ணுவதுபோல இரண்டாவது வகையினர் எண்ணுகிறார்கள். அவர்களுக்கு அந்த நோய் தொற்றாது என்று கூற முடியாது. குறிப்பிட்ட சிலருக்குத்தான் நோய் வருமென்றும் அவர்களோடு சம்பந்தமில்லாதிருப்பதால் கவலைப்பட ஒன்றுமில்லை என்றும் எண்ணுகிறார்கள். ஆகவே முதல் வகையினர் பொறுத்து வேற்றுமை பாராட்டி ஒதுக்குகிறார்கள். வேற்றுமை பாராட்டப்படுபவர்கள் நோய் பரவக் காரணமாக இருந்து வருகிறார்கள்.

எய்ட்ஸ் நோயுற்றவர்களின் அடிப்படை உரிமைகளை மதிக்கத் தவறினால் சமுதாயம் அந்த நோயை எதிர்த்துச் சரிவரச் செயல்பட முடியாது என்றும் நோயுற்றவர்களை பாதுகாப்பது நீதி, நேர்மை அடிப்படையிலும் நடைமுறைக் காரணத்துக்காகவும் முக்கியம் என்றும் உலக சுகாதார அமைவனத்தின் எய்ட்ஸ் திட்டத்தின் தலைவராக இருந்த ஜொனாதன் மான் என்பவர் கூறியிருக்கிறார்.

## நோயுற்றவர்களைப் பாதுகாத்தல்

எய்ட்ஸ் நோய் வைரஸ் பற்றி எடுத்துக் கூறுவது மட்டும் நோயை ஒழிப்பதற்குப் போதுமானதாகாது. தடுப்பு பற்றிய கல்வியில் வேற்றுமை பாராட்டுதல் கூடாது என்றும் போதிக்க வேண்டும். வேற்றுமை பாராட்டுவதைக் குறைக்கும் முயற்சி இன்னும் ஆரம்ப நிலையில் இருக்கிறது. பொதுமக்களும் அரசியலாரும் நன்கு புரிந்து கொண்டால்தான் பயன் விளையும்.

1998இல் மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர் ஆணையமும் ஐ.நா. எய்ட்ஸ் அமைவனமும் சேர்ந்து தனிப்பட்டவர்களின் உரிமைகள் பற்றி 12 வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிட்டன. வேற்றுமை பாராட்டுதலுக்குள்ளாகும் எய்ட்ஸ் நோயாளிகளின் பாதுகாப்புக்காக அரசுகள் சட்டங்கள் இயற்ற வேண்டும் என்று அதில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. கல்வி மூலம் பயிற்சி முகாம் மூலமும், பத்திரிகை முதலிய தகவல் தொடர்புச் சாதனங்கள் மூலமும் வேற்றுமை பாராட்டும் மனப்பாங்கை மாற்ற வேண்டும் எனவும் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது.




இந்த ஜிம்பாப்வே இளைஞன், நாடளாவிய ஏமக்குறைவு நோய் எதிர்ப்புக் குழாம்களின் இணைவனத்தின் ஓர் உறுப்பினர்.

எய்ட்ஸ் தடுப்பு நடவடிக்கைகளில் வேற்றுமை பாராட்டுதல் பிரச்சினை பற்றி எதுவும் செய்யப்படுவதில்லை. ஏதோ சில சினிமாப் படங்கள் எடுத்துச் சிறிது கூறப்பட்டிருந்தாலும், பலருக்கு விழிப்புணர்வு ஊட்ட அது போதாது. சமுதாயத்தில் தாக்கம் ஏற்படவில்லை.

ஒவ்வொரு நாட்டிலும் ஆங்காங்குள்ள சூழ்நிலைகளுக்கும் எய்ட்ஸ் பரவியிருக்கும் நிலைமைக்கும் ஏற்ப வேற்றுமை பாராட்டுதல் கூடாது என்று புகட்டும் கல்வி அளிக்கப்பட வேண்டும். எய்ட்ஸ் நோயாளிகளுடன் நட்பு மனப்பான்மை வளரப் பாடுபட வேண்டும். எய்ட்ஸ் நோயாளிகளின் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் அந்தவகைக் கல்வி அளிக்கப்படுதல் வேண்டும். எய்ட்ஸ் நோயை எதிர்த்துப் போராடுபவர்களுக்கும் வேற்றுமை பாராட்டாத மனப்பான்மையை உண்டாக்க வேண்டும். எய்ட்ஸ் நோய்தான் நமது எதிரியே தவிர, எய்ட்ஸ் நோயாளிகள் அல்லர் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ■



• http://www.aidslaw.ca



படிப்பகம்

www.padippakam.com



# மரணதண்டனையை ஒழிக்க ஆதரவு பெருகுகிறது

◗ மார்ட்டின் ஜேக்காட்

**இன்று மரணதண்டனையை ஒழித்துள்ள நாடுகளின் எண்ணிக்கை அதைப் பயன்படுத்தும் நாடுகளைவிட அதிகம். ஆனால் இன்று உலகில் நிறைவேற்றப்படும் மரணதண்டனைகளில் 80% நான்கு நாடுகளில்தான் நடைபெறுகிறது.**

நாள்தோறும் ஏராளமான செய்திகள் வருவதில் மனித உரிமை தொடர்புடைய அண்மைச் செய்தி ஒன்று பலரால் கவனிக்கப்படாமல் போயிற்று. 1999 ஜூன் 2ஆம் தேதியன்று ரஷ்யத் தலைவர் போரிஸ் யெல்ட்ஸின் 716 பேர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றி உத்தரவிட்டார். 1996இல் ஐரோப்பிய மன்றத்தில் ரஷ்யா சேர்ந்தபின் மன்றத்தின் கொள்கைப்படி அது மரண தண்டனையை ஒழித்தது. 1996இல் ரஷ்யா ஒரே சமயத்தில் 40 பேரைத் தூக்கிலிட்டது. அது வருந்தத் தக்க உலக சாதனை.

தலைவர் யெல்ட்ஸினின் உத்தரவு வரலாற்றில் குறிக்கத்தக்கது என்று ரஷ்ய நீதித்துறை அமைச்சர் பாவெல் கிராஷனின்னிகோவ் குறிப்பிட்டார். ஐரோப்பிய மன்றத்தில் உறுப்பினராக விரும்பும் மற்ற ரஷ்ய நாடுகள் யெல்ட்ஸின் செய்ததிலிருந்து தாங்களும் செய்ய ஊக்கம் கொள்ளலாம்.

## சமநிலை மாறுதல்

ஐரோப்பிய மன்றம்தான் 1983இல் உறுப்பினர் நாடுகள் மரண தண்டனையை ஒழிக்க வேண்டும் என்று முடிவு செய்த முதல் அமைப்பு. அந்த ஒப்பந்தம் 1985இல் அமலுக்கு வந்தது. பெர்லின் சுவர் இடிக்கப்பட்ட பின் 22 ஐரோப்பிய நாடுகள் குறைந்த அளவு சாதாரண குற்றங்கள் பொறுத்து மரண தண்டனையை ஒழித்தன. 1999இல் மரண தண்டனையை ஒழித்த நாடுகள் லாட்வியா, சைப்ரஸ், வட அயர்லாந்து ஆகியவை. 1998இல் அஜர்பைஜான், பல்கேரியா, எஸ்டோனியா, லித்துவேனியா ஆகியவை ஒழித்தன. கிர்கிஸ் தானும் துருக்மெனிஸ்தானும் தூக்கிலிடுவதை நிறுத்தி ஒத்தி வைத்தன.

ஐரோப்பாவை மட்டும் முன்னோடியாகக் குறிப்பிட முடியாது. கடந்த 20 ஆண்டுகளில் பல நாடுகள் மரண தண்டனையை முழுமையாக ஒழித்திருக்கின்றன என்று அவனி கவனிப்புக் கழகம் (அம்னெஸ்டி இன்டர்நேஷனல்) குறிப்பிடுகிறது. 1979இல் 19 நாடுகள் ஒழித்தன. 1999 ஏப்ரலுக்குள் மரண தண்டனை ஒழித்த நாடுகளின் எண்ணிக்கை 68 ஆகிவிட்டது. இன்னும் 14 நாடுகள் யுத்த காலத்தில் மட்டும் மரண தண்டனை விதிக்கின்றன. வேறு 23 நாடுகள் கடந்த 10 ஆண்டுகளாக யாரையும் தூக்கிலிடவில்லையாதலால் அவை நடைமுறையில் ஒழித்துள்ளன என்று கருத இடமுண்டு. ▶

1. ஐரோப்பியப் பெருமன்றம், 1949இல் ஸ்டிராஸ்பர்கில் (ஃபிரான்ஸ்) நிறுவப்பட்டது. தனது உறுப்புநாடுகளில் மக்களாட்சி, மனித உரிமைகள், சட்ட ஆட்சி ஆகியவற்றை வலுப்படுத்துவது இதன் நோக்கம்: இதன் உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை 1989 இல் பெர்லின் பெருஞ்சுவர் வீழ்ச்சிக்கு முன்பு 23 இலிருந்து இன்று 40 ஆக உயர்ந்துள்ளது.

◗ *'யுனெஸ்கோ கூரியர்'* இதழாளர்



© டோப்போர்/மனித உரிமைகள் பாதுகாப்புக் கழகம், பாரிஸ்

1982 இல் பன்னாட்டு மனித உரிமைகள் பாதுகாப்புக்கழகம் வெளியிட்ட, ஃபிரெஞ்சு ஓவியர் ரோலண்ட் டோப்போர் (1938-1997) வரைந்த ஓவியம்.

படிப்பகம்

www.padippakam.com



இன்று மரண தண்டனை விதிக்கும் நாடுகளைவிட அது கூடாது என்று எதிர்க்கும் நாடுகளின் எண்ணிக்கை அதிகமாகிவிட்டது. ஆதரிப்பதும் எதிர்ப்பதும் சமமாக இருந்த நிலை 1997-98இல் மாறியது. ஒரு நூற்றாண்டுக் காலத்தைக் கவனித்தால் முன்னேற்ற வேகம் புரியும். 1899இல் வெனிசூலா, கோஸ்டா ரிக்கா, இத்தாலியிலுள்ள சிறிய குடியரசு நாடான சான் மரினோ ஆகியவை மட்டும் மரண தண்டனையை ஒழித்தன.

ஆங்காங்கே மனித உரிமை இயக்கம் செயல்பட்டதால் இவ்வளவு தூரம் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மரண தண்டனை கொடூரமானது என்னும் கருத்து நாளுக்கு நாள் பலப்பட்டு வருகிறது. குற்றம் செய்யாத அப்பாவி தவறுதலாக தூக்கிலிடப்பட்டார் என்று தெரியவரும்போது ஒன்றும் செய்ய இயலாது. தூக்கிலிட்டது இட்டதுதான். அனைத்துலக அளவில் மரண தண்டனை ஒழிப்புக்கு ஆதரவு கூடி வருகிறது. மரண தண்டனையை ஒழிக்குமாறு கேட்டுக் கொண்டு ஐ.நா பொதுச் சபை தீர்மானம் இயற்றி 10 ஆண்டுகள் ஆகிவிட்டன.

அரசியல் அடக்குமுறை நீங்கியபின் புதுவாழ்வு தொடங்கும் நாடுகள் பல மரண தண்டனையை ஒழித்துள்ளன. முன்னர் பொதுவுடைமைக் கொள்கை கொண்டிருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் தென் ஆஃப்ரிக்காவும் (1997) மரண தண்டனையை ஒழித்தன. அதற்கு முன் அர்ஜன்டைனா, பிரேசில், பெரு, நிகராகுவா, எல் சால்வடோர் ஆகிய லத்தீன் அமெரிக்க நாடுகள் ஒழித்தன.

### மனித உரிமைகளின் தொட்டில்

மற்ற இடங்களில் பொதுமக்கள் கருத்து மரண தண்டனை இருக்க வேண்டும் என்பதாகும். தைரியமிக்க அரசியல் தலைவர்கள் இருந்தால் அக்கருத்தை மீறி மரண தண்டனையை ஒழிக்க முடியும். உதாரணத்திற்கு ஃபிரெஞ்சு சோஷலிஸ்ட் அரசு பதவி ஏற்றதும் 1981இல் மரண தண்டனையை ஒழித்ததைக் குறிப்பிட வேண்டும். 1999இல் மக்கள் கருத்து வாக்கெடுப்பில் அதாவது 18 ஆண்டுகள் கழித்துத்தான் மரண தண்டனைக்கு எதிராக வாக்குகள் விழுந்தன. ஃபிரான்ஸ் ‘மனித உரிமைகளின் தொட்டில்’ என்று பெயர் பெற்றிருந்தாலும் மக்கள் கருத்து மாறுவதற்கு 18 ஆண்டுகள் ஆயிற்று. பெல்ஜியத்திலும் கிரேக்கத்திலும் 20 ஆண்டுகள் தூக்கிலிடும் சம்பவம் இல்லாமலிருந்தாலும் மிகத் தாமதமாக ஒழிப்பு அமலுக்கு வந்தது. பெல்ஜியத்தில் 1996ஆம் ஆண்டிலும் கிரேக்கத்தில் 1993ஆம் ஆண்டிலும் ஒழிக்கப்பட்டது.

இந்த அளவு மாறிய போதிலும் 1998ஆம் ஆண்டில் 37 நாடுகளில் 1,625 பேர் தூக்கிலிடப்பட்டனர். அதில் 80 விழுக்காடு சீனா, ஐக்கி அமெரிக்கா, ஈரான், காங்கோ ஜனநாயகக் குடியரசு ஆகியவற்றில் நடைபெற்றது.

## 37 நாடுகளில் மரண தண்டனைகள்

1998 இல் 37 நாடுகளிலும், ஆட்சி மண்டலங்களிலும் மரணதண்டனைகள் நிறைவேற்றப்பட்டன என பன்னாட்டு மனித உரிமைகள் பாதுகாப்புக் கழகம் கூறுகிறது.

இந்த நாடுகள்: ஆஃப்கானிஸ்தான், பகாமாஸ், பெலாரஸ், சீனா, காங்கோ, கியூபா, எகிப்து, எத்தியோப்பியா, குவாதமாலா, ஈராக், ஈரான், ஜப்பான், ஜோர்டான், கிர்கிஸ்தான், குவைத், லெபனான், நைஜீரியா, ஓமன், பாலஸ்தீனம், பாகிஸ்தான், ரஷியா, ருவாண்டா, செயின்ட்-கிட்டிஸ்நெவிஸ், சவூதி அரேபியா, சியரா லியோன், சிங்கப்பூர், சோமாலியா, சூடான், சிரியா, தைவான், தாய்லாந்து, ஐக்கிய அரபு எமிரேட், அமெரிக்கா, உஸ்பெகிஸ்தான், வியட்னாம், ஏமன், ஜிம்பாப்வே. ■

சீனாவில் 1998இல் 1,657 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. 1,067 பேருக்கு நிறைவேற்றப்பட்டது என அவனிகவனிப்புக் கழகம் மதிப்பிடுகிறது. 1997 முதல் சீனாவில் வரி ஏய்ப்புக்கு மரண தண்டனை உண்டு. 60 பேர் அத்தண்டனை விதிக்கப்பட்டார்கள்.

அவனிக் கவனிப்புக் கழகம் 1998இல் காங்கோ மக்களாட்சிக் குடியரசில் 100

**உள்நாட்டு மற்றும் பன்னாட்டு மனித உரிமைகள் இயக்கங்களின் வளர்ச்சியுடன் இதன் முன்னேற்றம் இணைந்துள்ளது என்பது தெளிவு. மரணதண்டனை ஒரு கொடூரமான, மனிதத் தன்மையற்ற தண்டனை என்னும் எண்ணம் அதிகரித்து வருகிறது.**

பேரும் ஈரானில் 66 பேரும் மரண தண்டனைக்குள்ளானார்கள் என்று கூறுகிறது. ஐக்கிய அமெரிக்காவில் 68 பேரின் மரண தண்டனை மரண ஊசி போட்டு நிறைவேற்றப்பட்டது. அதில் மூன்று பேருக்கு குற்றச் செயல் புரிந்த சமயம் 17 வயதுதான் ஆகியிருந்தது. 1990 முதல் ஐக்கிய அமெரிக்கா, ஈரான், நைஜீரியா, பாகிஸ்தான், சவுதி அரேபியா, யெமன் ஆகிய ஆறு நாடுகள் மட்டும் வயது வராத இளவராக இருக்கும்போது குற்றச் செயல் புரிந்தோருக்கு தொடர்ந்து மரண தண்டனை விதித்து வருகின்றன. யெமனில் நாட்டின் அதிபதியின் அண்மை உத்தரவு இந்த வழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது. குழந்தைகளின் உரிமை பற்றிய ஐ.நா. ஒப்பந்தம் இளவர்களுக்கு மரண தண்டனை விதிப்பதைத் தடை செய்கிறது. சோமாலியும் ஐக்கிய அமெரிக்காவும் தவிர இதர உறுப்பு நாடுகள் அந்த ஒப்பந்தத்தை ஏற்றுறுதி செய்துள்ளன.

### அண்டை நாடுகளில் தொற்றுகிறது

பிரான்ஸைப்போல் ஐக்கிய அமெரிக்காவும் மனித உரிமைகளின் தொட்டில் என்னும் பெயர் பெற்றது. அங்கேயுள்ள பழக்கம் அண்டை நாடுகளில் தொற்றுகிறது. கரீபியனில் குற்றங்கள் அதிகமாதலால் மரண தண்டனை அவசியம் என்று மக்களும் அரசும் கருதுகிறார்கள். 1999 ஜூன் மாதம் தலைநகர் போர்ட் ஆப் ஸ்பெயினில் 9 பேர் தூக்கிலிடப்பட்டார்கள். பஹாமாஸில் இரண்டு ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு இருமுறை மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. 1988இல் ஜமைக்காவில் கடைசியாக மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட போதிலும், இப்போது 40 பேர் மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

### மரண தண்டனை மற்றவரை அச்சுறுத்தி குற்றம் புரியாமல் தடுக்கும் என்பது வெறும் கதை

பிலிப்பைன்ஸில் குற்றச் செயல்கள் அதிகரித்த தால் 1993 டிசம்பரில் மீண்டும் மரண தண்டனை விதிக்க முற்பட்டார்கள். ஆசிய நாடுகளில் முதன்முதலாக மரண தண்டனை பிலிப்பைன்ஸில்தான் ஒழிக்கப்பட்டது. அண்மையில் எடுத்த கருத்துக் கணிப்பில் 80 விழுக்காடு பிலிப்பைன் மக்கள் மரண தண்டனை வேண்டும் என்கிறார்கள். கடந்த 6 ஆண்டுகளில் 914 பேர் பிலிப்பைன்ஸில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தார்கள்.

இதுவரை ஆராய்ந்ததில் மரண தண்டனை மற்றவரை அச்சுறுத்தி குற்றம் புரியாமல் தடுக்கும் என்று தெளிவாக வில்லை. மாறாக, மரண தண்டனை ஒழிக்கப்பட்ட நாடுகளில் கொலைக் குற்றங்கள் குறைந்திருக்கின்றன. உதாரணம்: கனடா, அவனி கவனிப்புக் கழகமும் மற்ற மனித உரிமை அமைவனங்களும் ஐக்கிய அமெரிக்கா குறைந்த அளவு வயதுவராத இளவராயிருக்கும் போது குற்றம் புரிந்தவர்களுக்கும், மனநோய் உள்ளவர்களுக்கும் மிகுந்த வயதானவர்களுக்கும் மரண தண்டனை விதிப்பதை நிறுத்தும் என்று எதிர்பார்க்கின்றன. ■

தமிழில்: கு. ராஜாராம்

**+...**

- Amnesty International, International Secretariat,
  1. Easton Street, WCIXOW London,
  Phone: (44 171) 413 55 00,
  Fax: (44 171) 956 11 57.
- Death Penalty Information Center: http/www.essential.org/dpic
- News about the death penalty: http://iep.univ-lyon2.fr/PdM



படிப்பகம்

www.padippakam.com



# அமெரிக்காவின் விதிவிலக்கு

விக்கி எலியட்

**சமய உரிமையின் செல்வாக்குக்குட்பட்ட ஒரு சூழலில், மரணதண்டனைக்கு எதிரான ஒரு பொதுநிலைப்பாடு ஓர் அரசியல் தற்கொலை என்று கருதப்படுகிறது.**

அமெரிக்காவில் 51 மாநிலங்களில் 38 மாநிலங்கள் இப்போதும் மரண தண்டனை விதிக்கின்றன. சுமார் 3,500 பேர் மரண தண்டனை நிறைவேற்றப்படுவதற்காகக் காத்திருக்கிறார்கள். அவர்கள் 47 விழுக்காடு வெள்ளையர்கள். 42 விழுக்காடு கருப்பர்கள். 1998இல் 68 பேர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டிருக்கிறது. சிறார்களுக்கும் மரண தண்டனை விதிக்கும் பழக்கம் மாறவில்லை. மேலும் ஐக்கிய அமெரிக்காவில் மனக் கோளாறு உள்ளவர்களுக்குக்கூட மரண தண்டனையி லிருந்து விதி விலக்கு இல்லாதது அசாதாரணமாக உள்ளது.

அமெரிக்கர்களில் ஐந்தில் நான்கு பேர் மரண தண்டனை விதிப்பதை ஆமோதிப்பது ஏன்? 1960ஐ அடுத்து குடியியல் உரிமைக் காலம் நிலவியபோது மரண தண்டனையை ஆதரிப்போர் 42 விழுக்காடாகக் குறைந்தது. 10 ஆண்டுகள் தற்காலிகமாக மரணதண்டனையை நிறுத்தி வைத்திருந்த அமெரிக்க உச்சநீதிமன்றம் 1976இல் மீண்டும் மரண தண்டனை விதிக்கத் தொடங்கியது. அதன்பின் மரண தண்டனைக்கு ஆதரவு கிட்டத்தட்ட ஒரே மாதிரி இருந்தது. கடுமையான குற்றவாளிகளை வாய்மொழி உறுதியின் பேரில் வெளியில் விட அனுமதி வழங்காமல் சிறையிலேயே வைத்திருக்கலாம் என்று சொன்னால் மரண தண்டனையை ஆதரிப்போர் எண்ணிக்கை 60 விழுக்காடாகக் குறையும்.

கொலைக் குற்றங்கள் குறையவில்லையே என்றும் மரணதண்டனை விதிப்பதுதான் சரி என்றும் எண்ணும் மனப்பாங்கு இருந்து வருகிறது. மரண தண்டனை விதிப்பதற்கான நியாயங்கள் என்ற பட்டியலைப் பெருக்கி வருகிறார்கள் சட்டாக்கப்பணி செய்பவர்கள்.

அமெரிக்காவின் தென் மாநிலங்களில் கொலைக் குற்றங்கள் அதிகம். சட்டபூர்வமான விசாரணையின்றி அங்கே ஒரு காலத்தில் தண்டனை கொடுக்கப்பட்டு வந்தது. மரண தண்டனை விதிக்கப்படுவோர் இக்காலத்திலும் தென் மாநிலங்களில் அதிகம். டெக்சாஸ் மாநிலத்தில் மட்டும் 1997இல் தென் மாநில மொத்தக் கணக்கில் பாதிப்பேர் மரண தண்டனைக்குள்ளானார்கள். கலிபோர்னியாவில் மரண தண்டனை விதிக்கப்படவிருப்பவர்களின் எண்ணிக்கை மற்ற மாநிலங்களைவிட அதிகம். முன்பு மரண தண்டனை ஒழிப்புக்கு ஆதரவாயிருந்த நியூயார்க் ஆளுநர் மரியோ கௌமோ மரண தண்டனையை மீண்டும் கொணர்ந்து




டெக்சாசில், தூக்கிலடப்பட்ட கைதியின் கல்லறையிலுள்ள சிலுவையில், பெயருக்குப் பதிலாக, கைதியின் இலக்கம் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

விட்டார். அரிசோனாவில் மரண தண்டனைக்கு ஆதரவு மிகுதி.

தூய்மைவாதக் கொள்கையின் அடிப்படையில் வளர்ந்த மனப்பாங்கு இன்றும் துப்பாக்கியை ஆட்டிப் பயமுறுத்தும் பண்பாடு காரணமாக கொடியவர்களாக விளங்குவோர் மரண தண்டனைக்குள்ளாவதை விரும்புகிறது. மதக் கொள்கைகளிலிருந்து விலகாத சூழ்நிலையில் மரண தண்டனை ஒழிக்கப்படுதல் வேண்டும் என்று சொல்வதானது அரசியல் தற்கொலைக்குச் சமமானது என்று கருதப்படுகிறது. மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றுவதற்கு நிர்வாகத் தலைமைக்கு உள்ள அதிகாரம் இப்போது அபூர்வமாகப் பயன்படுத்தப்படுகிறது. 1992இல் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றதையடுத்து பில் கிளிண்டன் மனக் கோளாறு உள்ள ஒருவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படலாம் என்று ஒப்புதல் அளித்தார். அதே சமயம் கலிபோர்னியா ஆளுநர் கிரேடேவிஸ் இரண்டு பேருடைய மரண தண்டனை நிறைவேற்றப்படுவதற்குத் தடை விதித்து உத்தரவிட்டார். இரண்டு பேர் செயலையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

குற்றவியல் நீதிமுறை, தேர்தல் முக்கியத்துவம் கொண்ட அரசியலோடு பின்னிப் பிணைந்திருக்கிறது. ஒரு வழக்கில் மரண தண்டனை விதிக்கும்படி நீதிமன்றத்தில் வாதாட முடிவு செய்யும் மாவட்ட அட்டர்னிக்கு அரசாங்க ஆதரவு கிடைக்கிறது. நியமிக்கப்பட்ட மாநில நீதிபதிகள் அடுத்த பொதுத்தேர்தலில் நியமனம் நீடிக்கலாம் என்பதற்கு வாக்குகள் பெறவேண்டியுள்ளது. ஆயுள் காலம்வரை பதவியிலிருக்கலாம் என்று நியமிக்கப்பட்ட இணைப்பாட்சி நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் உறுதிப்படுவதற்கு அரசியலார் தயவை நாடவேண்டியுள்ளது. கொலைக் குற்றங்கள் பொறுத்து வழக்கு நடவடிக்கை எடுப்பதற்கு மாநில அரசுக்கு 12 லட்சம் டாலர் செலவாகும். அதை ஆராய்வதற்கு நீண்டகாலம் ஆகிறது. மாநிலச் சட்டங்கள் மேல்முறையீடு செய்வது பொறுத்துக் கடுமையாக உள்ளன.

குற்ற வழக்கு விசாரணையில் நீதிபதிக்கு உதவுவதற்காக சான்றோர் தேர்வு செய்யப்படும்போது இனவேற்றுமை பாராட்டக் கூடாது என்று 1984இல் அமெரிக்க உச்ச நீதிமன்றம் தீர்ப்பு சொல்லியிருக்கிறது. இருந்தும் மரண தண்டனை பொறுத்து இனவேற்றுமை உணர்வு தலை தூக்குவதைக் காணலாம். 1977-க்கும் 1998-க்கும் இடையே 500 பேர் மரண தண்டனை விதிக்கப்பட்டார்கள். பாதிப்பேர் வெள்ளையர்கள். மறுபாதி கருப்பர்கள். வெள்ளையர்களைக் கொன்றதற்காக மரண தண்டனை பெற்றவர்கள் 81.8 விழுக்காடு ஆகும். கொலைகள் போன்ற குற்றங்கள் மிக அதிகமாக நடைபெற்றிருக்கும்போது தண்டனை விதிப்பதில் பாரபட்சம் காட்டப்படுகிறது. ஒரேவிதமான குற்றத்துக்கு கருப்பர் என்றால் மட்டும் மரணதண்டனை விதிக்கப்படுகிறது. அந்த ஏழை கருப்பரிடம் வழக்கறிஞர் வைத்து வாதாடப் பணவசதி இருப்பதில்லை.

(தொடர்ச்சி ஐம்பத்திநான்காம் பக்கம்)

"யுசான்ஃபிரான்சிஸ்கோ கிரானிக்கிள்" இதழாளர்

* பன்னாட்டு மனித உரிமைகள் பாதுகாப்புக் கழகத்தின் புள்ளிவிவரங்கள்

படிப்பகம்

www.padippakam.com



# நவீன நடனத்தின் உருக்குக் குகை

ஜீன் - மார்க் அடோல்ப் மற்றும் மார்ட்டின் ஜேக்கட்

**முன்பு எப்போதும் இல்லாதவாறு, நவீன நடனம் இன்று வடக்குமுதல் தெற்கு வரை, கிழக்கு மேற்குவரை, எதிர்த்திசையிலும் தீவிரப் பண்பாட்டுப் பரிமாற்றத்தின் மறுபெயராக விளங்கிவருகிறது.**

ஆஃப்ரிக்காவிலுள்ள ஜோகன்னெஸ் பர்க் நகரைச் சேர்ந்த சொவெட்டோ வில் 1994 ஏப்ரலில் தென் ஆஃப்ரிக்கத் தலை வராக நெல்சன் மண்டேலா தேர்ந்தெடுக்கப் பட்டதை அடுத்து ஜீன் ஃபிரான்காய்ஸ் டுரௌரே என்ற வெள்ளை இன ஃபிரஞ்சு நாட்டியக்காரர் தன் நாட்டியத் திட்டத்தைச் சில இளம் தெரு நடனக்காரர்களிடம் விளக்க முற்படுகிறார். அவருக்கு அரை குறை ஆங்கிலம்தான் தெரியும். அவருடைய ஆங்கிலத்தை யாராலும் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்த வெள்ளைக்காரர் ஏன் இங்கு வந்திருக்கிறார்? நம்மிடம் என்ன சொல்ல விரும்புகிறார் என்று கேட்பதுபோல இருந் தது இளைஞர்கள் முகம். அவர்களுக்கு நடனம் கற்றுத்தர விரும்பினார். ஆனால் இளைஞர்களுக்கு அவர் சொல்வது ஒன்றும் புரியவில்லை. திடீரென்று டுரௌரே எழுந்து நின்று நடனமாட ஆரம்பித்தார். அப்புறம் இளைஞர்கள் ஒவ்வொருவராகக் கலந்து கொண்டு கூட நடனமாடினர். முன்னேற் பாடில்லாத இந்த ஆட்டம் ஐந்து மணி நேரம் தொடர்ந்து நடைபெற்றது.


### பேசாமல் பேசுதல்

சொற்களின்றிப் பேசினேன். அவர் களும் புரிந்துகொண்டார்கள். சிறுவயது முதல் அந்த இளைஞர்கள் நடனமாடுவார் கள் என்றாலும் முறையான பயிற்சி இல்லாதவர்கள். அநிச்சையாக நான் ஆடியது அவர்களைப் பிடித்துக் கொண் டது. எங்களுக்கு பரஸ்பர நம்பிக்கையும் மதிப்பும் வளர்ந்தது. பின்னர் எல்லோரும் சேர்ந்து புதியன படைத்தோம் என்று கூறினார் டுரௌரே.

அவர்கள் சேர்ந்து நாட்டியம், இசை, பாட்டு எல்லாம் கலந்து தெருவாகிய நிலைக் களத்தில் நகரத்துக்குரிய சடங்கு களை இணைத்து உருவாக்கிய நடனத்துக்கு 'நீ இங்கே என்ன செய்து கொண்டிருக் கிறாய்?' என்பது தலைப்பு. ஃபிரெஞ்சு பண்பாட்டுத்துறை அதிகாரிகளும் தென் ஆஃப்ரிக்க அதிகாரிகளும் டுரௌரேயின் நடனத் திட்டத்தில் முதலில் நம்பிக்கை கொள்ளாதிருந்தனர். பின்னர் ஆஃப்ரிக்க மக்களும் ஐரோப்பிய மக்களும் 1997, 1998 ஆண்டுகளில் பெரிதும் வரவேற்றனர். டுரௌரோ இப்போது அதே முயற்சியை குவாசுலு - நேட்டாலிலுள்ள டர்பன் நகரில் மேற்கொண்டிருக்கிறார்.

சந்திப்புகளுக்கும் இணைந்து செயல் படவும் அகத்தூண்டுதல் அளிப்பது டுரௌரே நடனங்களின் முதன்மை நோக்கம். அது போலன்றி, இயா சோலா என்பவர் நடனத்தின் மூலம் அளவு சொல்ல முடியாத அகத்தின் ஆழத்துள் சென்றுவரும் அனுபவத்தை ஏற்படுத்து கிறார். வியட்நாமைச் சேர்ந்த சோலா குமரியாயிருக்கும்போது நாடு கடத்தப் பட்டு மேலை நாடு வந்து சேர்ந்தார். அங்கே அவர் ஒட்டவில்லை. பின்னர் வியட்நாம் திரும்பிவந்து நாட்டின்

அமெரிக்க நடன இயக்குநர் சூசன்பியூர் ஜேயின் "கோடை நடனம்".



ஜீன்-மார்க் அக்டோபர், "மூவ்மென்ட்" என்னும் ஃபிரெஞ்சுக் கலை இதழின் ஆசிரியர்; பாரிசிலுள்ள பாஸ்டில் நாடக மன்றத்தின் நடனக் கலை ஆலோசகர். மார்ட்டின் ஜேக்கோட், "யுனெஸ்கோ கூரியர்" இதழாளர்.

படிப்பகம்

www.padippakam.com





ஃபிரெஞ்சு நடன இயக்குநர் மாரிஸ் பேஜார்ட்டின் "வசந்தகாலச் சடங்கு"

வளமான பண்பாட்டுக் கலையான ஹட்சியோ பயின்றார். 13ஆம் நூற்றாண்டில் உருவான அக்கலை, பாட்டு, நாடகம், நாட்டியம், தாளம் எல்லாம் சேர்ந்தது. 15 உழவர்களைச் சேர்த்துக் கொண்டு நவீன நடனம் ஒன்று அமைத்தார். அதைப் புரிந்து கொள்ள மொழி தேவையில்லை. வியட்நாமின் முந்திய துயர அனுபவத்தை அந்நடனம் பிரதிபலித்தது. பஞ்சமும் மழையும் என்ற தலைப்பில் ஒரு நடன நிகழ்ச்சி அமைத்தார். நடனத்தின்போது ஓரிடத்தில் உடன் ஆடுபவர்கள் இறந்து போன தங்கள் உறவினரின் படங்களைக் காட்டி ஆடுவார்கள். அதன்பின் முன்னொரு காலத்தில் என்ற நிகழ்ச்சியும் 'வாய்லா வாய்லா' என்ற தலைப்பில் ஒரு நிகழ்ச்சியும் தயாரித்தார். வாய்லா வாய்லா நியூயார்க்கில் லிங்கன் மையத்தில் ஒருமுறை ஆடப்பட்டது. தன் குழுவுடன் ஃபிரான்ஸ், டென்மார்க், சுவீடன், பெல்ஜியம், பிரிட்டன், போர்ச்சுகல் ஆகிய நாடுகள் சென்று நிகழ்ச்சிகள் நடத்தினார். "நடன அசைவுகள் எல்லா உணர்ச்சிகளையும் தெளிவாகக் காட்டியதால் எதையும் மொழி பெயர்த்துச் சொல்லவேண்டிய அவசியமில்லை. எல்லா ஊர்களிலும் மக்கள் நடன மொழியை நன்கு புரிந்து கொள்கிறார்கள்" என்று கூறினார் சோலா.

## நாடோடிக் கலை

ஜோஸ் நவாஸ் என்பவர் வெனிசூலாவைச் சேர்ந்தவர். தாய்வழியில் சிவப்பிந்திய, ஸ்பானிஷ் இரத்தமும், தந்தை வழியில் இத்தாலிய, ஆஃப்ரிக்க இரத்தமும் கலந்து அவருடைய உடலில் ஓடுகிறது. நியூயார்க்கில் படித்துவிட்டுச் சில ஆண்டுகளாக கனடாவைச் சேர்ந்த மான்ட்ரீலில் தங்கியிருக்கிறார். ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் நடனப் பயிற்சியும், நடன அமைப்புப் பயிற்சியும் பெற்றார். அவர் நடனத்தில் வெனிசூலா பண்பாடு பேசும், நடனத்தின் மூலம் மொழித்தடைகளைக் கடந்துவந்து விட்டார்.

> "எனக்குக் கிராமத்து முதியவர்கள் பழைய பாணியில் பயிற்சியளித்தார்கள். ஆனால், நடனத்தை ஒரு தொழிலாகக் கொள்வேன் என்றோ, இசையில்லாமல் மௌனத்தில் நடனமாடுவேன் என்றோ நான் ஒரு போதும் நினைத்ததில்லை. வெளி நாடுகளில், என்னுள்ளிருக்கும் இசையை நான் கண்டறிந்து கொண்டேன்".


இன்றைய நடனத்தின் மூலம் பண்பாட்டுப் பரிமாற்றம் செய்யப்படுகிறது. நடனம் பேச்சு மொழியைக் கடந்தது. மனித குலத்தின் பொதுவான அனுபவங்களை நடனம் எதிரொலிக்கிறது. "தேசிய, இனப்பாகுபாடுகளுக்கு அப்பால் பார்க்கும்போது நாமெல்லாம் மனிதர்கள் என்பது புலனாகும். குழந்தை அழுவதற்கு உலகம் பூராவும் ஒரே பொருள்தான்" என்று கூறியுள்ளார் டுரெளரே. நடனக்கலை உலகை வேறுபாடானதாகவும் காட்டவல்லது, இசையைப்போல, இசையுடன் கலந்த நடனம் மனிதக் கற்பனையைத் தூண்டி புதுப் பார்வையில் உலகைப் பார்க்கச் செய்கிறது.

நடனத்தின் இப்படிப்பட்ட தன்மைகளால் நவீன நடனம் உலகெங்கும் மேலோங்கி நிற்கிறது. 1998இல் 52 நாடுகளிலிருந்து 442 நடன அமைப்பாளர்கள் பாரிஸ் நகரின் புறநகர்ப்பகுதியான ஸீன் செயின்ட் டெனிஸ் எனுமிடத்தில் பன்னாட்டு நடன அமைப்புத் திருவிழாவிற்கு வந்திருந்தனர். நவீன நடனத்துக்கு முதன்மை இடம் அளித்து கடந்த பத்தாண்டுகளில் அநேக விழாக்கள் நடைபெற்றன. பிரேக், பிரேசில், டோக்கியோ, ஸ்டாக்ஹோம், வில்னியஸ், அடிலெய்ட் ஆகிய இடங்களில் விழாக்கள் நடந்தேறின. நடுநிலக் கடல் பகுதியிலும் விழாக்கள் நடைபெறுகின்றன. 1999 ஆரம்பத்தில் டியூனிஸ்ஸில் நடனக் கலைஞர்கள் கூட்டம் நடந்தது. எகிப்து, லெபனான், அல்ஜீரியா, மொராக்கோ, ஜோர்டன், சிரியா ஆகிய நாடுகளிலிருந்து நடனக் கலைஞர்கள் பங்கேற்றனர். கசாபிளாங்க்காவிலும் பெய்ரூட்டிலும் அத்தகைய கூட்டங்கள் நடைபெறவிருக்கின்றன. ▶

படிப்பகம்

www.padippakam.com





© ஃ-ஆன். பாரிஸ்

வியட்னாம் நடன இயக்குநர் இயா சோலாவின் "இல் ஆ ஏட்டே அன் ஃபாய்ஸ்" என்ற நடனம்.

# மாறிவரும் நடனக் கலை

மற்ற கலை வடிவங்களைப் போலவே நடனக் கலையும் நினைவுக்கெட்டாத காலம் முதல் வாழ்ந்து வருகிறது. அது புதிய பாணிகளைக் காண்பதில் ஒருபோதும் சளைத்ததில்லை. கிரேட்டிலுள்ள பாலைக்கோஸ்டிரோ கோயிலில், திராட்சையும் கால்நடைகளும் செழுமையாக வளர்வதற்காக ஜீயஸ் கடவுளுக்கு நடனாஞ்சலி செலுத்தப்பட்டது. இது போன்ற சடங்குகளை இந்தியா முதல் கொலம்பசுக்கு முந்திய அமெரிக்கா வரைக் காணப்பட்டன. நடனக்கலை, ஒரு சமுதாயச் சடங்கிலிருந்து, ஒரு மெய்ப்பாட்டு வடிவமாக எப்போது உருவாகியது என்பதைத் துல்லியமாகக் கூற முடியுமா? எடுத்துக்காட்டாக, இந்தியாவில், தற்காப்புக் கலைகளிலிருந்து நடனக்கலை ஒரு மேடைக்கலை வடிவமாக உருவாகியது. இது பற்றி என்ன சொல்வது?

மானிடவியலறிஞர் ஜோகான் கீலினோஹோ-மோக்கு, மரபுக்கூட்டு நடனம் (பாலே) என்பது, 'ஒரு வகை மனித இனப்பிரிவு நடனம் என்று நகைச்சுவைபடக் கூறினார். "பாலே" நடனம் 14ஆம் லூயி மன்னன் காலத்தில் ஃபிரான்சில் செல்வாக்குப் பெற்றது. இவர்தான் மேலை நாடுகளில் முதலாவது அரசவை நடனக் கழகத்தை நிறுவினார். அரசரேகூட 1670வரை பொது அரங்குகளில் நடனமாடினார். "பாலே" நடனம், பண்பாட்டுப் பரிமாற்றத்திற்கும் வழிவகுத்தது. இத்தாலிய நாட்டிய நாடகக் குழுக்கள் 17ஆம் நூற்றாண்டில் ஃபிரான்சுக்கு வந்தன. ஆனால், 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான், நவீன நடனம் தோன்றியது. இந்தக் கலைவடிவம் விரிந்த அளவில் தனது செல்வாக்கை நிலைநாட்டியது.

உலகளாவிய ஆன்மிக மெய்ப்பாட்டு வடிவங்களை அறிந்துகொள்வதில், தணியாத் தாகம் கொண்ட அமெரிக்க நடன இயக்குநரும் நடனக் கலைஞரு மான ரூத் செயின்ட்-டெனிஸ் புதிய பாணிகளை உருவாக்குவதற்கு அகத்தூண்டுதல் பெற்றார். கீழ்த்திசை நடனங்களில் பேரார்வம் கொண்ட இவருக்கு, ஓர் எகிப்திய தேவதைப் பற்றிய ஒரு சுவரொட்டி பெருந்தூண்டுதலாக அமைந்தது. இவருடைய 'எகிப்து, கிரீஸ், இந்தியா என்ற நடனம் 1916இல் அமெரிக்காவில் நடைபெற்றது. நைல் நதிக்கரைகள் முதல் கங்கை நதிக்கரைகள் வரை நடந்த பண்டைய நடனக்காட்சிகளின் ஒரு கலவையாக இது அமைந்திருந்தது. இவரது சமகாலத்துச் சகநாட்டவ ரான இசாடோரா டங்கன், 'வெற்றுக் கால் நடனத்தின் தாய்' எனக் கருதப்பட்டார். இவர் பண்டைய கிரீஸ் ப்ற்றிய கற்பனை வடிவத்தை உருவாக்கி, கடந்த காலத்துக் கடுமையான கட்டுத்திட்டங்களிலிருந்து உடலை விடுவிக்க முயன்றார்.

உடலின் 'மெய்ம்மை பற்றிய இந்தத் தேடல், 20 ஆம் நூற்றாண்டு நெடுகிலும் தொடர்ந்து நடந்தது. 'இங்கும்' 'வேறெங்கும் இடையிலான இடைவிடாத பரிமாற்றங்கள் நடைபெற்றன. முதலில் அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்குமிடையிலும், பின்னர் கீழ்த்திசை நாடுகளுடனும் இப்பரிமாற்றங்கள் நடந்தன. லண்டனில் 1916இல் ஜப்பானிய நடக்கலைஞர் மிஷியோ இட்டோ, 'வைரியின் கிணறு என்ற ஜப்பானிய நோ மரபு நாடகத்தை ஐரிஷ் கவிஞர் டபிள்யூ. பி. ஈட்ஸ் உதவியுடன் நவீன முறையில் உருவாக்கி நடத்தினார். டக்வியா எகுச்சி என்ற மற்றொரு ஜப்பானிய நடனக்கலைஞர், ஜெர்மனிக்கு வந்து அங்கு புகழ்பெற்றிருந்த நடனமேதை மேரி விக்மானிடம் நடனம் கற்றுச் சென்றார். இவர், தாயகம் திரும்பி, நவீன மெய்ப்பாட்டு நடனக்கலைக்கும் ஒரு புதிய பரிமாணத்தைச் சேர்த்தார்.

பாரிசில் நடந்த குடியேற்ற நாட்டுக் கண்காட்சிகள், ஜாவானிய, குர்திஸ், பாரசீக, ஆர்மினிய நடனங்களை மக்களுக்கு அறிமுகப் படுத்தின. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, இந்தப் பண்பாட்டுக் கலவையும், பரிமாற்றமும் புதிய இயக்காற்றலுடன் மீண்டும் தொடங்கியது. 1970 முதல் நவீன நடனக்கலை அபரிமிதமாக வளர்ச்சி பெற்றதற்கு ஜெர்மன், அமெரிக்க, ஜப்பானிய நடனக்கலைஞர்களும், ஆசிரியர்களும் இட்ட வித்துகளே காரணம்.

ஃபிரான்ஸ் ஒரு சந்திப்பு முனையாக விளங்கியது. ஃபிரான்சின் நடன உலகின் முன்னணி நட்சத்திரங்களில் சிலர் அயல்நாட்டினர். இவர்களில் சூசன் பியூர்ஜே, மார்க் பங்கின்ஸ் இருவரும் அமெரிக்கர்; ஹைடியுகிக யாமுனா ஜப்பானியர்; ஜோச ஃ நாடி அங்கேரியர்; எல்சா ஒலியாஸ்டன், ஏஞ்சலின் பிரிலியோக்காய் அல்பேனியர்கள். இந்த இயக் கத்தின் தாக்கம் ஐரோப்பா முழுவம் பல்வேறு அளவுகளில் உணரப்பட்டது. ■

▶ நடனம் சிலசமயம் வேறு நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியாக இடம் பெறுவதுண்டு. அங்கோலாவில் 20 ஆண்டுகள் உள்நாட்டு யுத்தம் நடந்து முடிந்தபின் நாட்டைச் சீரமைக்கும் முயற்சிகள் நடைபெற்றன. அப்போது 1995இல் முதல் லுவாண்டா நடன விழா நடைபெற்றது. ஆஃப்ரிக்காவில் நவீன நடனம் மலர்ந்ததை ஒட்டி 1998இல் ஆஃப்ரிக்க நடன அமைப்புத் திருவிழா நடத்தப் பெற்றது. கோட்டி டெல்வாயர், பர்கினோ பாசோ, கென்யா, தென் ஆஃப்ரிக்கா, நைஜீரியா, மடகாஸ் கர், கானா, மொசாம்பிக் ஆகியவற்றில் பரிசுபெற்ற நடனக் குழுக்கள் 1999 செப்டம்பரில் மான்ட்ரீலில் நடைபெற்ற புதிய நடனத் திருவிழாவில் கலந்து கொண்டன.

நடனம் உடல் இயக்கத்தைக் கொண்டது. நடனம் அதேபோல் ஓரிடத்தில் தேங்கி நிற்காமல் இடம் பெயர்ந்து நாடோடி போல் பல இடங்களுக்கும் செல்லும். நடனக் கலைஞர்கள் இவ்வாறு பல இடங்களுக்கும் செல்வதால் நடன மரபுகள் பல கலந்து புதியன உருவாவது கடந்த சில ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இரண்டு ஃபிரெஞ்சு நடன அமைப்பாளர்கள் ஜப்பானில் ஒரு நடனக் குழு அமைக்கச் சென்றார்கள். ஜப்பானில் சுகாக்கூ இசையில் தேர்ந்த ஷிண்டோ மதகுரு ஒருவருடன் அமெரிக்கரான சூசன் பயர்க் சேர்ந்து வேளாண்மைப் பருவங்களை வைத்துப் புதிய நடனம் அமைத்தார்கள். லிஸ்பனைச் சேர்ந்த கிளாரா ஆண்டர்மாட், வெர்டியன் முனையைச் சேர்ந்த நடனக் கலைஞர்களுடன் சேர்ந்தும், ஜெர்மனியைச் சேர்ந்த சுசான்லிங்க்கே செனகல் நடன் கலைஞர்களுடன் சேர்ந்தும் புதியன படைத்தார்கள். இப்படி எத்தனையோ நிகழ்ந்துள்ளன.

### பன்னாட்டு மக்கள் சேர்ந்த சிறு கூட்டம்

நடனக் குழுக்களில் பன்னாட்டவரும் இருப்பது இப்போது சகஜம். ஜெர்மனியைச் சேர்ந்த டான்ஸ் தியேட்டர் என்னும் நடனக் குழுவில் பத்து நாடுகளைச் சேர்ந்தவர்கள் பங்கு பெறுகிறார்கள். அந்தந்த நாட்டுத் தனி அம்சங்களும் நடனங்களில் இடம் பெறுவது காணலாம். பர்கினோபாசோவைச் சேர்ந்த இரண்டு நடனக் கலைஞர்கள் தெற்கு ஃபிரான்சிலுள்ள ஒரு நடன அமைப்பு மையத்தில் சேர்ந்தார்கள். அவர்கள் தங்கள் சொந்த நாட்டுத் தொடர்பையும் விடவில்லை. அவர்களில் ஒருவர் சொந்த நாட்டில் சிக்னிட்டோ என்ற பெயரில் நாட்டிய நிகழ்ச்சி நடத்தினார். அதற்கு 1998இல் லுவாண்டா விழாவில் பரிசு கிடைத்தது.

"என்னுடைய பண்பாட்டையும் என் அனுபவத்தையும் மற்றவர்களுக்கு வழங்கி அவர்கள் தங்கள் பண்பாட்டிற்கேற்ப எதிரொலிக்கச் செய்வது எப்படி என்பது எனக்கு சவாலாக இருக்கிறது" என்று கூறினார். டெரௌரே வெவ்வேறு பண்பாடுகளை இணைத்து புதிய நடன உருவம் உண்டாக்க அவர் முயலுகிறார்.

(தொடர்ச்சி ஐம்பத்திநான்காம் பக்கம்)

படிப்பகம்

www.padippakam.com



# கடைசிக் கட்டத்தில் ஒளிப்பட இதழியல்?

எட்கார் ரோஸ்கிஸ்

**ஒளிப்படச் செய்திகள் தேவைக்கு மிகுதியாக இருக்கின்றன. தொலைக்காட்சியிடமிருந்து போட்டி கடுமையாக உள்ளது. ஒளிப்பட இதழியல் உயிர் பிழைத்திருக்குமா?**



அல்ஜீயர்சின் புறநகர்ப்பகுதி: 1997 செப்டெம்பர் 23: ஒரு படுகொலையில் குடும்பத்தின் பல உறுப்பினர்களை இழந்த ஒரு பெண்மணிக்கு இன்னொரு பெண் ஆறுதல் கூறுகிறார். இந்தப்படம் உலகெங்கும் பத்திரிகைகளில் முதற்பக்கத்தில் வெளிவந்தது.



பெய்ஜிங்கில் 1989 ஜூன் 4 அன்று மாணவர்கள் போராட்டம் நடந்தபோது ஒரு மாணவன் பீரங்கிவண்டிகளின் அணியை வழிமறிக்கிறான்.

அல்ஜீயர்ஸில் மிகவும் கலங்கி அழுது கொண்டிருக்கும் பெண்மணிக்கு அவருடைய தோழி ஆறுதல் கூறுவது போல அமைந்த ஒளிப்படம் மிகவும் பிரபலமானது. (இடதுபக்கம் பார்க்க). அது உலகத்துச் செய்தித்தாள்களிலெல்லாம் முதற்பக்கத்தில் அச்சாகி உலகத்தாரின் உள்ளத்தை உலுக்கியது. அந்தக் காட்சியை ஒரே ஒருவர்தான் படம் பிடித்தார். 1997 செப்டம்பர் 23ஆம் தேதி ஃபிரெஞ்சு முகன்மையான ஏஜன்ஸ் ஃபிரான்ஸ் பிரெஸ்ஸி என்ற நிறுவனத்தின் ஒளிப்படக் கலைஞர் ஹோசைன் அந்தப் படம் எடுத்தார். வேறு யாரும் அந்தக் காட்சியைப் படம் எடுக்கவில்லை. அந்தப் படம் தான் செய்தித்தாள்களில் முதற்பக்கத்தில் வருகிற படங்களில் கடைசியானதாக இருக்கும் என்று இப்போது சொல்ல வேண்டியிருக் கிறது.

அல்ஜீயர்ஸ் படத்தைப்போல் புகழ் பெற்ற படம் 1989 ஜூன் 4ஆம் தேதி பெய்ஜிங்கில் ஓர் இளைஞன் தனி ஆளாக முன்னேறி வரும் இராணுவ டாங்க் வண்டிகளைத் தடுத்து நிறுத்திய படமாகும் (இடது பக்கம் கீழே காண்க). ஆனால் அக்காட்சியை மூன்று ஒளிப்படக் கலைஞர்கள் அதே இடத்தில் படம் எடுத்தார்கள். அசோசியேடட் பிரஸ், மேக்னம் மற்றும் சிப்பா பிரஸ்ஸி, பிரிட்டனின் இன்டிபெண்டன்ட் டெலிவிஷன் நியூஸ் ஆகிய மூன்று நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் படம் பிடித்தனர்.

அல்ஜீயர்ஸ் படம்தான் தனிப் பெருமைக்குரியது. ஏனென்றால் அந்தக் காட்சியை வேறெவருமே படம் எடுக்கவில்லை. தனித்த ஒருவர் மட்டுமே எடுத்த படத்தைப் பத்திரிகையாளர்கள் முந்து செய்திப் படம் (ஸ்கூப்) என்று கூறுவார்கள். முந்து செய்திப் படத்துக்கு உலகளவில் கிராக்கி இருக்கும். ஆயிரக்கணக்கான டாலர் பணமும் கிடைக்கும். பலர் ஒரே காட்சியைப் படங்கள் எடுத்திருந்தால் தனி மதிப்பு ஏற்படாது. அல்ஜீயர்ஸ் படம் எடுத்தவர் செய்தி முகன்மையிடம் மாதச் சம்பளத்துக்கு வேலை பார்ப்பவர். அந்த முதன்மை பல பத்திரிகைகளுக்கு மாதக் கட்டணத்தின்பேரில் படங்கள் வழங்கும். ஒவ்வொரு படத்துக்கும் இவ்வளவு என்று படம் ▶

நான்டெரேயிலுள்ள (ஃபிரான்ஸ்) பாரிஸ்-X பல்கலைக்கழகத் தகவல் மற்றும் செய்தித் தொடர்புத் துறையின் முதுநிலை விரிவுரையாளர்.

படிப்பகம்

www.padippakam.com



▸ எடுத்தவர் பணம் பெறுவாரானால் அவரும் அந்த முகன்மையும் நல்ல வருமானம் பார்த்திருக்க முடியும்.

அல்ஜீயர்ஸ் படம் போல முந்து செய்திப் படம் இப்போது எடுக்கப்படுகிறதா என்றால் இல்லையென்று கூறவேண்டியிருக்கிறது. 1967ஆம் ஆண்டில் ரேமண்ட் டிபார்டன் என்ற ஃபிரெஞ்சு ஒளிப்படக் கலைஞரும் டான் மக்கல்லின் என்ற பிரிட்டிஷ் ஒளிப்படக் கலைஞரும் மட்டுமே பயாப்ராவில் நடைபெற்ற போரைப் படம் பிடித்தார்கள். 1994இல் பல ஒளிப்படக் கலைஞர்கள் இனக்கொலைகள் நடந்து மூன்று மாதங்கள் கழித்து விமானங்களில் ருவாண்டா போயிறங்கி படங்கள் எடுத்தனர். ஆக, முந்து செய்திப் படங்கள் வருவதற்கு வாய்ப்பில்லாதிருக்கிறது.

### பெருத்த வளர்ச்சி

ஒளிப்படம் எடுப்பது கண்டுபிடிக்கப் பட்டது 1839ஆம் ஆண்டில் என்று பலராலும் கருதப்படுகிறது. அதிலிருந்து ஒளிப்படக் கலை பெரிதாக வளர்ந்துவிட்டது. ஏற்கனவே எடுத்த படத்தைப் பிரதிபலிக்காத தனிவகைப் படம் எடுப்பது அபூர்வம் என்றாகிவிட்டது. ஏனென்றால் ஏராளமாகப் படங்கள் எடுக்கப்படுகின்றன. படங்கள் நிறைய வருவதால் அவற்றுக்குச் சன்மானம் குறைவாகவே கிடைக்க முடியும்.

ஒளிப்படம் வெறும் ஒளிக் காட்சி. மௌன ஒளிக்காட்சி. படத்திற்குத் தலைப் பிட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒளிப் படத்தைப் பார்த்ததும் உள்ளார்ந்த பொருள் புரிந்து விடுகிறதா? குதிரைமேல் உட்கார்ந்து ஒருவன் சாட்டையை வீசுவதால் படம் இருக்கிறதென்றால் அவன் எதிரிகளிட மிருந்து விரைவாகத் தப்பி ஓடப் பார்க்கிறவனா அல்லது தைரியத்தோடு எதிரியைச் சந்திக்கப் போகிறவனா என்பது படத்தின் தலைப்பிலிருந்து ஓரளவு புரியும். தலைப்பு உண்மையைச் சொல்ல வேண்டியது முக்கியம்.

நாடு கடத்துவதற்காக ஃபிரெஞ்சு யூதர்கள் பாரிஸ் நகரின் வெல்டிஹிவ் விளையாட்டு மைதானத்தில் வைக்கப்பட்டிருப்பதைக் காட்டுவதாக சில படங்கள் பற்றி வெகுகாலமாக எண்ணப்பட்டு வந்தது. 1942 ஜூலையில் எடுத்த படங்கள் என்றும் கருத்து நிலவியது. ஆனால் பின்னர் 1942-க்கு இரண்டு வருடங்களுக்குப் பிறகு நடந்த கூட்டமொன்றின் படம் என்று தெரிய வந்தது. ஆட்கள் ஏறியிருந்த பேருந்து ஒன்றைப் பாரிஸ் நகரத்து ஆட்கள் வேடிக்கை பார்ப்பதாக இருந்த ஒளிப் படத்தைப் பற்றி ரெஜிஸ்டெப்ரே என்பவர் தன் நூலில் ஏதோ ஆராய்ந்து எழுதியிருந்தார். பின்னர், யூதர்களை பாரிஸ் நகருக்கு வெளியே உள்ள டிரான்சி முகாம் அழைத்துச் செல்வதற்காக இருந்த பேருந்து என்பது தெரியவந்தது.

ஒளிப்படம் என்பது வெறும் நிழல் தான், வேறில்லை. என்றாலும் சில ஒளிப் படங்கள் மக்கள் அபிப்பிராயத்தை உருவாக்கி, வரலாற்றையே மாற்றியிருக் கின்றன. இதற்குக் குறிப்பிடத்தக்க உதாரணமாக 1972 ஜூன் 8ஆம் தேதி வியட்நாம் கிராமமான டிராங் பாங்கில் எடுத்த படத்தைச் சொல்ல வேண்டும். தெற்கு வியட்நாம் விமானம் ஒன்று தவறுதலாக டிராங் பாங்கில் குண்டு வீசிவிட்டது. அப்போது உடலில் தீப்பிடித்த 10 வயதுச் சிறுமி துணிகளை வீசி எறிந்து விட்டு நிர்வாணமாக அலறிக் கொண்டு ஓடி வருகிறாள். இந்தக் காட்சியை நிக் அட் என்ற வியட்நாம் ஒளிப்படக் கலைஞர் மிக அருமையாகப் படம் பிடித்திருந்தார். உலகமே அதைக் கண்டு உருகியது. இன்னோர் உதாரணம், சைகோன் காவல் துறைத் தலைவர் சந்தேகப்பட்டு ஓர் ஆளை நேர் எதிரில் அருகே நின்று கொண்டு சுட்டுத் தள்ளியதை எடி ஆடம்ஸ் என்ற அமெரிக்கர் தத்ரூபமாகப் படம் எடுத்ததாகும். மூன்றாவது உதாரணம் மொகடிஷு தெருக்களின் வழியே அமெரிக்கப் போர்வீரரின் செத்த உடலை நிர்வாணமாக இழுத்துச் செல்லும் படமாகும் இந்தப் படத்தைப் பார்த்ததும் ஐக்கிய அமெரிக்க மக்கள் அமெரிக்க துருப்புகள் சோமாலியாவை விட்டு வந்து விட வேண்டும் என்று குரல் எழுப்பினர்.

பட இதழியல் பயனுள்ளது என்றால் உலக நாளிதழ்கள் மற்றும் வார மாத இதழ்களில் ஒரு படம் வெளியாகி அதைப் பார்த்த மக்கள் பொங்கி எழ வேண்டும். இப்போது இந்த வேலையை தொலைக் காட்சி செய்கிறது. தொலைக்காட்சியில் வரும் படம் ஒளிப்படக் காட்சிபோல் அவ்வளவு தெளிவாக இல்லாதுபோயினும் வர்ணனை போன்ற அம்சங்கள் கூடுதல் பலம் கொண்டவை. நிகழ்ச்சி நடைபெற்ற சமயம் தொலைக்காட்சிப் படம் பிடித்துக் காட்டினால் இன்னும் பயன் அதிகம்.

### தொலைப் பிரசன்னம்

ஒளிப்படமும் தொலைக்காட்சி அறிவிப்பு போல நன்மை பயப்பதுதான். ஒளிப்படத்தை மீண்டும் மீண்டும் பார்க்கலாம். தொலைக்காட்சிப்படம் திரையை விட்டுப் போய்விடும். தொலைக் காட்சியில் உள்ள வசதி, நிகழ்ச்சி பற்றி விளக்கவும் எடுத்துச் சொல்லவும் முடியும். 1960-லிருந்து தொலைக்காட்சிப் பெட்டி ஒரு வீட்டுப் பொருளாகிவிட்டது. தொலைக் காட்சி அறிவிப்பு அதிகம் பேரைச் சென்றடைகிறது. அபூர்வ நிகழ்ச்சியைப் ஒளிப் படம் பிடிக்க ஒளிப்படக் கலைஞருக்குத் திறமையும் தைரியமும் வேண்டும். சிறிது நேரம் தாமதமானாலும், முந்தினாலும் தலையாய காட்சி கிடைக்காமற் போய்விடும்.

## ஒளிப்பட இதழியல் : எவ்வாறு செயற்படுகிறது?

ஒளிப்பட இதழியல் மூன்று வகைப்படும். முதலாவதும், பழைமையானதுமான சுதந்திரமான தனியார் ஒளிப்படக் கலைஞர்களை நம்பியிருக்கிறது. இவர்கள் ஒரு கருத்தினை எடுத்துக் கொண்டு, அதற்கான படங்களைப் பிடித்து, பல்வேறு செய்தித் தொடர்புச் சாதனங்களுக்கு - முக்கியமாகப் பத்திரிகைகளுக்கும், சில சமயம் நாளிதழ்களுக்கும், வழங்குகிறார்கள். சில நேர்வுகளில், பத்திரிகைகளே இவர்களை அமர்த்திக் கொண்டு தங்களின் தனித்தேவைகளுக்கு அல்லது திறம்பாடுகளுக்கு ஏற்படச் செய்திகளைத் தயாரித்துக் கொடுக்கும்படி கேட்கின்றன.

ஒரு குறிப்பிட்ட நிறுவனத்திற்காகக் குழுமமாகப் பணிபுரியும் ஒளிப்படக் கலைஞர்கள் இரண்டாவது வகை. இந்த வகையில் மிகப் பழமையான புகழ்பெற்ற நிறுவனம் மாக்னம் ஆகும். இது 1945இல் நிறுவப்பட்டது. ஒளிப்படக் கலைஞர் களின் கூட்டுறவுச் சங்கமாக இயங்கும் ஒரே நிறுவனம் இது. மற்றொரு புகழ்பெற்ற நிறுவனம் காமா. இதை 1967இல் ரேமண்ட் டிப்பார்டனும் அவரது நண்பர்களும் தொடங்கினர். பின்னர், சிக்மா, சிப்பா - பிரஸ் .என்ற நிறுவனங்கள் அமைக்கப்பட்டன. இவை அனைத்தும் பாரிசில் உள்ளன. இவை ஒளிப்படக் கலைஞர்களுக்குப் பணம் கொடுக்கும் முறையும், அதனால் அவர்களின் செயற்பாட்டு முறைகளும் வெகுவாக மாறிவருகின்றன. நிறுவனமும், ஒளிப்படக் கலைஞர்களும் வாடிக்கை இதழின் ஆசிரியர்களுடன் பணிக்கு முன் கலந்தாலோசிக்கின்றனர். அந்தப் பணிக்கான செலவினையும், ஒளிப்படங்களை வெளியிடு வதால் கிடைக்கும் ஆதாயங்களையும் பகிர்ந்து கொள்கின்றனர். வெளியீட்டுக் கட்டணங்களை இதழ்கள் நேர்வுக்கு நேர்வு என்ற அடிப்படையில் பேரம் பேசி முடிவு செய்கின்றன. தங்கள் ஒளிப்படங்கள் அனைத்திற்குமான பதிப்புரிமையை அவர்களே வைத்துக்கொள் கின்றனர். பாதிப் பாதி என்ற உடன்பாடு, பெரிய பணிகளைப் புரட்சிகரமாக மாற்றியுள்ளது.

அசோசியேட்டட் பிரஸ் (அமெரிக்கா), ராய்ட்டர்ஸ் (பிரிட்டிஷ்), ஏஜன்சி ஃபிரான்ஸ் (ஃபிரான்ஸ்) போன்ற பெரிய செய்தி நிறுவனங்களால் நடத்தப்படும் ஒளிப்பட இதழியல் மூன்றாவது வகை. இது கம்பி சேவை என்று அழைக்கப்படுகிறது. இந்நிறுவனங்களுக்குச் செய்தித் தொடர்புச் சாதனங்கள் சந்தா செலுத்தி, அந்நிறுவனங்களின் ஒளிப்படங்களையும் செய்திகளையும் கணக்கின்றிப் பயன்படுத்திக்கொள் கின்றன. ■

## இம்மாத வலைத்தளம் http://www.unfpa.org

உலக மக்கள் தொகை 1999 அக்டோபர் 12 அன்று 600 கோடியை எட்டியது. ஐ.நா. மக்கள் தொகை நிதியத்தின் வலைத்தளத்தில் சேர்க்கப்பட்டுள்ள ஆய்வுப் பொருள்களில் இதுவும் ஒன்று. இந்நிதியம், வளர்முக நாடுகள், மக்கள் தொகை பற்றிய சிக்கல்களைச் சமாளிப்பதற்கு உதவுகிறது. குடும்ப நலத் திட்டம், சுகாதாரக் கவனிப்பு, மகளிர்க்கு சரிநிகர் உரிமை ஆகியவை இந்நிதியத்தின் பணிகளில் முக்கியமானவை. இது 30 ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்டது. அடுத்த 10 ஆண்டு மிகவும் நெருக்கடியானது என்று இது எச்சரிக்கிறது. அடுத்த சில ஆண்டுகளில் மேற்கொள்ளப் படும் சமூகத் திட்டங்கள், அரசியல் முடிவுகளைப் பொறுத்து உலக மக்கள் தொகை 800 - 1,200 கோடியை எட்டி விடும். ■

படிப்பகம்

www.padippakam.com





கிம் ஃபூக் என்ற இந்த 10 வயது வியட்னாமியச் சிறுமி, நேப்பாம் குண்டினால தீப்பிடித்த தன் ஆடையைக் களைந்தெறிந்துவிட்டு இவ்வாறு ஒரு கிராமச் சாலையில் தலைதெறிக்க ஓடுகிறாள். 1972 இல் வெளியான இந்த ஒளிப்படம் வியட்னாம் போரின் பயங்கரத்தை அமெரிக்கர்களுக்கு உணர்த்தியது.

தொலைக்காட்சியின் உதவியால் நிகழ்ச்சியிடத்துக்குப் பார்ப்பவர்கள் தொலைவிலிருந்து காண்பது இயலுகிறது. ஃபிரெஞ்சு எழுத்தாளர் ஜீன் லூயிஸ் வீஸ்பெர்க் தொலைவிலிருந்து காண்பது என்று குறிப்பிடுவார். வார மாத இதழ்களுக்கு தொலைக்காட்சி வந்தபின் மக்கள் கருத்தை உருவாக்கும் வாய்ப்பு குறைந்து விட்டது. ஏதோ சில சமயம் அபூர்வமாக மக்கள் கருத்தை உருவாக்குவதுண்டு. சுடச்சுட செய்தி வழங்கும் பணி வீடியோ மண்டலத்துக்குப் போய்விட்டது. ஒளிப்படக் கலைஞர்கள் இருப்பதால் ஏதோ ஓடுகிறது. அவர்களுக்கும் படங்களைப் வெளீயிடுவது கடினமாகப் போய்விட்டது.

ஆதலால் ஒளிப்பட இதழியல் கடைசிக் கட்டத்தை எட்டிவிட்டது என்று சொல்லலாமா? அப்படிச் சொல்லிவிட முடியாது. அப்படி இருக்கலாம் என்று வேண்டுமானால் சொல்லலாம். ஒளிப்படச் செய்தி சேகரிக்கும் முகன்மைகள் காம்மா, சைக்மா, சிபாபிரெஸ்ஸி போன்றவை புத்தகங்களுக்குப் படம் தயாரித்துக் கொடுத்தல், வேறு தகவல்துறை துறைகளுக்குத் தேவையானதை கொடுத்தல் போன்ற இதழியலுக்கு அப்பாற்பட்ட வேலைகள் செய்கின்றன. இந்த முகன்மைகள் பொருளாதார பலம் குறைந்து காணப் படுகின்றன . பெரிய முதலீட்டாளர்கள் இந்த முகன்மை களைக் குறைந்த விலைக்கு வாங்கக்கூடிய நிலைமை வந்துவிட்டது. புகழ் பெற்ற முகன்மை நிறுவனத்தை வாங்குவதற்கு ஆகும் செலவு அந்த நற்பெயர் உண்டாக்க ஆகும் செலவை விடக் குறைவாகவே இருக்கும்.

காம்மா முகன்மையை வாங்குவதற்கு வங்கிகள் முன் வந்தன. பில் கேட்டின் மைக்ரோசாப்ட் நிறுவனமும் அதன் தகவல் களஞ்சியமான கார்பிஸ் நிறுவனமும் ஒளிப்படக் களரிகளை வாங்க முயலுகின்றன. 1999 ஜூன் மாதத்தில் கார்பிஸ் நிறுவனம் சைக்மா முகன்மையை வாங்கியது. அதன் ஒளிப்படங்களுக்குப் பதிப்புரிமை இல்லை. ஆகையால் அவற்றின் படிகள் எத்தனை வேண்டுமானாலும் எடுத்துப் பயன்படுத்தலாம். எவ்வளவு காலமானாலும் பயன்படுத்தலாம். படம் எடுத்தவருக்குத் தொகை எதுவும் கொடுக்கத் தேவையில்லை. படங்களை மலிவாக விற்கவும் முடியும்.

## கம்பி வழி படம்

" இப்போது புதிதாக எடுக்கப்பட்ட ஒளிப்படத்துக்கும் படக் களரியிலிருந்து எடுத்த படத்துக்கும் வேற்றுமை தெரிவதில்லை" என்கிறார் பாரிஸ்மாட்ச் என்னும் ஃபிரெஞ்சு வார இதழின் தலைவர் ரோஜர் தெரொண்ட். ஒளிப்படங்கள் அதிகம் வந்து ஒளிப்பட இதழியலைக் கொல்கின்றன. அதிக வரிகள் போடுவதால் வரிவிதிப்பே கொல்லப்படுவது போல இருக்கிறது. தொலைக்காட்சி வந்தபின் இதழ்கள் நசிக்கும் என்று 20 ஆண்டுகளாகச் சொல்லப்பட்டு வந்தது. ஆனால் இதழ்கள் இன்றும் அழகாக அதிகப் படங்களுடன் அச்சாகி வெளிவரத்தான் செய்கின்றன. உண்மை நிலவரம்தான் என்ன?

பழைய அனுபவம் போகவில்லை. பட இதழியலைக் காப்பவர்கள் இருந்து கொண்டேயிருக்கிறார்கள். 1903இல் ஃபிரெஞ்சுப் பொறியாளர் எடுவர்டு பெலின் என்பவர் தொலைபேசி மூலம் ஒளிப்படத்தை ஓரிடத்திலிருந்து வேறு இடத்துக்கு அனுப்பும் எந்திரம் கண்டுபிடித்தார். இன்று தொலைச் செய்தி அனுப்புவது போலச் செய்தார். சரியான நேரத்தில் படங்கள் கிடைக்கப் பெற்று செய்தித்தாள்கள் உடனுக்குடன் வெளியிட வசதி ஏற்பட்டது. அசோசியேடட் பிரஸ், ராய்ட்டர்ஸ், ஏஜன்ஸ் பிரான்ஸ் பிரெஸ்ஸி போன்ற நிறுவனங்கள் தொலைபேசி மூலம் பத்திரிகைகளுக்குப் ஒளிப்படங்கள் அனுப்பி வருகின்றன. தொலைக்காட்சி வந்தபின்னும் இந்த நிறுவனங்கள் செய்திப் ஒளிப்படங்கள் எடுத்து வழங்குகின்றன. இந்த நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் எங்கள் வேலையைச் செய்து கொண்டுதான் இருக்கிறோம் என்கிறார்கள். செய்தித்தாள்கள் தேவையான படங்கள் வெளியிட முடிகிறது என்று மன நிறைவு கொள்கின்றன. ஒளிப்படங்கள் கொண்டு செய்தி சொல்லும்படி இதழியல் இப்போது திறமையான சில ஒளிப்படக் கலைஞர்களால் காப்பாற்றப்பட்டு வருகிறது. ■

தமிழில் : கு. ராஜாராம்

படிப்பகம்

www.padippakam.com



# மானுவல் காஸ்டெல்ஸ்: குடிகளுடன் போரிடும் எந்திரம்

தொழில் நுட்பப் புரட்சியானது, பொருளாதார வாழ்வையும், செய்தித் தொடர்புகளையும் புரட்சிகரமாக மாற்றி, தொழில் சமுதாயத்தின் அடித்தளத்தையே ஆட்டங்காணச் செய்து வரும் வேளையில், புகழ்பெற்ற ஸ்பானியச் சமூகவியலறிஞர், உருவாகி வரும் தகவல் சமுதாயத்தில் குடிகளின் நிலை என்ன? என்ற கேள்வியை எழுப்புகிறார்.

**தொழில்வளம் மிக்க எட்டு நாடுகளைக் கொண்ட ஜி8 (G8) குழுவின் அண்மைக் கூட்டத்தில் உலகமயமாக்கல் கொள்கை மனித நலம் பேணுவதாகவும் இருத்தல் அவசியம் என்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. அப்படியென்றால் இதுவரை அக்கொள்கை கொடூர மானதாக இருந்து வருகிறதா?**

வலுவானவர்கள் கண்ணுக்கு மனித நலத்துக்கு அமைக்கப்பட்ட கொள்கையாக ஆக்க பூர்வமானதாகத் தோன்றும். பலவீன மானவர்கள் கண்ணுக்கு அது கொடூரமான தாகத் தோன்றும். இப்படி இருவகைத் தோற்றத்தை அது உண்டாக்குகிறது.

உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு தன் வாழ்க்கைத் தரத்தைக் கணிசமாக உயர்த்தி, தன் பண்பாட்டு மற்றும் தொழில் நுட்ப வள ஆதாரங்களை விரிவுபடுத்திக் கொண்டுள்ளது. இன்னொரு பக்கம் ஏற்றத் தாழ்வு அதிகமாகி, வறுமை வளர்ந்து, சமூகத்தில் ஒதுக்கப்படுவதும் ஓரங்கட்டப் படுவதும் மிகுந்து வருவது காணப்படுகிறது. இந்தியா, சீனா, சிலி போன்ற நாடுகள் விதிவிலக்காக உள்ளன.

நாளொன்றுக்கு இரண்டு டாலருக்கும் குறைவான வருமானம் உடையவர்கள் உலக மக்கள் தொகையில் 40 விழுக்காடு ஆகும். இவர்களுள் அநேகர் கொடிய வறுமையில் உழல்கிறார்கள். பண்பாட்டு வறுமையும் உண்டு. இந்த மக்கள் தகவல் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்த இயலாதவர்கள். ஆகவே உலகமயமாக்கலில் மனித நலம் என்பது வலுவான நாடுகளில் உள்ள மிகவும் முன்னேறிய கல்வியறிவும் விவேகமும் உடையவர்கள் மட்டுமின்றி மற்றவர்களும் புதிய தொழில் தொடர்பு போன்றவற்றைப் பயன்படுத்தக் கூடியவர்களாக இருக்குமாறு செய்வதாகும். ஆனால் தற்சமயம் இது வெறும் கனவாக இருக்கிறது. ஏனெனில் வேற்றுமை பாராட்டுதல் இருந்து கொண் டிருக்கிறது.

**நீங்கள் வேற்றுமை என்பது ஓர் இனமாக வளர்ந்துவிட்ட தொழிலாளர்களுக்கும் தாங்களே திட்டமிட்டுக் கொள்ள வேண்டிய நிலையிலுள்ள தொழிலாளர் களுக்கும் இடையே உள்ள வேற்றுமை போன்றதா?**

முற்றிலும் அப்படியல்ல தாங்களே திட்டமிட வேண்டியவர்கள் மாறிக்கொண் டேயிருக்கும் தொழில் நுட்பங்களுக்கு ஏற்ப தாங்களும் மாறிக்கொள்வதற்கு வேண்டிய கல்வி, பண்பாடு எல்லாம் உடையவர்கள். ஆனால் அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத தால் தனிநபருக்கு ஏதேனும் நோய் அல்லது குடும்ப நெருக்கடி வந்தால் திண்டாட வேண்டியதுதான். மத்தியதர வர்க்கச் சிறார்கள் போதை மருந்துப் பழக்கத்துக்கு அடிமையாகி, சிறைசெல்ல நேரிடுகிறது. அதனால் சமுதாயத்தால் ஒதுக்கப்படு கிறார்கள்.

> சிலிக்கன் பள்ளத்தாக்கில் பணியாற்றுபவர்களுக்குப் பெரும்பாலும் வழக்கமான சம்பளமாக அல்லாமல் பங்குகளாக ஊதியம் வழங்கப்படுகிறது. எனவே, ஒரு சகா ஆக்க முறையில் செயற்படவில்லை என்ற காரணத்தின் பேரில் அவரை வேலையிலிருந்து நீக்க வேண்டியிருந்தால்கூட, நிறுவனத்தில் தங்களை முன்னேற்றிக் கொள்வது அவர்களின் நலனுக்கு உகந்ததாகும்.

ஓர் இனமாக உள்ள தொழிலாளர்கள் போதுமான கல்வியறிவு இல்லாதவர்கள், இதில் இரண்டு வகை உண்டு. தொழிலாள ருக்குப் பாதுகாப்புகள் உள்ள நிறுவனங் களில் அல்லது நாடுகளில் பணிபுரிபவர் களுக்கு வேலை உத்தரவாதமும் கண்ணிய மான வாழ்க்கைத் தரமும் உண்டு. அதே சமயம் பணக்காரநாடுகளில் வசதிகளற்ற புறநகர்ப் பகுதிகளில் வாழ்வோரும், ஏழை நாடுகளில் வாழ்வோரும் வேலை வாய்ப்பு இன்றி வாடுவார்கள்; சமூகப் புறக்கணிப் புக்கு உள்ளாவார்கள்.

**முன்னைவிட இன்று முதலாளித்துவம் மிருகத்தன்மையுடையதாய் இருக்கிறது என்று ஏன் சொல்கிறீர்கள்?**

ஏனென்றால் அது சமுதாய ஒப்பந்தத்தை முறித்துவிட்டது. இக்கால இணைப்பு வசதி கள் முதலாளித்துவத்துக்குப் பயன்படுவன வாக உள்ளன. அவ்வசதி இல்லாதவர்கள் பாடு மோசமாக இருக்கிறது. தனக்கு வசதி யான விதிமுறைகளை ஏற்படுத்தி எல்லா வற்றையும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்கிறது முதலாளித்துவம். தொழிற் புரட்சிக் காலத்தில் எதிராக நின்றவை இந்த உலகளாவிய தகவல் தொடர்பும், தொழில் நுட்ப மேம்பாடும், உற்பத்திச் செழிப்பும் உள்ள இக்காலத்தில் செயல்பட இயலாதவையாக உள்ளன. வலுத்தவன் கைப் பணியாரமாக இப்போது உள்ளது.

**இதற்கு விதிவிலக்கு உண்டா?**


எதிர்ப்போர் நசுக்கப்படுவார்கள். ஏனெனில் இணைப்பு வசதிகள் வலுவுள்ள வர்கள் கையில் உள்ளது. நிறுவனத்தில் உள்ள மேலாளர்களோ வெளியில் உள்ள பங்குதாரர்களோ ஒன்றும் செய்துவிட முடியாது. சிலிகான்வேலியைப் பாருங்கள். அங்கே மிக முன்னேறிய முதலாளித்துவம் விளங்குகிறது. தொழிலாளர்கள் 1960ஆம் ஆண்டுக்காலத்து மார்க்சிய கொள்கைப்படி உரிமைகளோடு இருக்கிறார்கள். அங்கே வேலை செய்பவர்கள் சம்பளம் வாங்கு வதில்லை. பெரும்பாலும் பங்குதாரர்களாக ஆகி, பங்குகளாக ஊதியம் பெறுகிறார்கள். ஆகவே நிறுவனத்தை மேலும் மேலும் முன்னேற்றுவதற்கு அவர்களுக்கு அக்கறை ஏற்படுகிறது. சக தொழிலாளி உற்பத்தித் திறன் குறைந்தவராக இருந்தால் அவரை வேலையை விட்டு அனுப்புவதில் தயக்கம் காட்டுவதில்லை.



படிப்பகம்

www.padippakam.com





## ஐ.நா. பற்றி காஸ்டெல்ஸ்

யுனெஸ்கோ போன்ற பன்னாட்டு அமைவனகளுக்கு உண்மையில் முக்கியப் பங்குப் பணி உண்டு. இன்றும் அரசியல் சாதனங்களாக இருந்துவரும் அரசுகளுக்கும், மக்களின் குறிக்கோள்களின் அடிப்படையிலான தேவைப்பாடுகளுக்கும் இடையில் - முக்கியமாக மேம்பாடு மற்றும் அமைதித் துறையில் - ஒரு பிணைப்பாக அவை அமையலாம்.

எனவே, அவை சங்கமங்களாக விளங்க வேண்டும். அதேசமயம், நடைமுறைத் திட்டங்களை உருவாக்கும் அரங்குகளாகவும் அதிக அளவில் செயல்புரிய வேண்டும். எடுத்துக் காட்டாக, ஏற்றத்தாழ்வையும் தனிமையாக்கத்தையும் குறைக்கும் முக்கியச் சாதனம் கல்வி என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால், உண்மையில் கல்வி என்றால் என்ன? இன்றை மனிதகுலத்தில் கல்வியறிவு எட்டாமலிருக்கும் மூன்றில் இரு பகுதியினரைக் கல்வி எட்டுவதற்கு என்ன செய்ய வேண்டும்? இதற்கான பதில் அரசுகளிடமிருந்து வரவேண்டும். ஆனால், ஓர் உலகளாவிய கல்வி உத்தியை வகுப்பதற்கு உகந்த அமைவனம் யுனெஸ்கோ ஒன்றுதான்.

உலகப் பண உதவி நிதியம், உலக வங்கி, ஜி - 8 நாடுகளின் குழுமம் போன்ற பன்னாட்டு நிறுவனங்கள், உலகளாவிய பரிமாற்றங்களை நிருவகித்து வருகின்றன. ஆனால், அவை தொழில் நுட்பப் புதுப்புனைவுகள், பொருளாதார உற்பத்தித்திறன், தகவல் பெருக்கம் ஆகியவற்றில் மட்டுமே கவனம் செலுத்தி வருகின்றன. யுனெஸ்கோ, உலகச் சுகாதார அமைவனம், பன்னாட்டுத் தொழிலாளர் அமைவனம் போன்ற அமைப்புகளினால் இவற்றின் அதிகாரம் சமநிலைப்படுத்தப்பட வேண்டும். இவை, பொருளாதாரம் மற்றும் தொழில் நுட்பத்திற்காக மற்ற அமைப்புகள் செய்தது போன்று, ஒரு புதிய உலகச் சமுதாய மற்றும் பண்பாட்டு ஒப்பந்தத்தை உருவாக்க முடியும். ஆனால், இவை இணைவனங்களின் வல்லமையைப் பயன்படுத்தி அதே போன்ற சட்ட முறையையும், அதிகார உரிமையினையும் பெற்றால் மட்டுமே இதில் வெற்றிகாண முடியும். ■

***நீங்கள் சொல்வதிலிருந்து தனி நபர் முக்கியத்துவம் அல்லவா தெரிகிறது? வர்க்க உணர்வு காணோமே?***

தொழில்நுட்ப முன்னேற்றம் பொருளாதார நிலை ஆகியவை காரணமாக வேலை வாய்ப்பு குறையும் என்பது வெறும் கதையாகி விட்டது. அது ஒருபுறமிருக்க, இப்போதுள்ள அடிப்படை மாற்றம் தொழிலாளருடன் உள்ள உறவில் விரும்பிய மாற்றம் செய்யக்கூடிய சூழ்நிலை உருவானதுதான். இணைவனங்களாகச் செயல்படும் நிறுமங்கள் நிலையான வேலை என்ற பழைய தொழிற்புரட்சிக் காலத் தத்துவத்தை அழித்துவிடுகின்றன.

தொழிற்புரட்சியின் தாயகமான பிரிட்டனில், 55 விழுக்காடு தொழிலாளர்கள் தற்காலிக அல்லது பகுதி நேர அல்லது எந்த நிறுவனத்தையும் சாரா ஊழியர்களாக இன்று விளங்குகிறார்கள். சங்கம் அமைத்துக் கொண்டு தொழிலாளர்கள் உரிமைகளுக்குப் போராடும் நிலை இல்லை. நகரங்கள் பெருகிவரும் ஏழை நாடுகளிலுள்ள நகரங்களில் இப்போது அப்படி ஆகிவிடுகிறது. அந்நாடுகளில் பொருளாதார நடவடிக்கைகள் பழங்காலத்தவை போன்று இருப்பினும் சில நடவடிக்கைகள் மிகமிக முன்னேறிய வகையில் உள்ளன.

வேலை நிரந்தரம் எனும் கருத்து மாறி, விரும்பிய இடத்தில் வேலை பார்ப்பது என்னும் நிலை வந்ததால், தொழிலாளர் திறமை இப்போது சிறந்து காணப்படுகிறது. சம்பளம் வாங்கிக் கொண்டு நெடுங்காலமாக இருந்துவரும் முறையில் பணியாற்றுபவர்கள் போட்டிகள் வரும்போது தாக்குப் பிடிக்க இயலாதவர்களாக இருக்கிறார்கள். உரிய திறமை உள்ளவர்களை மட்டும் நீடித்து வேலையில் வைத்திருக்க விரும்புகின்றன இன்றைய நிறுமங்கள். நிறைய தற்காலிகத்

**உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நிறுமங்கள் செயற்படும் முறையானது, தொழில்புரட்சிக் காலத்திலிருந்து நிலவிவரும் நிலையான, நம்பகமான பணிக்கோட்பாட்டினை அழித்து வருகிறது.**

தொழிலாளர்களை வைத்துக் கொள்கின்றன அல்லது ஒப்பந்த அடிப்படையில் வேலை கொடுக்கின்றன. தொழிலாளர் தொகுதி என்பது போய் தனிப்பட்ட நபர் தொடர்பு என்று ஆகி வருகிறது. ஒவ்வொருவரும் இன்னொருவருடன் ஒப்பந்த அடிப்படை வைத்துக் கொள்கிறார்கள்.

***இந்தப் போக்கு தொழிலாளர்களுக்கும் நிறுமங்களுக்கும் இடையே அதிகாரச் சம நிலை இல்லாது செய்துவிடும் போலிருக்கிறதே?***


ஆமாம். தொழிலாளர்களுக்குள்ளும் சமநிலை இராது போகும். திறமை வலு உள்ளவர்கள் தங்களுக்கு வேண்டிய ஊதியத்தைப் பேரம் பேசி வாங்க முடியும். இது அவர்களால் நிறுமத்துக்கு விளையும் பயனைப் பொறுத்தது. தனித்திறமை பெறாதவர்கள் பலம் வாய்ந்தவர்களாக இருக்கமாட்டார்கள். தொழிற்சங்கங்கள் கூட்டாகப் பேரம் பேசும் வலுவும் இராது. இன்று தனியார்துறை மேலோங்கி உள்ளது. அங்கே தொழிற்சங்கங்கள் ஆற்றும் பணி மிகவும் குறைவு. தொழிற்சங்கத்தில் உறுப்பினர் ஆவது குறைந்து வருகிறது. இதனால் பாதுகாப்பு வலை சுருங்கி வருகிறது. அப்படி ஆகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. பயனுள்ள பணி ஆற்றும் தனிநபருக்குப் பாதுகாப்பு என்று ஆகிவருகிறது. வேலை செய்தாலும் வேலை செய்யாவிட்டாலும் பாதுகாப்பு இருக்கும் படி செய்ய வேண்டும்.

***நீங்கள் மோசமான சூழ்நிலை இருப்பதாக அல்லவா சொல்கிறீர்கள்?*** ▶

படிப்பகம்

www.padippakam.com





இந்தப்பக்கத்திலும் எதிர்ப்பக்கத்திலும் உள்ள படங்கள், அலுவலகச் சூழலை எந்திரமாக்குவது பற்றிய சுவீடன் ஒளிப்படக் கலைஞர் லார்ஸ் டன்பியோர்க்கின் சிறப்புக் கட்டுரையில் இடம்பெற்றுள்ளவை.

▶ இந்த மாறுதல்கள் சமுதாயத்தில் ஒதுக்கப்படும் நிலையை உண்டாக்கும் என்பது மட்டுமல்ல விளைவு. இம்மாறுதல்கள் பலருக்குப் பயனுள்ளவை. பயன் பெறுபவர்கள் சிறு எண்ணிக்கையினர் அல்ல. ஐக்கிய அமெரிக்கா, ஃபிரான்ஸ் போன்ற நாடுகளில் 30 முதல் 40 விழுக்காடு ஆட்கள் பயன்பெறுபவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்குப் பொருளாதார வசதி மட்டுமல்ல, சமூக, அறிவுசார்ந்த, பண்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடவும் வாய்ப்பு ஏற்படுகிறது. ஒருசிலர் பாதிக்கப்படக்கூடுமென்றாலும், தொழில் நுட்பப் புரட்சி, ஆக்கபூர்வமான அம்சங்களையும் பழைய தளைகளிலிருந்து விடுதலை அளிக்கும் அம்சங்களையும் கொண்டதாக இருக்கிறது. எனவே அதைப் புறக்கணிக்கக் கூடாது.

**நலன் விளைக்கும் அம்சங்கள் பற்றிச் சொல்லுங்களேன்?**

இணையம் வந்தபின் அரசாங்கங்களின் அதிகாரம் குறைகிறது. பத்திரிகை போன்ற தகவல் சாதனத்துறையில் ஏகபோக உரிமை உள்ளவர்கள் மக்களைக் கட்டுப்படுத்திச் செல்வது குறையும். எல்லாம் வெளிப்படையாகச் சொல்லப்படும். அரசியல்துறை ஊழல் பொறுத்து வெட்ட வெளிச்சமாகத் தெரிவிக்க முடியும். அதிகாரமுள்ளவர்கள் சாதாரணக் குடிமகனை உளவு பார்ப்பது முந்தைய நிலை. இப்போது சாதாரணக் குடிமகன் அதிகாரத்திலுள்ளவர்களை உளவு பார்க்க முடியும். வேலை செய்வதில் அதிக சுதந்திரம் இருக்கும். தேர்தொழிலில் பலவகை முன்னேற்றங்கள் காணமுடியும். ஒரே அதிகாரவர்க்கத்தின் கீழ் ஒட்டிக் கொண்டிருக்கவேண்டிய அவசியமிராது. முதுநிலை எய்துவது பொறுத்துத்தான் முன்னேற்றம், பதவி உயர்வு என்ற நிலை இராது. பெண்கள் கல்வி பெறுவது மிக உயர்ந்த அளவுக்குப் போகிறது. உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவில் பட்டப்படிப்பு படித்தவர்களில் பெரும்பாலோர் பெண்கள். அவர்கள் தேர் தொழில்களில் முன்னேறி வருகிறார்கள். பெண் என்று வேற்றுமை பாராட்டுவது இருந்தாலும், அது குறைந்து வருகிறது. வீட்டிலே முடங்கிக் கிடப்பதை விடப் பெண்கள் வெளியே பணி ஆற்றுவது
தேர் தொழில்புரிவது எவ்வளவோ மேல்.

**தகவல் தொடர்பு வசதிமிக்க சமுதாயம் தனக்கு எதிர்ப்பை தானே வளர்த்துக் கொள்கிறது என்று உங்களுடைய நூலில் கூறப்பட்டிருக்கிறதே, அது எப்படி?**

இன்றைய அரசு தன் மக்களை அடை
யாளம் காட்டும் அடிப்படை அம்சங்களை
ஒதுக்கிவிட்டு அமைக்கப்படுகிறது. அர
தான் தேசிய இனத்தை உருவாக்குகிறது
குடியுரிமை என்று ஒன்று உண்டாக்
தேசியம் எனும் புதிய கருத்தையும் ஆதியி
இருந்த அடிப்படை அம்சங்களையு
ஒன்றாக இணைக்க வழி செய்கிறது. அர
அதன் குடிமக்களுக்குப் பாதுகாப்பா
இருக்கிறது. ஆனால் உலகமயமாக்க
என்றால் அத்தகைய பாதுகாப்பு அளிப்பை
அரசு உத்தரவாதம் செய்ய முடியா
போகும் என்றும் குடியுரிமையை நிலை
நிறுத்த முடியாது போகுமென்றும் பொருள்

தகவல் தொடர்பு வசதி மிக்க சமுதாய
போட்டிக்கு முக்கிய இடம் கொடுக்கும்
வலுவானவர்கள், பணபலம் உள்ளவர்க
போட்டியினால் பயன் பெறுவார்கள்
தனக்கென்று தனிப்பட்ட வகையிலா
அடையாள அம்சங்களை உருவாக்கி
கொள்ள நேரிடும். அவர்கள் நிறைய
சம்பாதிக்கவும் நிறைய செலவு செய்யவு
முடியும். அவர்கள் தனி இனமாகப் போவா
கள். தொழில் நுட்பத்திலும் பொருளாதார
திலும் மேம்பாடுடையவர்கள் ஓர் இனமா
ஆகிவிடுவார்கள்.

## நினைவுச் சின்னமான பணி

மானுவல் காஸ்டெல்ஸ், தகவல் தொழில் நுட்பம் உலகப் பொருளாதாரம் பற்றி தலைசிறந்த நூலை எழுதியுள்ளார். அதன் பெயர் 'தகவல் ஊழி: பொருள்தாரம், சமுதாயம், பண்பாடு'[1] இது உலகெங்கும் கவனத்தைக் கவர்ந்துள்ளது. இந்தக் கலைக்களஞ்சிய நூலை, திறனாய்வாளர்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளார்கள்.

காஸ்டெல்சின் நோக்கம் மகத்தானதாகத் தோன்றியது. 'நமது உலகை முழுமையாகப் புரிந்து கொள்ள விரும்புகிறேன். இன்று நமக்குப் பயங்கரக் குழப்பங்களாகத் தோன்றுவனவற்றுக்குப் பொருள் கற்பிக்க விரும்புகிறேன் என்கிறார் அவர். 'சென்ற 25 ஆண்டுகளில், ஒரு தொழில் நுட்பப் புரட்சி - தகவல் தொழில் நுட்பப் புரட்சி - ஏற்பட்டு, நமது சிந்தனை, நுகர்வு, வாங்குதல் - விற்றல், வாணிகங்களை நடத்துதல், செய்தித் தொடர்பு, வாழ்வு, சாவு, போரிடுதல், காதல் புரிதல் ஆகிய அனைத்தையும் உருமாற்றி விட்டது.

ஒவ்வொன்றும் 300 பக்கங்கள் கொண்ட மூன்று தொகுதிகளில், இந்தச் செய்முறைகள் எவ்வாறு, ஏன் நடைமுறைக்கு வந்தன என்பதை அவர் விளக்கியுள்ளார். உலகெங்கும் சென்று பல்வேறு துறைகளில் 12 ஆண்டுகள் ஆராய்ச்சி செய்து இந்நூலை எழுதியிருக்கிறார். 'தொழில் சமுதாயத்தின் கட்டமைப்பு - அதன் பொருளாதாரங்கள், அரசியல் அலகுகள், தொழில் வளாகங்கள், பண்பாட்டுத் தற்பண்புகள் எப்போதும் மையப் புள்ளிகளைச் சுற்றிச் சுழன்றது. ஆனால், இவை தகவல் சமுதாயத்தில் இன்று மறைந்து வருகின்றன என்று அவ்ர் கூறுகிறார். 'பாய்ச்சலின் ஆற்றல், ஆற்றலின் பாய்ச்சலின் மூழ்கடித்து விடுகிறது.

இத்தகைய உருவத் தகர்ப்பு, வழக்கு மீறிய அறிவுப் பயணத்தின் விளைவாகும். 1920இல் 20 வயது காஸ்டெல்ஸ், 'மார்க்சிச நிழலாக இருந்தார்; 'லெனினிசவாதியாக இல்லை; பெருமளவில் ஆட்சி வேண்டாதவராகவும், ஊழிவினை எதிர்ப்பாளராகவும் விளங்கினார். தாய்நாடு ஸ்பெயினிலிருந்து படிப்பதற்காக ஃபிரான்ஸ் சென்றார். ஃபிரான்சிலிருந்து 1968 மே மாதம் வெளியேற்றப்பட்டார். ஆனால், ஈராண்டுகளுக்குப் பிறகு மீண்டும் ஃபிரான்ஸ் திரும்பி வந்தார்.

தற்செயலாக, நகர்ப்புறச் சமூகவியல் அவரைக் கவர்ந்தது. இத்துறையில் தலைசிறந்த வல்லுநர்களில் ஒருவரானார். இவருடைய 'நகர்ப்புறச் சிக்கல் (1972) என்ற நூல் 10 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது. நகரமும் ஆணிவேர்களும் என்ற நூலுக்கு, 1983இல் அமெரிக்காவில் வெளியான சிறந்த சமூக அறிவியல் நூலுக்கான ரைட் மில்ஸ் விருது கிடைத்தது. இன்று இவர் பெர்க்கிலியிலுள்ள கலிபோர்னியாப் பல்கலைக் கழகத்தின் மேற்கு ஐரோப்பிய ஆய்வியல் மையத்தில் சமூகவியல், நகர மற்றும் மண்டலத் திட்டமிடல் துறைப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார்.

நட்புக்கு இனியவர்; பேச்சில் வல்லவர்; நகைச்சுவையுணர்வு மிக்கவர். காஸ்டெல்ஸ் குருவாகச் செயற்பட மறுக்கிறார். எனது பணிக்கு வரம்பு உண்டு. நாம் என்ன செய்ய வேண்டும் என்ற கேள்விக்கு விடைகூற ஓர் அறிவாளி முயலும் போதெல்லாம் அது ஒரு பேரழிவுக்குத்தான் வழிவகுக்கிறது என்று அவர் கூறுகிறார். ■

1. இந்த மூன்று தொகுதிகள் : இணையச் சமுதாயத்தின் எழுச்சி (1996); 'தற்பண்பின் வல்லமை (1997); நூற்றாண்டின் முடிவு (1998)



படிப்பகம்

www.padippakam.com



அதே சமயம் அம்மாதிரி ஆக முடியாத ர்கள் தகவல் வசதிகளைப் புறக்கணிப் வர்கள் ஆவார்கள். தங்களை தனி இனமாகக் காட்ட காரணங்கள் கூறுவார்கள். ண்பாட்டு ஒற்றுமை, கடவுள் நம்பிக்கை, டும்பப் பரம்பரைக் காரணம், வசிக்கு டம் இப்படி எதையாவது சொல்லி ங்களைத் தனி இனமாகக் காட்டுவார்கள். இவ்வாறு சொல்லிக் கொள்வது தங்க ருக்குப் பாதுகாப்பானது என்று கருதுவார் ள். உலகளாவிய அளவில் ஏற்படும் மாற்றத்தில் தாங்கள் இணைய முடியாததால் ங்களுக்குத் தனிவகைப் பாதுகாப்பு தேடிக் கொள்வார்கள். இங்ஙனம் இருவகையினர் தோன்ற நேரிடும்.

**ஒன்றையொன்று தட்டாமல் தனித்தனி வகையாக ஆகும் போலிருக்கிறதே?**

தங்களைத் தனிவகையாகக் கொள் வதையே ஒவ்வொரு வகையினரும் விரும்பு வார்கள். மற்ற வகையினரை ஒட்டாமல் பிடிவாதமாக இருக்கவும் கூடும். இப்படிப் பட்ட நிலை உருவாவதைத் தடுக்க தனித் தனிவகையினருக்கிடையே இணைப்புப் பாலம் அமைப்பது அவசியம். இதற்கு அரசியல் ஒப்பந்தம் மட்டுமின்றி, பண்பாட்டு ஒப்பந்தமும் உண்டாக்க முனைய வேண்டும். அப்படி ஓர் இணைப்பு ஏற்பட்டால் அரசு அந்தந்த வகையினரின் தனித்தன்மையை ஏற்று, இருவகையினரும் இருந்துவருவதை அனுமதிக்கும். ஆனால் அரசு அமைந்த வரலாற்றைப் பார்ப்போமா னால் இது எவ்வளவு தூரம் சாத்தியம் என்று சொல்ல முடியாது.

**இணையப் படுத்தப்பட்ட சமுதாயங்கள் அனைத்தும், அடிப்படையில் தனித்தன்மை வாய்ந்தவை. ஆதிக்கம் செலுத்தும் தொழில் நுட்ப மற்றும் பொருளாதார மேட்டுக் குடியினரின் தாராள மற்றும் உருவத் தகர்ப்புக் கோட்பாடு அது.**


***இவ்வாறு துண்டுபட்டுத் தனிப்பட்டுப் போக நேரிடுவதால் எப்படி எல்லோரும் பங்குகொண்டு செயல்பட்டு, உலகளாவிய அரசியல் நடவடிக்கை மேற்கொள்ள இயலும்?***

இது ஒரு முக்கியமான கேள்வி. இதற்கு என்னிடம் விடை கிடையாது. நான் கவனித்து வந்ததிலிருந்து எனக்குத் தோன்றிய கருத்தைச் சொன்னேன். இப்படி நடக்கும் என்று சோதிடம் கூறுவதாகாது. இணைவன அமைப்பின் பிடியை எதிர்த்துக் குரல்கள் எழும் என்பது என் கருத்து. சில இணைவன அமைப்புகள் தனி அதிகாரம் படைத்தவையாக அமைந்து விடுகின்றன.

இதற்கு ஒரு நல்ல உதாரணமாக உலக நிதிச் சந்தையைக் குறிப்பிடலாம். அது எல்லாவற்றையும் கட்டுப்பாடு செய்யும் அதிகாரம் கொண்டது. ஆனால் அதைக் கட்டுப்படுத்த யாருமில்லை. அரசாங்கங்கள் கூட கட்டுப்படுத்த முடியாது. அது பல இடங்களிலிருந்தும் பணம் பெற்று மொத்த மாக வைத்துக் கொள்கிறது. கணினி மின்சாரம் இவற்றின் துணை கொண்டு அது செயல்படுகிறது. வலு அதிகமாக உள்ளவர் கள் தேவையானதைப் பெற்றுக் கொள்கிறார் கள். சில உபாயங்களைக் கையாளுகிறார் கள். யாரும் அவைபற்றிக் கேட்க முடியாது. இவ்வாறு தனிஅதிகாரம் அமைந்து விடுகிறது.

**அரசியல் என்ன ஆகிறது.**

இன்று அரசியல் கருத்து உருவாவதற்கு காரணமாக இருப்பவை பத்திரிகை, தொலைக்காட்சி, இணையம் போன்றவை. இணையத்தின் பங்கு சற்று அதிகம். அரசியலார்கள் இந்தச் சாதனங்களைப் பயன்படுத்துகிறார்கள். தவிர அரசியல் பற்றி ▶



© மாசல் டண்டிபோர்க்/ஏஜென்ஸிவு பாரிஸ்

படிப்பகம்

www.padippakam.com



விவாதிக்கும் குழுக்களும் தொழில்வகை நிறுவனங்களும் கருத்துகளை உருவாக்கு கின்றன. ஆனால் இறுதி முடிவு மக்களுடைய தாக இருக்கிறது. பத்திரிகைகள், தொலைக் காட்சிகள், மற்ற குழுக்கள் ஆகியவற்றின் கருத்தோடு தொடர்பு இல்லாத வகையில் முடிவு அமையலாம். எல்லாவற்றின் கருத்து களையும் உள்வாங்கிக் கொண்டு தன் சொந்த மன இயக்கத்தில் முடிவு உண்டாகிறது. இதை யாரும் கட்டுப்படுத்த முடியாது.

**எப்படி சொந்த முடிவு செய்யப்படுகிறது?**

மக்கள் முடிவு செய்வதில் இரண்டு அம்சங்களைப் பார்க்கிறேன். முதலாவது, தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் வாக்கு அளிக்கிறார்கள். தேர்தலின்போது மாற்றங்கள் ஏற்படுவதை நிர்ணயிக்கிறவர் கள் 5 முதல் 10 விழுக்காடு வாக்காளர்கள் தாம். அம்மாதிரிச் செய்வதும் முந்தைய நிகழ்ச்சிக்கு அல்லது தீர்மானத்துக்கு எதிர்ப்புக் காட்டும் வகையில்தான். எதிர் காலக் கொள்கைக்கு ஆதரவு அளிக்கும் விதத்தில் வாக்குகள் போடப்படுவதில்லை. அரசியலில் தற்காப்பு வேண்டி குடிமக்கள் எதிர்ப்புவகை வாக்கு அளிக்கிறார்கள் என்று கூறலாம். இரண்டாவதாக, வேட்பாளரின் ஒழுக்கம் நாணயம் போன்றவற்றை மக்கள் எடை போடுகிறார்கள் என்று சொல்லலாம். ஊழல் பேர்வழி என்றோ, ஆடம்பரச் செல வாளி என்றோ, திறமையற்றவர் என்றோ வேட்பாளரை மதிக்கிறார்கள். இப்படிப் பட்ட வேட்பாளர்கள் வருவதால், அரசிய லால் தங்கள் வாழ்க்கை மாறும் அல்லது முன்னேறும் என்று மக்கள் நம்புவதில்லை.

**வாழ்க்கை மாற விரும்புகிறவர்கள் பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

மக்களின் எதிர்பார்ப்புகளையும் தேவை களையும் நிறைவேற்றும் அரசியல் திட்டத்தை அரசு செயல்படுத்தும் என்று எண்ணுவர் நம் தலைமுறையினர். ஆனால் இன்று நிதிநிலை காரணமாகவும் எது செய்தாலும் கண் கொத்திப் பாம்பாகப் பார்க்கும் செய்தியிதழ், தொலைக்காட்சி போன்ற தகவல் தொடர்பு அமைப்புகள் காரணமாகவும் அரசு எதையும் வேண்டிய முறையில் செய்ய முடியவில்லை. மாற்றம் செய்யப்படுவதை விரும்பும் மக்கள் சிறு பரப்பளவில் குறிப்பிட்ட காலத்துக்குள் குறிப்பிட்ட அளவுக்குள் செய்யபட்டும் என்று புதிய அணுகுமுறையைக் கைக்கொள்கிறார் கள். சிறு அளவில் சிறு பரப்பில் மாற்றம் செய்யப்படுகிறதென்றாலும் பயனுள்ளதாக இருக்கிறது. உடனடியாகப் பலன் கிடைப் பதற்கு இதுதான் நடைமுறையில் சிறந்த கொள்கை. அரசு சாரா அமைவனங்களான உலக மருத்துவர்கள் அமைவனமும் ஜுபிலி 2000 எனும் அமைவனமும் ஏழைநாடுகளில் கடன் சுமை நீங்கப் பாடுபட்டதில் வெற்றி விளைந்ததை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

**இப்படி துண்டு துண்டாகச் செயல்படும் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டால் பெரிய பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் போகலாமல்லவா?**

நூற்றுக்கணக்கான அல்லது சில ஆயிரக் கணக்கான மக்களைப் பொறுத்து சிறுசிறு அளவில் செய்யப்படுபவை படிப்படியாக ஒன்று சேர்ந்து பெரிய அளவில் செயல்படக் கூடியவையாக ஆகிவிடும் என்று உறுதி யாகச் சொல்கிறேன் என்றாலும் சில அடிப்படைப் போக்குகள் தலைகாட்டுவது காணப்படுகிறது. பெண்கள் இயக்கத்தைப் பாருங்கள். அரசியல் முறையைக் கைக் கொள்ளாமல் பெரிய பண்பாட்டுப் புரட்சி செய்துவிட்டது பெண்கள் இயக்கம். பின்னர், பண்பாட்டு பழக்கவழக்கங்களி லும் விதிமுறைகளிலும் விரும்புகிற மாறு தல்கள் மிக முக்கியமானவை என்று கருதி அரசியலார் செயல்படுத்த முன் வருகிறார் கள். இங்ஙனம் வெற்றி ஏற்படுகிறது. ■

நேர்முகம்: ரெனே லெஃபோர்ட்
"யுனெஸ்கோ கூரியர்" இயக்குநர்



படிப்பகம்

www.padippakam.com

(பதினைந்தாம் பக்கம் தொடர்ச்சி)

இருக்க வேண்டும் என்றும், யெல்லோ ஸ்டோன் தேசியப் பூங்காவில் தங்கச் சுரங்கம் தோண்டுவதை ஆபத்துக்குள்ளான இடம் என்று அறிவித்துத் தடை செய்யப் பட்டது ஓர் உதாரணம் என்றும் குறிப்பிடப் பட்டது.

என்றாலும், யுனெஸ்கோ குழுவும் சம்பந்தப்பட்ட நாடும் சேர்ந்து பரம்பரைச் சொத்தை நிர்வகிப்பதுதான் சரி என்னும் கருத்துக்கு ஆதரவு அதிகம். உலகெங்கு முள்ள அரசு சாரா அமைவனங்கள், அரசியல்வாதிகள், சாதாரணக் குடிமக்கள் காக்காடைக் காப்பாற்றும் போராட்டத் திற்கு ஆதரவு அளித்தனர். "இது மாதிரி முன்பு பார்த்ததில்லை. உலக பரம்பரைச் சொத்து சம்பந்தமாக ஈடுபாடுடைய எல்லோருக்கும் காக்காடு பற்றித் தெரி கிறது" என்று கூறினார் யுனெஸ்கோ உலகப் பரம்பரைச் சொத்து மையத்திலுள்ள சாரா டிச்சன்.

காக்காடு போராட்டம் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. மிர்ரார் மக்கள் தங்கள் நிலப்பரப்பில் 15 கி.மீ. சாலை போடுவதை சட்ட முறையில் எதிர்க்கிறார்கள். ஜபிலுகாவில் யுரேனியம் எடுத்து அதை ரேஞ்சர் சுரங்க இடத்துக் கொண்டு செல்ல சாலை அமைப்பதால் எதிர்ப்பு எழுந்துள்ளது. மிர்ரார் மக்கள் எதிர்ப்பை விலக்கிக் கொள்ளாவிட்டால் 2006இல் காக்காடைக் கைவிட்டுச் செல்வ தாக இரா நிறுமம் தெரிவித்துள்ளது. வானவில் அரவம் வந்து சொல்ல வேண்டு மென்று இரா நிறுமம் இருக்கலாமா?

(பதினெட்டாம் பக்கம் தொடர்ச்சி)

அறிந்து கொள்ள முயலவில்லை என்பதை உணர வைக்கிறது. ஊட்டச் சத்து பற்றி ஏற்கனவே பெண்களுக்குத் தெரிந்திருக்க லாம். கோழி வளர்ப்பில் திறமை இருக்க லாம். கூட்டங்களுக்கு நிகழ்ச்சி நிரல் தயாரிப்பதற்கும் கணக்கு எழுதுவதற்கும் அவர்கள் கற்றுக் கொள்ள விரும்பாம லிருக்கலாம். அருதாரிப் பெண் ஒருத்தி தான் ஒரு தாழ்ந்த சாதிப் பெண்ணாக இருப்பது பற்றி உணர்ச்சி களைக் கொட்டிக் கட்டுரை எழுதியுள்ளாள். அது எழுதியது பெண் மேம்பாடு அடைந்ததைக் காட்டு வதாகச் சொல்ல முடியுமா? சமய நூல்களைப் படிக்க இயன்றது என்று புதி தாக எழுத்தறிவு பெற்ற பெண் சொல்வது அவள் மேம்பாடு அடைந்ததைக் காட்டு கிறது என்று கூற முடியுமா? மரபு முறைக் கிராமப் பள்ளிகளின் கல்விப் பாங்கினைப் பெண்கள் அப்படியே காப்பி அடிக்க விரும்புகிறார்கள் என்றால் அதை ஏன் உதவி முகன்மைகள் ஆதரிக்க வேண்டும்?

**தன்னம்பிக்கை**

நேபாளிய வகுப்புகளில் காணப்படும் நிலைமை, பெண்கள் தாம் விரும்பும் வகையில் எழுத்தறிவு பெறவில்லையென் றால், படிப்பதினின்றும் விலகி விடுவார் கள் அல்லது தங்களுக்கு எது வேண்டும் என்பதை எடுத்துச் சொல்வார்கள் என் பதைக் காட்டுகிறது. பெண்களே தங் களுக்கு என்ன தேவை என்பதைத் தீர் மானிப்பதற்கு உதவி முகன்மைகள் உதவ லாம். இதற்காகப் பெண்களின் தேவை என்ன என்பதைப் பற்றி முதலில் ஆராய வேண்டும்.

உலகம் பூராவிலும் எழுத்தறிவில்லாத பெண் இப்படியிருப்பாள் என்று வைத்துக் கொண்டு பாடத் திட்டம் அமைக்கக் கூடாது. ஆங்காங்குள்ள பெண்களின் அக்கறைகள், ஆங்காங்குள்ள நிலைமைகள் ஆகியவற்றை அறிந்து பாடத் திட்டம் வகுக்க வேண்டும். குடும்பக் கட்டுப்பாடு பற்றிப் போதிப்பது பெண்கள் தங்கள் பிரச்சினைகளைத் தாங்களே அலசி முடிவெடுக்கும் ஆற்றலை வளர்ப்பதாக இருத்தல் வேண்டும். பெண்களுக்கு இன்று என்ன தேவை என்பதைக் கவனித்துக் கல்வித் திட்டம் வகுக்க வேண்டும். பெண் களும் பங்கு கொள்ளும் வகையில் திட்ட மிருக்க வேண்டும். இம்மாதிரித் திட்டத் தினால் விளையும் முன்னேற்றத்தை மதிப் பிடுவது கடினம். சேமிப்புக் குழு அமைப் பதும் சுகாதாரம் பற்றிய கேள்விகளுக்குப் பதில் சொல்வதும் முன்னேற்றங்கள் என்று இப்போது கருதப்பட்டு வருகிறது. பெண் களுக்கு என்ன தேவை என்று அறிந்து கல்வித் திட்டம் அமைத்தால் பெண் தன்னம்பிக்கையுடையவளாக ஆவ்தும் சமுதாய உறவுகளில் மாறுதல்கள் உண்டா வதும் காணலாம். விளையும் நற்பலன்கள் நெடுங்காலம் நீடித்திருக்கும். பெண் வாழ்க்கையின் தரம் உயரும்.

(முப்பத்திமூன்றாம் பக்கம் தொடர்ச்சி)

ஏழாவது வயதில் தடுப்புக் கல்வியை ஆரம்பிப்பது சரியானதாகும் என்று வல்லுநர்கள் கருதுகிறார்கள். அந்த வயதினர் எதையும் தயங்காமல் பேசிவிடக் கூடியவர்கள். மற்றவர் களிடமும் கூசாமல் தாங்கள் கற்றதைச் சொல்லக் கூடியவர்கள். தடுப்புக் கல்வியை உயர்நிலைப் பள்ளி மட்டத்தில் தொடங்குவது தாமதமாகச் செய்யும் காரியமாகும். வளர்முக நாடுகளில் பலர் ஐந்து வருடம் படித்ததும் பள்ளியை விட்டு விலகிவிடுகிறார்கள். ஆகவே பள்ளிக்கு வெளியே யும் தடுப்புப் பற்றி சொல்லித்தர வேண்டும்.

ஆக, செய்ய வேண்டியது எவ்வளவோ இருக்கிறது. மக்கள் பிரச்சினையைப் பற்றி இப்போது தெளிவாக அறிந்து கொண்டி ருக்கிறார்கள். இருபது ஆண்டுகள் ஒன்றும் செய்யப்படாமலிருந்தது. இப்போதுதான் வகுப்பறைகளுக்கு எய்ட்ஸ் பிரச்சினை போயிருக்கிறது.

(முப்பத்திநான்காம் பக்கம் தொடர்ச்சி)

இவ்வாறு பல்வேறு அறிவியல் நுணுக் கங்கள் சொல்லிக் கொடுக்கப்பட்டன. அதன்பின் நோய் வராமல் தடுப்பது எப்படி என்று விளக்கப்பட்டது.

இவ்வாறு பல்வேறு அறிவியல் நுணுக்கங்கள் சொல்லிக்கொடுக்கப்பட்டன. அதன்பின் நோய் வராமல் தடுப்பது எப்படி என்று விளக்கப் பட்டது. தான்சானியா பல்கலைக்கழகத்து உளவியல் பேராசிரி யரும் கத்தோலிக்க சமயப் பணியாள ருமான பெர்னார்ட் ஜாய்னெட் எழுதிய நூல் பெரிதும் பயன்படுத்தப்பட்டது. பிரள யத்தில் மூழ்காதிருக்க மூன்று தோணிகள் ஒழுக்கம், கற்பு, ஆணுறை என்பவற்றில் ஏதாவது ஒன்றில் ஏறிக் கொள்ள வேண்டும் என்று எடுத்துச் சொல்லப்பட்டது.

பயிற்சிக்குப்பின் ஆசிரியர்கள் தங்களு டைய அறிவியல் பாட அறிவை வளர்த்துக் கொள்வது அவசியம் என்று உணர்ந்தனர். அதுமட்டும் போதாது. பாலியல் பற்றிப் பலவகையான கேள்விகள் கேட்கிறார்கள். தங்களுக்குப் பதில் சொல்லத் தெரியாம லிருக்கிறது என்று ஆசிரியர்கள் குறிப் பிட்டார்கள். எனவே, அச்சமோ கூச்சமோ இன்றி எய்ட்ஸ் பற்றி வகுப்புகள் நடத்து வதற்குத் தக்க பயிற்சி பெற்றார்கள் ஆசிரி யர்கள்.

(முப்பத்திஒன்றாம் பக்கம் தொடர்ச்சி)

பொருளாதார நெருக்கடியால் எய்ட்ஸ் தொற்று நோய் பொறுத்து என்ன விளைவு ஏற்பட்டது என்று தெளிவாகச் சொல்ல முடியவில்லை. பாட்பாங்கு, பாட்டயா ஆகிய இடங்களில் உள்ள விலைமகளிர் புதிதாக வேலை இல்லாதவர்களாக இல்லங்களில் பணிபுரியச் செல்வார்களா? வாழ்க்கைத்தரம் குறைந்ததால் பாலியல் தொழி லாளிகளுக்கு வாடிக்கையாளர்கள் குறையுமா? ஒன்று நிச்சயமாகத் தெரிகிறது. நகரங்களில் வேலை இல்லாமல் போய் கிராமப் புறங்களுக்குத் திரும்பும் ஆயிரக்கணக்கானவர்கள் தாய்லாந்தின் வடக்கு மற்றும் வடகிழக்குப் பகுதிகளில் பாலியல் சுகாதாரப் பிரச்சினையை ஏற்கனவே உண்டாக்கத் தொடங்கிவிட் டார்கள். இவ்வாறு நல்ல வெற்றி வந்தும் பின்னடைவு காணப்படுகிறது.

(முப்பத்திஐந்தாம் பக்கம்)

இப்போதுள்ள பிரச்சினை நிதி. யுனி செப் அமைவனம் 35,000 டாலர் தொடக் கத்தில் கொடுத்துள்ளது. பெற்றோர்கள் மதரஸா ஆசிரியருக்கு ஒருநாள் பாடநேரத் துக்கு 100 உகண்டா ஷில்லிங் (சுமார் 10 சென்ட்) கொடுக்கும்படி கேட்டுக் கொள் ளப்பட்டனர். பெற்றோர்கள் அந்தக் கல்வித் திட்டத்திற்கு ஆதரவு அளிப்பதாகத் தெரிவித்தார்கள். முஸ்லிம் அல்லாதவர்கள் தங்கள் குழந்தைகளை அந்தக் கல்வி பெற மதரஸாவுக்கு அனுப்ப முன்வந்தனர். முஸ்லிம் அல்லாத மாணவர் எண்ணிக்கை வரவர அதிகமாகியது. மாணாக்கர்கள் வகுப்பில் ஒளிவு மறைவின்றி, எய்ட்ஸ் பற்றிப் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கப் பட்டது. "எய்ட்ஸ் நோய் உள்ளவரைப் பார்க்கும்போது அவர் என்ன பாடுபடு கிறார் என்பதை நான் உணர முடிகிறது. அவர் மேல் எனக்குப் பரிவு ஏற்படுகிறது. எய்ட்ஸ் என்ற பேய் இருப்பது உண்மை என்பது எனக்குத் தெளிவாகி விட்டது. இப்போது எய்ட்ஸ் பற்றி நான் அஞ்சு கிறேன்" என்றான் ஒரு மாணவன். எய்ட்ஸ் கல்வித் திட்டம் உகாண்டாவில் உண்மை யான வெற்றி கண்டது என்று கூறலாம்.

தமிழில்: கு.ராஜாராம்

படிப்பகம்

www.padippakam.com

(நாற்பத்திஒன்றாம் பக்கம் தொடர்ச்சி)

பொதுமக்களின் அபிப்பிராயம் இப்போது அமெரிக்காவில் சிறிது மாறுபட்டு வருகிறது. முறைதவறி மரண தண்டனை விதிக்கப்பட்ட சில வழக்குகளில் மரண தண்டனை நிறுத்தி வைக்கப் படவேண்டும் என்பதற்கு மக்கள் ஆதரவு தெரிவித்தார்கள். கொலை செய்யப்பட்டவரின் குடும்பத் திற்கு பணம் கொடுப்பதற்காக கொலை வழக்குகளுக்குச் செலவிடும் பணத்தை ஒரு நிதியாக வைக்கலாம் என்னும் கருத்துக்கும் ஆதரவு கிடைத்தது. டெமக்ராட்டுகள் தேர்தலில் வெற்றி பெற்று பழங் கொள்கைப் பிடிப்பு இல்லாத இருவரை நீதிபதிகளாக நியமித்தால், உச்சநீதி மன்றம் எதிர்ப்பாகச் செயல்படுகிறது.

அன்றும் இன்றும் மரண தண்டனையை எதிர்பார்த்து கைதிகள் காத்திருக்கிறார்கள். “எனக்கு மரண தண்டனை விதிப்பதால் என் உயிருக்கு மதிப்பில்லை என்றாகிறது. திருந்தி மறுவாழ்வு வாழ நான் தகுதியற்ற வன் என்றாகிறது” என்று சொன்னான் இளங் குற்றவாளி ஒருவன். தனிமனிதன் அப்பழுக்கற்றவனாக இருக்க வேண்டும் என்பதில் குறியாக இருக்கும் ஒரு நாடு தண்டனை என்ற பெயரில் எத்தனையோ பேர்களின் உயிரைப் போக்குவது விநோதமாக இருக்கிறது.

---

(தொடர்ச்சி நாற்பத்திநான்காம் பக்கம்)

“எங்குமே எங்கள் தலைமுறையினர் பல பண்பாட்டுக் கலப்புப் பின்னணி கொண்டவர்களாக இருக்கிறார்கள். முக்கியமாக லத்தீன் அமெரிக்காவில் அப்படி இருக்கிறது. வரும் தலைமுறை இதைவிட இன்னும் பல பண்பாடுகள் இணைந்த சூழ்நிலையில் வாழும். எங்களுக்குத் தெரிந்ததை உலகத்துக் கொடுக்கிறோம். அங்கிருந்து பலவற்றை எடுத்துக்கொண்டு பரிமாற்றம் செய்து கொள்கிறோம்” என்று நவாஸ் என்பார் குறிப்பிடுகிறார்.

இம்மாதிரிக் கலவை செய்வதால் எல்லாம் ஒரே படித்தானவையாகத் தோன்ற நேரிடுமா அல்லது படைப்புத் திறன் மழுங்க நேரிடுமா என்ற கேள்வி எழும். அப்படி ஆகாது. மரபு முறையில் செய்யும் போது படைப்பாக்கத் திறன் செயல்படா விட்டால் நிகழ்ச்சி ‘சப்’பென்று இருப்பதோடு மேலும் வளர்ச்சியுறத் தக்கதாயிராது. மற்ற கலைத்துறைகளில் போல நாட்டியத் துறையிலும் ஒரு நாட்டின் மரபுகளை வேறு நாட்டிற்குக் கொண்டு போய் இந்த நாற்றை அந்த வயலில் அப்படியே நடுவதுபோல் செய்வது சிறப்பாக இராது. தன் இனத்தின் பெருமையை மற்ற வருக்குக் காட்ட வேண்டும் என்று ஆவல் கொண்டவர்கள் அதை ஊக்குவிக்கலாம். நவீன நடனமுறை படைப்புச் சிறப்பு கொண்டது. புதியன புகுத்துவதை முக்கியமாகக் கொண்டது என்று கூறுகிறார் சோலா. ■

தமிழில்: கு. ராஜாராம்

---


## யுனெஸ்கோ கூரியர்

25 ஆண்டு

# பொருள் தொகுப்பு

(பொருட்குறிப்பு அட்டவணை)

யுனெஸ்கோ கூரியர் இதழ்களின் உள்ளடக்கத்தை பொருள்வாரியாக, கட்டுரைத் தரைப்புகளோடு இதழ்களின் சாரத்தைத் தரும் கையேடு.

தமிழில் இவ்வகையில் வெளிவந்த முதல் நூல் இதுவேயாகும்.

**தொகுப்பாசிரியர்: மணவை முஸ்தபா**

**பக்கங்கள்: 112**

**விலை ரூ.30/-**

**தொடர்பு கொள்க:**
**தென் மொழிகள் புத்தக நிறுவனம்**
18,மேயர் இராமநாதன் சாலை,
சேத்துப்பட்டு, சென்னை - 31.


---

**Edited and Published by M.Mohammed Mustafa (Manavai Mustafa) on behalf of the Southern Languages Book Trust, 18, Mayor V.R. Ramanathan Road, Chetpet, Chennai - 600 031 and Printed by M.Soudha, at Meera Press, AE 103, Anna Nagar, Chennai - 600 040.**



படிப்பகம்

## Éditions UNESCO


### UNESCO 2000
### Agenda du patrimoine mondial

Les sites du partrimoine mondial au fil de vos semaines.
Sites historiques chargés de mémoire, merveilles de l'art du monde, témoignages du progrés technique, prouesses spectaculaires de la nature et faunes exceptionnelles : a travers les photos et les courts textes synthétiques, une vision d'un monde qu'il nous appartient de protéger,

**Trillingue : anglais/francais/espagnol**
**Cartes des fuseaux horaires**
**Indicatifs télephoniques internationaux**
**58 photos en couleurs**

ISBN : 92-3-003607-2
UNESCO publishing/San Marcos
140 pp., 19 x 26 cm

120 FF / 18.29




## யுனெஸ்கோ பதிப்புகள்

### யுனெஸ்கோ 2000
### உலகப் பாரம்பரிய மேசை நாட்குறிப்பு

உலகப் பாரம்பரியத்தைச் சித்திரிக்கு அற்புதமான ஒளிப்படங்கள்; அவற்றுக்கான சுருக்கமான விளக்கவுரைகள். இவை நமது பொதுவான பண்பாட்டினைப் பாதுகாப்பது தலையாய கடமை என்பதை நினைவுறுத்துவன.

ஆங்கிலம்/ஃபிரெஞ்சு/ஸ்பானியம் ஆகிய மும்மொழிகளில் அன்றாட மற்றும் வார நாட் குறிப்பு. கால மண்டலங்கள்; தொலைபேசிக் குறியீட்டு எண்கள்; 58 வண்ண ஒளிப்படங்கள்.

**EDITIONS UNESCO**
7, Place de fontenoy, 75352 paris 07 SP, France
Fax : +33 1 45 68 57 37
**Internet: www.unesco.org/publication**
**E-mail: publishing.promotion@unesco.org**

## Ediciones UNESCO

### UNESCO 2000
### Agenda del patrimonio Mundial

Con bellas fotografias y comentarios sobre diversos bienes cultutales o naturales del patrimonio mundial, la Agenda 2000 le permitira organizar su tiempo diario y semanal y contribuir al mismo tiempo a la proteccion de la memoria universal unica y diversa.

Trilingue espanol, ingles y frances I Mapa de husos horarios Indivativos telefonicos internacionales I 58 rotografias en colour


---


# யுனெஸ்கோ கூரியர்

## தமிழகமெங்கும் முகவர் (ஏஜெண்டு)கள் தேவை.

### விவரங்களுக்கு எழுதுக :

**யுனெஸ்கோ கூரியர்**
தென் மொழிகள் புத்தக நிறுவனம்
18, மேயர் இராமநாதன் சாலை,
சேத்துப்பட்டு சென்னை - 600 031.

www.padippakam.com

# யுனெஸ்கோ கூரியர்

## அடுத்த இதழில்

Registered with Registrar of Newspapers for India under No. 17705/67
LICENCE NO: TN/MS(N) WPP-III REGD. NO. M.8276/99

**கவனம் :**

**இடைமாறுதற்கால நாடுகள் சட்ட ஆட்சியை உருவாக்குகின்றன.**

- மேலை நாட்டினர் பத்தாண்டு அறிவுரை: தீர்ப்பு என்ன?
- உக்ரேன்: சோவியத் முறையின் மரபுரிமை
- கிர்கிஸ்தான்: அடிமட்டத்திலிருந்து தொடங்குதல்
- பழமைக்கும் புதுமைக்கும் நடுவில்
- தென் ஆஃப்ரிக்கா: மரபுச் சட்டத்திற்கு ஓரிடம் காணல்
- பெனின்: முன்மாதிரி முறை, எனினும் எல்லைக்கோட்டில்
- சட்டச் சீர்திருத்தம்: வென்றவரும் தோற்றவரும்

**சிறப்புக் கட்டுரைகள்:**

- ஜப்பானின் 20 வயதினர்: படங்களுடன் சொல்லோவியம்
- உலகைச் சொடுக்கும் தட்பவெப்ப மாறுதல்கள்
- நுகர்வோர்-தொழிலாளர்க்கு நடத்தை நெறிகள்
- இணையம்-தொலைக்காட்சி ஒருங்கிணைப்பு
- பொறுப்பான ஐயுறவாளர்: இத்தாலிய எழுத்தாளர் அன்டோனியோ டாபுச்சி நேர்முகம்

இணையத்தில் யுனெஸ்கோ கூரியர்
**www.unesco.org/courier**

படிப்பகம்